
கல்கி
KALKI
5.4.1970
40 காசு



கிண்ணம் நிறையக் களிப்பினையே பருகிப் பார்த்த துண்டோ?



FANTA IS A REGISTERED TRADE MARK OF THE COCA-COLA COMPANY

ஃபண்டா ஆரஞ்சு
சுவை இனிதே...
பருகிடவே
எடுக்காதோ தாகம்.

ஃபண்டா, கோகா-கோலா
கம்பெனியின் தயாரிப்பு

CHCF-5-1.


வருக! வருக!!
16 வது
அகில இந்திய
கைத்தறி
கண்காட்சிக்கு
வருகை தருக
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி துணிகள்.
தரமோ தன்னிகரற்றது.
நெசவோ ஒப்புயர்வற்றது.
வண்ணங்களோ
எண்ணிலடங்கா.
மார்ச் 29 முதல்
விசேடத்தள்ளுபடி
10%
எல்லா
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ஆடைகளுக்கும்,
எல்லா கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையங்களிலும்,
பிரதம செசவாளர்
கூட்டுறவு சங்கங்களிலும்
கிடைக்கும்.
தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்
எழும்பூர், சென்னை-8.
போன்: 82121 — 82122
ச. கு. சம்பந்தன், பி.ஏ., எம்.பி. தலைவர்


கல்கி பொருளடக்கம்

சௌமிய, பங்குனி, 23 - 1970, ஏப்ரல் 5

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00


மத்திய அரசுக்கு அதிக அதிகாரங்கள்
"நாம் அவரை இந்நிலைக்கு விரட்டி விட்டோமா, என்ன?"
ராஜ்ய முதன் மந்திரிகள்
நன்றி : 'ஹிந்து'


வங்க மார்க்ஸிஸ்ட் கட்சி
கேரளா மார்க்ஸிஸ்ட் கட்சி
Kali
மாஸ்கோவிலிருந்து திரும்பலாயிற்று?



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 □ இதழ் 36

ஒன்று அருவருப்பானது; மற்றது பேராபத்தானது

மிக முக்கியஸ்தரான அரசியல் தலைவர் ஒருவர் எங்கள் இருவருக்கும் பொதுவான ஒரு நண்பரிடம் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். அந்த விஷயத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் உத்தேசம். கேள்வி கேட்டவரின் பெயரை நான் வெளியிடவில்லை. அவர் மிக முக்கியமானவர். ஆகையால், பெயரை வெளியிடும் பட்சத்தில் பிரச்னை குழம்பிப் போகலாம்.

"ஸ்ரீமதி இந்திராகாந்தி, பேராபத்தை நோக்கி நம் நாட்டை இட்டுச் செல்கிறார் என்பது ராஜாஜியின் கருத்து. ஸ்ரீமதி காந்தியின் ஆட்சிக்குப் பெரிய தொழில் பிரமுகர்கள் மிகக் கணிசமான அளவில் நிதி உதவியளித்து வருகிறார்கள். அப்படியிருக்கையில் கம்யூனிஸ்ட் கட்சியை மட்டும் ராஜாஜி இவ்வளவு எதிர்ப்பானேன்? இந்திராவின் கட்சிக்குப் பொருளுதவி செய்யும் முதலாளிகள், இந்திரா கடைப் பிடிக்கும் கொள்கைகளுக்கு இசைவான கம்யூனிஸ்ட்கள் ஆகிய இருதரப்பினருமே சம அளவில் மோசமானவர்கள். எனவே, இரண்டு தரப்பினரையும் ஒருசேரத்தானே அவர் கண்டிக்க வேண்டும்? பெரிய தொழில் பிரமுகர்களை இலேசாகக் கடிந்து கொண்டு விட்டு, கம்யூனிஸ்டுகளை மட்டும் அவர் ஏன் முனைந்து தாக்க வேண்டும்?" — இதுதான் பிரமுகர் போட்ட கேள்வி.

ஒரு வகையில் பார்த்தால் இது முற்றிலும் நியாயமான குற்றச்சாட்டாகவே தோன்றும். ஆனால், இவ்விரு தரப்புக்குள் எதனால் அதிக அபாயம் விளைகிறது என்பதை மதிப்பிடுகையில், அவற்றிடையே உள்ள வித்தியாசத்தைக் கவனிக்காமல் இருக்க முடியாது. தொழிலதிபர்களில் பெரும்பாலோர் இன்று ஸ்ரீமதி காந்திக்கு நிதி வழங்கி உதவுவது எதற்காக? அவர் பதவியில் இருக்கிறார். தொழில் அதிபர்களின் விவகாரங்கள் சர்க்கார் காட்டுகின்ற தயவுகளைப் பெரிய அளவில் பொறுத்திருக்கின்றன. இதுதான் அவர்களுடைய உதவிக்குக் காரணம். பண மூட்டைகளின் விவகாரங்களில் ஊழல்கள் இருக்கின்றன. தேசபக்த உணர்வுடன்கூட அரசை எதிர்ப்பதற்கு அந்த ஊழல்களே இடையூறுகளாக இருக்கின்றன. ஸ்ரீமதி காந்திக்கும் இந்த ஊழல்களையெல்லாம் சகித்துக் கொண்டிருக்கவேண்டிய தேவை இருந்து வருகிறது; — அவருடைய அரசியல் விவகாரங்கள் அப்பேர்ப்பட்டவை. எனவேதான் இவ்விதமான சர்க்கார் — முதலாளிகள் தொடர்பு உள்ளது.

ஆயினும் இந்திராவின் ஆட்சிக்கு முதலாளிகள் தரும் ஆதரவு நிரந்தரமானதல்ல என்பதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். தற்போது ஆட்சியில் இருக்கின்றவர்களின் ஆதரவு தமக்குத் தேவைப்படுகிறது என்பதாலேயே முதலாளிகள் ஸ்ரீமதி இந்திராவுக்கு உதவி புரிகின்றனர். இந்தச் சர்க்கார் மாறும் பட்சத்தில், தொழில் அதிபர்கள் புது ஆட்சியாளரை அணுகி அவர்களது தயவைச் சம்பாதிக்க முற்படுவர். புது ஆட்சியாளர் யோக்கியப் பொறுப்புடன் நடந்து கொண்டால் பணமூட்டையால் ஆபத்தில்லை.

ஆனால் கம்யூனிஸ்டுகளின் விஷயம் இதற்கு முற்றிலும் மாறுபட்டது. ஸ்ரீமதி இந்திரா காந்தியின் கூட்டாளிகளாக அவர்கள் இருப்பது, உடனடியான தயவுகளை நாடி அல்ல. ஸ்ரீமதி காந்தி பலக்குறைவான நிலைமையில் இருக்கிறார்; அதன் காரணமாக இப்போதே கம்யூனிஸ்டுகள் ஸ்ரீமதி இந்திராவுடன்கூட அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு வருகிறார்கள் என்று சொல்லலாம். அவர்கள் இந்திராவை ஆதரித்துத் தயவு பெற வேண்டியதில்லை. இந்திரா சர்க்கார் மாறினாலும் இந்தியாவின் ஜனநாயகத்துக்குக் கம்யூனிஸ்டுகள் நீடித்து அபா

யம் விளைவிக்கக் கூடியவர்கள். தொழில் அதிபர்கள் விளைவிக்கக் கூடிய அபாயம் அப்பேர்ப்பட்டது அல்ல. கம்யூனிஸ்டுகளின் உள்நாட்டு நடவடிக்கைகளும் அபாயமானவை; அயல் நாட்டுடன் சித்தாந்த ரீதியில் அவர்களுக்கு உள்ள உறவு முறைகளும் அபாயம் விளைவிப்பவை. இந்திய சர்க்காரில் மாறுதல் ஏற்பட்டாலும், இந்த அபாயம் அத்துடன் தீராது.

ஆசியாவில் ஜனநாயகத்துக்கு அபாயம் விளைவிக்கக் கூடிய வகையில் உலக நிலைமை விரைவு பட்டு வருகிறது. ஸ்ரீமதி காந்தியும் கம்யூனிஸ்டுகளும் சாத்தியமற்ற முறையில் கூட்டாளிகளாக இருந்து வரும் நிலைமை இரட்டிப்பு அபாயத்தை விளைவிக்கக் கூடியது.

இந்தியாவில் உள்ள பெரிய தொழில் அதிபர்களிடம் போதிய தேச பக்தி இல்லை; ஆனால் இந்தக் குறை தாற்காலிகமான நிலைமை என்றுதான் தோன்றுகிறது. ஆனால் கம்யூனிஸ்டுகளின் போக்கும், அவர்களது தொடர்பும் நிரந்தரமாகவே அபாயமானவை.

நான் மேலே சொன்னவை யெல்லாம் தொழிலதிபர்களால் தேசத்துக்கு விளைகின்ற தீமைக்கு நியாயம் சொல்வதாகவோ, சப்பைக் கட்டாகவோ ஆகிவிட மாட்டா. எதனால் அதிக அபாயம் விளையும் என்பதை நான் காண்கிறபடி விளக்க முற்பட்டிருக்கிறேன். தொழிலதிபர்கள் தீர்க்கதிருஷ்டியின்றித் தவறான கொள்கைகளைப் பின்பற்றுவானேன்? பயப்படுவானேன்? இவற்றுக்கெல்லாம் மூலகாரணம் அவர்களைப் பெர்மிட் லைசென்சு விதிமுறைகளால் நெருக்கிக் கட்டிப்போட்டிருப்பதுதான். ஆட்சிப் பீடத்தில் உள்ள குழு தனது சரண்டுதலுக்கான வாய்ப்பாக இம்முறையை உபயோகித்து வருகிறது. இம்முறையை நாம் தகர்த்தாக வேண்டும். அப்பொழுது ஸ்ரீமதி இந்திரா காந்தியின் ராஜீய சூழ்ச்சிகள் வெற்றி பெறுவதற்காகத் தமது நிதிகளைத் தொழிலதிபர்கள் கொடுக்கின்ற நிலைமைக்கு முடிவு கண்டுவிட முடியும். கம்யூனிஸ்ட் அபாயமோ முற்றிலும் மாறுபட்ட தன்மை உடையது. அது அடியோடு சமுதாயத்தை அடித்து வீழ்த்திவிடக் கூடியது.

தொழில் வளர்ச்சி தருகின்ற நிறுவனங்களை அஸ்திவாரமாகக் கொள்ளாத சோஷலிசக் கனவு அல்நாஷரின் பகற்கனவைப் போன்றது என்று நம்புகிறவன் நான். லாபம் கிடைக்கும் என்ற உணர்வு அளிக்கும் ஊக்கத்தை அடிப்படையாகக் கொண்டு — தாராளமான போட்டி மனப்பான்மையுடன் கூடிய வளர்ச்சித் திட்டங்கள் உருவாகவேண்டும். கட்சி நலனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டு அமுலாக்கப்படும் பெர்மிட் லைசென்சு ஏகபோகங்கள் இல்லாத — பிரத்யட்ச உணர்வுடன் கூடிய — வளர்ச்சித் திட்டமொன்று வந்தாக வேண்டும் என்று விரும்புகிறவன் நான். நான் அம்மாதிரி நினைப்பது சரியே என்று இக்கட்டுரைத் தொடக்கத்தில் குறிப்பிட்ட கேள்வியைப் போட்டவர் நம்புகிறார். ஆகையால்தான் என் நிலையை விளக்குவது பயனுள்ளதாக இருக்கும் என்று நான் நினைத்தேன். இப்பொழுது காணப்படும் சோஷலிஸ்ட் முயற்சி வெறும் செப்பிடுவித்தை போன்றது. கேள்வி எழுப்பிய நண்பர், உண்மையான சோஷலிஸத்துக்கு ஒத்துழைப்பதில் ஆவல் உள்ளவர். எனவே, அவரது குறைகூறலுக்குப் பதில் சொல்லியாக வேண்டும் என்று நினைத்தேன். தொழிலதிபர்களின் போக்கு அருவருப்பையும், வேதனையையும் தருகிறது. ஆனால் கம்யூனிஸ்டுகளின் போக்கோ பேராபத்தானது. அதை விளக்க இங்கே முயன்றுள்ளேன்.

(''ஸ்வராஜ்யா''வில் ராஜாஜி எழுதியது.)

என்ன சேதி?

மணி ஓய்ந்தது!

பம்பாய்ப் பிரமுகர் ஸ்ரீ மணி அவர்களின் மறைவு பம்பாய்வாழ் தமிழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்.



ஸ்ரீ மணி

ஸ்ரீ மணி அவர்கள் பம்பாய் பஞ்சு வர்த்தகத் தொழிலில் மிக முக்கியமான பிரமுகராக விளங்கினார். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் முன்னணியில் நின்று பம்பாய் நகர வர்த்தகப் பிரமுகர்களின் பெருமதிப்பைப் பெற்றிருந்தார்.

வர்த்தகத் துறையில் ஈடுபட்டிருந்தாலும், பம்பாய் வாழ் தமிழ் மக்களின் சமூக, கலாசார, கல்விப் பணிகளிலும் சென்ற முப்பதாண்டுகளுக்கு மேலாகத் தீவிரப் பங்கு கொண்டு அரும் பணியாற்றினார். பம்பாயில் தென்இந்திய கல்விக்கழகம் ஒரு கல்லூரி தொடங்குவதற்கு ஸ்ரீ மணி முக்கியகாரணஸ்தராவார். பம்பாயில் உள்ள எல்லாச் சமுதாய மக்களும் பெருமையாகப் போற்றி வரும் ஸ்ரீ ஷண்முகானந்த சபாவின் வளர்ச்சியில் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டவர் ஸ்ரீ மணி.

இப்படி எல்லாருக்கும் இனியராக விளங்கிய மணி ஓய்ந்துவிட்டாலும் அதன் ஒலி பம்பாய்வாழ் மக்களின் நினைவில் நீண்ட நெடுங்காலம் கேட்டுக்கொண்டேயிருக்கும்.

மதிப்பிழந்த நாணயம்

கடன் வாங்கும் போது இன்பமாக இருக்கும்; திருப்பிக் கொடுப்பது கஷ்டமாக இருக்கும். அந்தக் கஷ்டத்திலிடையே, கடன் கொடுத்தவர் முதலில் ஒப்புக் கொண்ட நிபந்தனைகளை ஒதுக்கி விட்டுப் புது நிபந்தனைகள் விதித்தால் அது இன்னும் எவ்வளவு கஷ்ட

மாக இருக்கும்? இந்திய சர்க்கார் இந்தச் சங்கடமான நிலையில்தான் இருக்கிறது. இதற்கு ஓர் அழுத்தமான உதாரணம் பார்ப்போம்.

பல ஆண்டுகளுக்கு முன் இந்திய சர்க்கார் யூகோஸ்லேவிய சர்க்காரிடம் கடன் வாங்கியது. கடன் வாங்கியபோது ரூபாய்களாகத் திருப்பிக் கொடுத்தால் போதும் என்று யூகோஸ்லேவிய சர்க்கார் ஒப்பந்தம் செய்து கொண்டது. இப்போது 'உங்கள் ரூபாய் வேண்டாம், பிரிட்டிஷ் ஸ்டர்லிங்காகக் கொடுங்கள்' என்கிறது.

தொடர்ந்து பற்றுக்குறை பட்ஜெட் வெளியிட்டதால் இன்று இந்திய ரூபாயின் மதிப்பு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிகவும் தாழ்ந்துவிட்டது. வெளிதேசத்தார் தாங்கள் ஒப்பந்தம் செய்து கொண்டபோது இருந்த ரூபாயின் மதிப்பைவிட அதன் மதிப்பு இன்று கணிசமாகக் குறைந்து விட்டதால், ரூபாய்களாகத் திரும்பப் பெற மறுக்கிறார்கள். முன்பு செய்து கொண்ட ஒப்பந்தங்களை மறுத்துப் புது நிபந்தனைகளைப் போடுகிறார்கள். வெளிநாடுகளில் நம் நாட்டுக்கும் நாணயத்துக்கும் எப்படி மதிப்பு குறைகிறது என்பதற்கு மற்றும் ஒரு சான்று இது.

ராஜாஜியின் கருத்துக்கள்

காந்தி நூற்றாண்டு கொண்டாடப்பட்ட புனித வருடத்தில், முன்பு தெளிவாகத் தெரிந்திராத பல உண்மைகள் வெளிப்பட்டிருக்கின்றன. நிறைய வோட்டுப் பெறுகிறவர்களே ஆட்சி அதிகாரம் பெறுகிறார்கள் என்பது அரசியல் சாஸனம். ஆனால் நடைமுறையில் ஜனநாயகம் எப்படிச் செயலாகிறது என்று பார்த்தோமாயின் ஆட்சி அதிகாரம் பெறுகிறவர்களே நிறைய வோட்டுப் பெற முடிகிறது எனக் காண்கிறோம். ஜனநாயகத்தின் காரியக்கிரமத்தில் இது போல் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. ஆண்டவன் அருளைப் பிரார்த்தித்து இரு கைகளாலும் தைரியத்தைப் பற்றிக் கொண்டு செயலில் இறங்காவிடில், சுதந்திர வாழ்வுக்கு 'ஆபத்து விரைவிலேயே நிகழ்வதற்குக் காலம் துணை புரிந்துவிடும்.

*

கோயமுத்தூரிலிருந்து ஸ்ரீ ஆர். எஸ். சங்கரய்யர் எழுதியுள்ள கடிதத்தில், மனத்தில் நன்கு பதியும் வகையில் கூறுவதாவது :

''நிறுத்தல் அளவை, முகத்தல் அளவை ஆகியவற்றில் நாடு முழுவதற்கும் பொதுவான அமைப்பு வேண்டும் என விரும்பினோம். அவ்வாறே நமக்கு முற்றிலும் அந்நியமான கிராம், லிட்டர் முதலியவற்றை அநுசரிக்கிறோம். இந்த அடிப்படையிலேயே நோக்கினால், ஆங்கிலத்தைத்தான் நமது கல்விக்கும், தகவல் போக்குவரத்துக்கும், நீதிக்கும், அரசியலுக்கும் பொது மொழியாக ஏற்க வேண்டும். இல்லாவிடில் ஆதியில் இருந்தது போல் இந்தியா 56 ராஜ்யங்களாகப் பிரிந்துவிட வேண்டியதுதான்.

*

தென்னகத்தின் வைஷ்ணவ முனிவரான ஸ்ரீ ராமாநுஜரைப் பற்றி அவரது சித்தாந்தத்தைப் பின்பற்றும் ஆசார சீலர்களிடம் வழங்கும் ஓர் அழகிய கதை வருமாறு:

வைணவ சம்பிரதாயத்தைச் சேர்ந்த இரு சோதரர்கள் இருந்தனர். இவர்களில் மூத்தவர், ஸ்ரீ ராமாநுஜர் விதித்த எல்லா நித்திய கர்மாநுஷ்டானங்களையும் கடைப்பிடித்து. பூஜையும் வழுவாது புரிந்து வந்தார். இளையவரோ நல்லவராயினும் சமய ஆசாரங்களில் ஒழுங்கற்றவர். அவரைப் பற்றி மூத்தவர் நம்பிக்கை இழந்து, 'இவனைச் சீர் திருத்த முடியாது' என்று அடியோடு கைவிட்டு விட்டார்.

ஒரு நாள் அந்தக் குடும்பத்தின் பெருமதிப்புக்கு உகந்த நண்பரொருவர் மூத்த சகோதரரிடம் ஏதோ காரியமாக அவ்வீட்டுக்கு வந்தார். அப்போது இளையவர் தெருவைப் பார்த்த வராந்தா மேடையில் உட்கார்ந்திருந்தார்.

''தமையனாரைப் பார்க்கலாமா?'' என்று விசாரித்தார் வந்தவர்.

''தமையனார் வீட்டில் இல்லை. சக்கிலியர் தெருவுக்குப் போயிருக்கிறார்'' என்றார் இளையவர்.

அவரைக் காண வந்தவர் ஏமாற்றத்துடன் திரும்பி விட்டார்.

உண்மையில் அச்சமயத்தில் மூத்தவர் பகல் போஜனத்துக்குமுன் செய்கின்ற வழக்கப்படி பூஜையைச் செய்து கொண்டிருந்தார்.

சில நிமிடங்களில் அந்தப் பூஜை முடிந்தது.

அவர் வீட்டுக்கு வெளியே வந்தார்.

''ஏன் நான் சக்கிலியர் தெருவுக்குப் போயிருப்பதாகப் பொய் சொன்னாய்?'' என்று தம்பியைக் கடிந்து கொண்டார்.

'' ஏனோ தெரியவில்லை, அவ்விதம் சொல்ல வேண்டுமெனத் தோன்றியது. மன்னித்து விடுங்கள்'' என்றார் தம்பி.

மூத்தவர் ஒரு நிமிடம் தியானம் செய்தார். பிறகு அப்படியே தம்பியின் முன்னால் விழுந்து நமஸ்கரித்தார்.

''நீ தவறுகள் செய்த போதிலும் ஆண்டவனின் அநுக்கிரகத்தைப் பெற்றிருக்கிறாய். அந்த அருள் எனக்கு இன்னமும் கிட்டவில்லை. நான் ஆராதனைக்கிரமப்படி வெளிப்பட எல்லாம் செய்து கொண்டிருந்தது வாஸ்தவம். ஆனால் அப்பொழுது என் மனம் நான் செப்பனிடுவதற்காகத் தந்திருந்த என் செருப்பைக் குறித்தே நினைத்துக் கொண்டிருந்தது. அதனால் தான் நான் சக்கிலியர் தெருவில் இருந்ததாக உன் திவ்விய திருஷ்டியில் பார்த்திருந்திருக்கிறாய்'' என்றார் மூத்தவர். ''என்னை ஆசீர்வதிப்பாயாக! வயதில் நீ என்னைவிடச் சிறியவனாயினும் உன் ஆசி எனக்குத் தேவைப்படுகிறது'' என்றார்.

மஸானி: மனத்தூய்மையின் மறுபெயர்

அரசியல் உலகில் மிக மிக அதிசயம் நேர்மையானவர் என்று பெயர் எடுப்பது தான். பெர்மிட் — லைசென்ஸ் — கோட்டா— ராஜ்யம் நடைபெறும் நம் இந்தியாவில் கேட்கவே வேண்டாம். இப்படிப்பட்ட சூழலில் நேர்மை மிகுந்த தலைவர்களில் முடி மணியாகக் குறிப்பிடக் கூடியவர் சுதந்திரக் கட்சியின் தலைவரான ஸ்ரீ எம். ஆர். மஸானி அவர்கள். மதி நுட்பத்துக்கு மஸானி பெயர் எடுத்திருக்கிறார். மனத் திட்பத்துக்கு மஸானி புகழ் கொண்டிருக்கிறார். இவற்றுக்கு மேல் சீலமான, யோக்கியமான, நல்லடத்தைக்குச் சகலராலும் போற்றப்படும் உத்தமர் அவர்.

பரபரவென்று ஆக்க சக்தியுடன் ஊக்க மாக, உத்வேகமாகச் செயலாற்றி வரும் ஸ்ரீ மஸானி, அறுபது பிராயத்தைக் கடந்து நாலாண்டுகளாகி விட்டன என்றால் நம்புவது சிரமம். இந்தத் துடிப்பிலும் அவரது அறி வின் சம நிலை இம்மி கூடக் குலைவதில்லை. மேற்பரப்பில் சலசல வென்று அலை வரிசை களை வீசிக் கொண்டிருந்தாலும் கடலின் அடிமட்டம் சாந்தி பூத்திருப்பது போல், வெளிக் காரியத்தில் துருதுரு வென இருக்



ராஜாஜி அவர்களுடன் ஸ்ரீ மஸானி கருத்துப் பரி வர்த்தனை. அருகே நிற்றிருப்பவர் ஸ்ரீ முன்ஷி.


கும் மஸானியின் உள்ளறிவு எப்போதும் தெள்ளிய சீர்மையுடனே இலகுவதால்தான் அவரால் வேகத்திலும் விவேகம் தவறாத முடிவுகளைக் காண முடிகிறது. மஸானி அவர்களை எண்ணியவுடன் அவரது தூய நடத்தைக்கு அடுத்தபடியாக இந்த ஆக்க வேகமும் அறிவின் விவேகமுமே மனத்தில் மேவும். இதற்குக் காரணம் அவர் உடலில் பார்ஸி மதத்தின் உண்மையான இடைப்பு தானாகவே ஓடுவதுதான் போலும். பார்ஸி யர்கள் அக்கினியை முழு முதற் கடவுளாக வழிபடுபவர்கள். தூய்மைக்கும், ஆக்க சக்திக்கும், அறிவு விளக்கத்துக்கும் அக்னியே உருவம் அல்லவா?

*　　　*　　　*

வந்தனைக்குரிய பெரும் குடியில் வந்த வர் ஸ்ரீ மினு மஸானி அவர்கள். பம்பாய் சர்வகலாசாலையின் துணைவேந்தர் பதவி உள் ளிட்ட பல பெரும் பொறுப்புக்களை ஆற்றிய ஸர் ருஸ்தம் மஸானியின் புதல்வர் அவர்.

பம்பாயில் பட்டதாரியானபின் இங்கி லாந்து சென்றார் ஸ்ரீ மஸானி. பார்-அட்-லாவாகத் தேர்ச்சி பெற்றார்.

ருஷியாவின் சோஷலிஸப் புரட்சி இளைஞர் உலகைக் கவர்ந்திழுத்த காலம் அது. சோஷ லிஸம் கம்யூனிஸமாக மாறிச் செய்யும் கொடுங்கோன்மை உலகுக்குப் புரியாதிருந்த காலம் அது. பாட்டாளி மக்களின் பாடு



தலைவர் மஸானி அவர்களுக்கு
பாரதரத்னம் ராஜாஜி மாலையிடுகிறார்

களைத் தீர்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்த இளைஞர் மஸானி 1927ல் ருஷியாவுக்குச் சென்றார். அங்கு முதலாளித்துவக் கொடுங் கோன்மை அடியோடு அடக்கப்பட்டு, மக்கள் யாவரும் சமத்துவ நிலை அடைந்து, பரம சுதந்திரம் பெற்று விட்டதாகக் கருதினார்.

தாய்நாடு திரும்பியபின் பம்பாய் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பயிற்சி தொடங் கினார் ஸ்ரீ மஸானி. இத்தொழிலில் அமோக மாக முன்னேறக் கூடிய பெரும் வாய்ப்பு அவ ருக்கு இருந்தது. எனினும், சுதந்திரப் போராட்டம் வழக்கறிஞர் பலரை இழுத் திருந்த காலம் அது. நேர்மையும் நியாய உணர்வும் தோய்ந்த இளைஞர் மஸானியை யும் தேசத்தின் அழைப்பு இழுத்தது. வக்கீல் தொழில் தொடங்கி மூன்றாண்டி லேயே, அது அளித்த சீரையும் சிறப்பையும் உதறி விட்டு, ஒத்துழையாமை இயக்கத் தில் ஈடுபட்டுச் சிறை புகுந்தார்.

நாஸிக்கில் அவர் வைக்கப்பட்டிருந்த அதே சிறையில் ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணர் அவர்களும் சிறைவாசம் செய்தார். அப் போதுதான் அவ்விருவரும் காங்கிரஸ் சோஷ லிஸக் கட்சியை ஸ்தாபிக்கும் எண்ணத்துக்கு வித்திட்டனர். 1934ல் காங்கிரஸ் சோஷ லிஸக் கட்சி நிறுவப்பட்டது.

1935ல் இரண்டாம் முறையாக ருஷியா வுக்குச் சென்றார். இப்போது அவர் அறிவு முதிர்ச்சியுடன் அந்நாட்டு நிலவரத்தைப் புரிந்துகொள்ள முற்பட்டபோது அவருக்குப் பல விஷயங்கள் தெளிவாயின. முன்பு அவர் நினைத்தபடி ருஷிய மக்கள் சமத்துவமும் சுதந்திரமும் பெற்றிருக்கவில்லை எனக் கண்

டார். தனி முதலாளிகளின் கொடுமையைவிடக் கொடூரமான ஏகாதிபத்திய அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் மக்கள் மாக்களாக்கப்படுவதை உணர்ந்தார். தனி முதலாளிகளின் கொடுமையை அரசாங்கத்தின் மூலம் அடக்குவதற்கு வாய்ப்புப் பெற்றிருந்த மக்கள், இப்போது அரசே இழைக்கும் கொடுமைகளுக்கு எவ்விதத்திலும் பரிகாரம் காண முடியாமலிருந்த பரிதாப நிலையை அநுதாபத்துடன் நோக்கினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மஸானி காந்திஜியைச் சந்தித்தார். மோகனதாஸ் காந்தியின் மோகனச் சிரிப்பில் வசமான பலரில் மஸானியும் ஒருவரானார்.


மகாத்மாவின் தொடர்பு மஸானியின் மனத்தில் ஒரு பெரும் திருப்பத்தை உண்டாக்கியது. சோஷலிஸம் என்பது மக்களின் சுதந்திரத்தை அரசாங்கத்திடம் பறிகொடுப்பதிலேயே முடியும் என்று உணர்ந்தார். மக்கள் தம்மிச்சையாக, தர்ம நியாய உணர்வு பெற்று, தாமாகவே சமத்துவ நிலைக்கு வழி வகுக்க முயலவேண்டுமேயன்றி, சர்க்காரின் மூலம் இதற்குத் தீர்வு காண முற்பட்டால், இருப்புச் சட்டியிலிருந்து நெருப்புக் கட்டியில் விழுந்ததாகவே ஆகும் என்று புரிந்து கொண்டார்.

மனச் சத்தியத்தின் மாண்பைப் பெரிதும் மதித்த மஸானி, தாம் புரிந்து கொண்டதைத் தயங்காமல் பகிரங்கமாகக் கூறி வெளிப்படத் தமது போக்கை மாற்றிக் கொண்டார். காங்கிரஸ் சோஷலிஸக் கட்சியானது, கம்யூனிஸ்ட்களின் தொடர்பை நீக்கி, அமைதி வழியிலேயே சோஷலிஸ லட்சியத்துக்குப் பாடுபட வேண்டுமென வற்புறுத்தினார் ஸ்ரீ மஸானி. ஆனால் அப்போது, அதாவது 1939ல், அவரது வாதத்தைக் கட்சியின் மற்ற தலைவர்கள் ஏற்கவில்லை. எனவே அக்கட்சியின் ஸ்தாபகரும் காரியதரிசியுமான மஸானி தம் மனச்சாட்சியின் ஆணைப்படி கட்சியிலிருந்தே விலகினார். இதன் பின் அவரது சோஷலிஸ மனப்போக்கு மேலும் மாறி, காந்திய நெறியில் வலுப்பட்டது.

1941ல் ஸ்ரீ மஸானிக்கு டாட்டா ஸ்தாபனத்துடன் தொடர்பு ஏற்பட்டது. அங்கு பல பதவிகளை வகித்துக் கடைசியில் சேர்மன் அலுவலகத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். அந்தரங்க சுத்தத்துடன் டாட்டா ஸ்தாபனத்தில் பதினாறாண்டுகள் பணிபுரிந்து சிறந்த தொழிலறிவும், நிர்வாகத் திறனும் பெற்றார். பிற்பாடு தாமே தொழில் நிர்வாக ஆலோசகராக (Management Consultant) தொழில் நடத்தலானார். அரசியல்வாதிகள் அரசியலைக் கொண்டே பிழைப்பு நடத்தக் கூடாது என்று திடமாகக் கருதும் ஸ்ரீ மஸானி இன்றும் இத் தொழிலைப் புரிந்து வருகிறார்.

ஸ்ரீ மஸானி பம்பாய் மாநகராட்சி மன்றத்தில் பல்லாண்டுகள் அங்கத்தினராக இருந்தவர்; ஓராண்டு பம்பாய் மேயராகவும் நற்பணி புரிந்தார். 1943ல் காந்திஜியின் பூரண உண்ணா விரதத்தை மஸானி ஆதரித்துச் சிறை புகுந்தார்.* 1945ல் இந்திய சட்ட சபைக்கு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நமது அரசியல் சாஸனத்தை வகுத்த அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகித்தார்.

சுதந்திர இந்தியாவில் 1949ல் ஸ்ரீ மஸானி, பிரேஸிலுக்குப் பாரதத்தின் தூதராக அனுப்பப்பட்டார். இச்சமயத்தில் அவர் ஐ. நா. சபையிலும் இந்தியாவின் பிரதிநிதியாகப் பணி ஆற்றினார்.



சுதந்திரக் கட்சி வளர்ச்சிக்கான ஆலோசனைக் கூட்டம். ராஜாஜி, என். ஜி. ரங்கா, 'கல்கி' ஆசிரியர் ஸ்ரீ சதாசிவம் ஆகியவர்களோடு மஸானி.

பிரேஸிலிலிருந்து திரும்பிய பின் ஸ்ரீ மஸானி பார்லிமென்டில் காங்கிரஸைச் சேர்ந்த அங்கத்தினராகத் தம் பணியைத் தொடர்ந்தார். ஆனால் சிறுகச் சிறுக அவருக்கு நேருஜி கடைப்பிடிக்கத் தொடங்கிய கொள்கைகளில் அதிருப்தி வளர்ந்தது. நேருஜிக்குச் சரியான வலதுசாரி எதிர்ப்பு உருவாகாத காலம் அது. அந்தச் சூழலில் அரசியலில் தீவிரமான ஈடுபாட்டைக் குறைத்துக் கொண்டார் ஸ்ரீ மஸானி. ஆனாலும் நாட்டின் தேவை அவரது மனத்தை அரித்தது. 'சும்மா இருந்தால் போதாது' என்ற சிந்தனை வலுத்தது. எப்போதுமே மனச் சத்தியத்தை தெய்வமாகக் கொண்டவர் அல்லவா அவர்? எனவே, 1956ல் சுயேச்சை அபேட்சகராக ராஞ்சியிலிருந்து பாராளு மன்றத்துக்குப் போட்டியிட்டார். வெற்றியும் பெற்றார். அதிகார சக்தியையும் அதில் பதுங்கிக் கிடக்கும் மயக்குச் சக்தியையும் மீறித் தமது நேர்

---

* காந்திஜி தமது சமரச முயற்சிக்குக் குந்தகமாகத் தம்மைச் சிறைப்படுத்தியது தவறு என்று பூரண சிறையில் உண்ணாவிரதமிருந்தார்.

மையாலேயே அவர் தேர்தலில் வெற்றி பெற்றது ஓர் அதிசயம்!

அன்றிலிருந்து, நடுவில் ஓராண்டு நீங்கலாக, ஸ்ரீ மஸானி மக்கட் சபையின் மதிப்பு மிக்க அங்கத்தினரில் ஒருவராக அற்புதத் தொண்டு புரிந்து வருகிறார்.

நேருஜியின் ஆட்சியில் சர்க்காரின் சர்வாதிபத்தியப் போக்கு நாளுக்கு நாள் வலுத்தது. சோஷலிஸம் கம்யூனிஸம் இவற்றோடு காங்கிரஸின் கொள்கையும் இடதுசாரியாகிவிட்ட நிலையில் வாக்காளர் தேர்ந்தெடுக்கக் கூடிய தகுதிவாய்ந்த வலதுசாரிக் கட்சி எதுமே இல்லையே என்று வருந்தினர் ஸ்ரீ மஸானி. இதே சமயத்தில் – 1959ல் – ராஜாஜி தமது தேசப் பணிகளுக்கெல்லாம் சிகரமாகச் சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தவுடன் ஸ்ரீ மஸானி அதில் இதயபூர்வமாக ஈர்க்கப்பட்டார். ராஜாஜியைச் சேர்ந்தார். கடலில் கலந்தது கங்கை!

சுதந்திரக் கட்சி தொடங்கியபோதே அதன் பொதுக் காரியதரிசி பதவியானது அதற்குரிய சகல தகுதிகளையும் பரிபூர்ணமாகப் பெற்றிருந்த ஸ்ரீ மஸானியைச் சென்றடைந்தது. இன்று சுதந்திரக் கட்சி பாரதத்தில் முக்கியமான எதிர்க் கட்சியாக விளங்குகிறது எனில், ஒரிஸ்ஸாவில் ஆளும் கட்சியாகவே அமைந்துள்ளதெனில், இந்த அரிய சாதனையில் ஸ்ரீ மஸானிக்கு விழுமிய பங்கு உண்டு.


மஸானியின் மனச் சத்தியம் மீண்டும் ஒரு சோதனையில் வென்றது. 1968ல் குஜராத்தில் ராஜ்ய சபைக்கான தேர்தல் நடந்த போது சுதந்திரக் கட்சி அங்கத்தினரில் சிலர் கட்சி வேட்பாளருக்கு வாக்குச் செய்யத் தவறினர். தர்ம வீரரான ஸ்ரீ மஸானி, சுதந்திரக் கட்சியின் தேசிய நிர்வாகக் குழுவிலிருந்து ராஜிநாமாச் செய்தார். ஆனால் பிறகு, 1969 டிஸம்பர் 27ந் தேதி சுதந்திரக் கட்சியின் தலைவராக ஏகமனதான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியைச் சிறப்புடன் முதல் பத்தாண்டுகள் ஸ்ரீ என். ஜி. ரங்கா வகித்தார். கௌரவம் மிக்க இந்த ஸ்தானத்தை இன்று ஸ்ரீ மஸானி வகிக்கிறார். அவரது உன்னத யோக்யதாம்சங்களுக்கு ஏற்ற உயர் பதவி; உன்னதமான பதவிக்கேற்ற உயர்ந்த மனிதர். இத்தனை தகுதிகளையும் சிறப்புக்களையும் பெற்றுள்ள சுதந்திரக் கட்சித் தலைவர் ஸ்ரீ எம். ஆர். மஸானியின் படத்தை இவ்விதழ் கல்கி மேலட்டையில் பிரசுரிப்பதில் பெருமித மடைகிறோம்.

மஸானி அவர்கள் சிறந்த சிந்தனையாளர். சிந்தனையைச் சுடர் தெறிக்கும் வாசகங்களில் ஆணித்தரமாக வெளியிடக் கூடிய சொல்லாற்றல் பெற்றவர். அவரது மக்கட் சபை உரைகளில் ததும்பும் விஷய ஞானமும், வாதத் திறமும், சொற்சுவையும், சக்தியும் நாடறிந்தவை. மொழி வன்மை காரணமாக அவர் சிறந்த எழுத்தாளராகவும் விளங்குகிறார். மஸானி எழுதிய **நமது இந்தியா** (Our India) என்ற புத்தகம் பலவாண்டுகள் பாடப் புத்தகமாக வைக்கப்பட்டிருந்தது. **சோஷலிஸத்தைப் பற்றிய மறு சிந்தனை** (Socialism Reconsidered) என்ற நூலில், ஒரு காலத்தில் தீவிர சோஷலிஸவாதியாக இருந்த அவரே அம் முறையில் உள்ள குறைபாடுகளைத் தெள்ளத் தெளிய விளக்கியுள்ளார்.

நிர்வாகத் திறனிலும் செயலாற்றலிலும் சிறந்தவர் ஸ்ரீ மஸானி. 1967–69ல் பொதுக் கணக்குக் கமிட்டித் தலைவராக இருக்கையில் அவர் அரசாங்கத்தின் விரயச் செலவுகளைப் பற்றி அயராமல் விவரங்களைச் சேகரித்து வெளியிட்டார். தம்மைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்களிடம் தமக்குள்ள பொறுப்பை முற்றிலும் உணர்ந்து, எத்தனை அலுவல் இருப்பினும் மாதம் ஒரு முறை ராஜ்கோட் சென்று மக்களின் குறைபாடுகளைக் கேட்டு வருகிறவர் அவர்.

சுதந்திரக்கட்சியின் தலைவராக ஸ்ரீ மஸானி பொறுப்பேற்றிருக்கும் காலத்தில் அக்கட்சியின் உன்னதமான லட்சியங்கள் நிறைவெய்தட்டும்; பாரதநாடு பொருளாதாரச் சீர்குலைவிலிருந்து காப்பாற்றப்பட்டு க்ஷேமமடைந்து சிறக்கட்டும். இதற்கு இறைவன் திருவருளை வேண்டிப் பிரார்த்திப்போம்.




பொதுப் பணத்தில் கருத்து

நவகாளிக்கு, காந்திஜியுடன் மனுபஹன் சென்றார். பயணம் செய்வதற்கு குஜராத்தி ஆடைகளைவிடப் பஞ்சாபி உடை வசதியாக இருக்கும் என்று கருதி, கல்கத்தாவிலுள்ள மார்வாரி சங்கத்தைச் சேர்ந்த ஓர் அன்பரிடம் மனுபஹனை அறிமுகம்செய்ததுடன் அவருக்குப் பஞ்சாபி உடை தைத்துத் தருமாறு காந்திஜி கூறினார். அந்த அன்பர், உடையைத் தயாரித்துக் கொடுத்தார். ஆனால் அதற்குரிய கிரயத்தை ஏற்க மறுத்துவிட்டார். இதைக்கேட்ட காந்திஜி, அந்த அன்பரை அழைத்து, "நீங்கள் பொதுப் பணத்தை ஆளுகிறவர்கள். எனக்காகச் செலவிடலாம் என்று கருதினால் தவறு. நாம் செலவிடும் ஒவ்வொரு காசுக்கும் கருத்துடன் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். மனுபஹனுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தரும் நிலைமையில் தகப்பனார் இருப்பதால், இலவசமாகச் செய்யக் கூடாது. இன்று மனுபஹனுக்குக் காட்டும் சலுகையை நாளைக்கு வேறு ஒருவருக்குக் காட்டினால் தவறில்லை என்று தோன்றும். சலுகைகாட்டும் பழக்கம் தவறானது. பொதுப் பணத்தை ஆளுகிறவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயலாற்ற வேண்டும் என்பது நான் உங்களுக்குத் தரும் அன்பான ஆலோசனை" என்றார். அந்த அன்பர், உடையைத் தயாரித்த செலவைக் கூறி மனுபஹனிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டார்.

-கே. எஸ். ஜே.









காலகேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!

காலகேட், 10க்கு 7 பேர்களில் வாய்துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் காலகேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப் படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய்துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் எதிர்க்கும் கிருமிகளை 85சதவீதம் வரை, காலகேட் டென்டல் க்ரீம் அகற்றிவிடுகிறது. இத்தகைய நிரூபணத்தைப் பெற்றிருப்பது காலகேட் மட்டுமே! அதன் வியக்கத்தக்க பெப்பர்மின்ட் சுவையோடு தனி— காலகேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!






தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே...உலகிலேயே அதிகமக்கள் மற்றெந்த பற்பசையையும் விட, காலகேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!

DC G.41 TH

TRAYONS

சீரான உழைப்பு
சுலபமான சலவை நியாயமான விலை
இவற்றுக்கு நிகரற்றது
டிரேயான்ஸ் ரேயான் நூல்



டிரேயான்ஸ் ரேயான் நூல் பட்டுப் போன்ற கவர்ச்சியைத் தருகிறது: பருத்தியின் பளபளப்பையும் மென்மையையும் அதிகமாக்குகிறது: சணல், பருத்தி, பட்டு இவற்றிலும் சிறந்த திரைச்சீலை, உறை போன்ற பொருள்களை உருவாக்கப் பயன்படுகிறது ; பட்டாடைகளுக்குப் பகட்டான தோற்றம் அளிக்கிறது : செயற்கை நூலிழைகளின் வெப்பம் தாங்கும் சக்தியைப் பெருக்குகிறது . கண்ணாடி இழைகளின் நொறுங்கும் தன்மையைக் குறைக்கிறது . உல்லாசத் தலைக்கொத்துடைய விரிப்பு, கம்பளம், போர்வை போன்றவற்றை உற்பத்தி செய்ய உதவுகிறது.

75, 100, 120, 150, 300 டெனீர்களில் கிடைக்கும்.

விவரங்களுக்கு :

ரேயான் ட்ரேடர்ஸ் பிரைவேட் லிட்.,
61, செம்புதாஸ் தெரு, சென்னை-1.
தந்தி : CELYARN டெலிபோன் : 21641.
கிளைகள் : தபால்பெட்டி 253 சேலம்: தபால் பெட்டி 154, மதுரை ;
தபால் பெட்டி 1372, கோயம்புத்தூர்.

NAS-94TM

பொறுப்பற்ற பட்ஜெட்டும் பொருளாதாரச் சீர்குலைவும்



எம். ஆர். மஸானி

பட்ஜெட் விவாதத்தின்போது பாராளுமன்றத்தில் சுதந்திரக் கட்சித் தலைவர் ஸ்ரீ எம். ஆர். மஸானி நிகழ்த்திய பேருரை அவரது சிந்தனைத் தெளிவுக்கும் விஷய ஞானத்துக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குவதுடன் இந்திரா காந்தியின் காங்கிரஸ் கொள்கைகளால் நாட்டில் எவ்வளவு பயங்கரமான பொருளாதாரச்சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் விரிவாகக்கூறுகிறது. "இந்த பட்ஜெட் ஏழை மக்களை வாட்டுகிறது. மோசடியை ஊக்குகிறது. இதற்குச் சாதகமாக வோட்டுப் போடுபவர்கள் மக்கள் அபிப்பிராயத்தைப் பிரதிபலிப்பவர்கள் அல்ல..." என்று ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார் ராஜாஜி. இத்தகைய படுமோசமான பட்ஜெட்டைப் பற்றித் திரு மஸானியின் விமர்சனத்தைப் பார்ப்போம்.

— ஆசிரியர்

ஆசிய நாடுகளில் பர்மா ஒன்றுதான் நம்மைவிட மெதுவாக முன்னேறுகிறது. மற்றெல்லா நாடுகளும் இந்தியாவைவிட வேகமாகவே முன்னேறி யிருக்கின்றன! இருபது ஆண்டு நடைமுறைகளும் கொள்கைகளும் நாட்டின் முன்னேற்றத்தை ஸ்தம்பிக்கச் செய்து நம்மை ஓட்டாண்டியாகச் செய்துள்ளன. பாரத நாட்டுப் பிரஜையின் சராசரி வருட வருமானம் கடந்த பத்தாண்டுகளில் ஏறக்குறைய ஒரே நிலையிலேயே இருந்து வருகிறது. 1960–61ல் ஒரு பிரஜையின் சராசரி வருமானம் ரூ. 307; 1968–69ல் ரூ. 319. கடுகளவு உயர்வுதான் இது.

ஆனால், பண வீக்கத்தின் கொடுமை மட்டும் இந்த ஆண்டுகளில் அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. சென்ற எட்டு ஆண்டுகளில் விலைவாசிகள் 73 சதம் உயர்ந்திருக்கின்றன. கடந்த பன்னிரண்டு மாதங்களில் மட்டும் ஏழு சதம் உயர்ந்திருக்கின்றன. சென்ற நவம்பர் டிசம்பர் ஜனவரி மாதங்களில் மட்டும் ஆண்டுக்குப் பதினைந்து சதம் என்ற விகிதத்தில் விலைகள் உயர்ந்துள்ளன. இந்தப் பண வீக்கத்தின் காரணமாக நம்முடைய ரூபாயின் மதிப்பு உலக நாணயங்களிடையே படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்துள்ளது.

கடந்த இருபது ஆண்டுகளில் நம் நாட்டின் வளர்ச்சி குன்றியதற்குக் காரணம் முன்னாள் பிரதமர்களும், நிதி அமைச்சர்களும் கடைப்பிடித்து வந்த கொள்கைகளே. சர்க்கார் ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் கொள்கையை நிறைவேற்ற ஆண்டுதோறும் கையாண்ட பிற்போக்கு பட்ஜெட் முறைகள் நம்மை இந்தக் கதிக்கு ஆளாக்கியுள்ளன. ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியும், ஸ்ரீ மொரார்ஜி தேசாயும் சமர்ப்பித்த பட்ஜெட்களின் பாணியிலேயேதான் மேலும் ஒரு பட்ஜெட்டை இவ்வாண்டு இந்திரா காந்தி சமர்ப்பித்துள்ளார். இது நம்முடைய நாட்டை நாசத்துக்கு இட்டுச் செல்லும் சரிவுப் பாதையில் மேலும் வேகமாகச் செலுத்தும்.

மத்தியதர வருப்பினருக்குச் சிறிது சலுகை காட்டுவதாகப் பேர் பண்ணியிருக்கிறார்கள். ஆண்டொன்றுக்கு 4800 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் சம்பாதிப்போர் வருமானவரி செலுத்த வேண்டாம் என்றிருந்தது. இந்த வரம்பை ஐயாயிரமாக உயர்த்தி யிருக்கிறார்கள். இதனால் கிடைக்கும் சிறிதளவு ஆதாயத்தை விலைவாசிகளின் உயர்வு என்ற பேய் விழுங்கி ஏப்பம் விட்டுவிடும்.

பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் எதையும் இந்த பட்ஜெட்டில் நான் காணவில்லை. மாறாக, எக்ஸைஸ் (உற்பத்தி) வரிகளின் உயர்வினாலும், ரயில் கட்டண உயர்வாலும் மக்கள்மீது கனிசமான சுமைதான் ஏற்றப்பட்டிருக்கிறது. பாலும், உணவுப் பண்டங்களும் நீங்கலாக, மற்ற எல்லாப் பொருள்களையும் ரயில்மூலம் அனுப்புவதற்கு அதிகக் கட்டணம் செலுத்தியாக வேண்டும். இதனால் நிச்சயம் விலைவாசிகள் உயர்ந்து மக்களுக்குச் சொல்லொணாத் துன்பம் நேரும்.

சோடா கலர் பானங்கள், சர்க்கரை, சிகரெட், டீ, காப்பி, மண்ணெண்ணெய் இப்படிப் பலவற்றின் மீது (எக்ஸைஸ்) உற்பத்தி வரி கூடியிருக்கிறது. குளிர் பதனச் சாதனங்கள் மீது போடப்பட்ட வரிகள் தவிர, மற்றெல்லா இனங்கள் மீதும் போடப்பட்டுள்ள வரிகள் ஏழை மக்களையும், மத்திய வர்க்கத்தினரையும் பாதிப்பவையே.

இவற்றையெல்லாம் விடக் கொடுமை பட்ஜெட்டில் துண்டு விழும் தொகைக்காக நோட்டு அச்சடிப்பது. இது மேலும் பண வீக்கத்தையும் விலைவாசி உயர்வையும் ஏற்படுத்தி மக்களைத் துயரக் கடலில் ஆழ்த்தும்.

நிதி அமைச்சரின் கணக்குப்படி இவ்வாண்டு ரூ. 225 கோடிக்கு நோட்டு அச்சடிக்கப்படும் என்று தெரிகிறது. ஆனால் ஸ்ரீ அசோக மேத்தா இது குறைவாகவே கணக்கிடப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார். நானும் அவ்வாறே நினைக்கிறேன். வருவாய் இனங்களில் கிடைக்கக்கூடிய தொகையைக்

கூடுதலாக மதிப்பிட்டு விட்டு, பற்றாக்குறையைக் குறைத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே, ரூ. 225 கோடி பற்றாக்குறையுடன் இன்னும் ரூ. 100 கோடியையும் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

இவ்வாறாகக் கணக்கிட்டால் பற்றாக்குறையானது 325 கோடி ரூபாயாகும். இந்த ரூ. 325 கோடியுடன், முடிவுற்ற 1968—69 ஆண்டில் பற்றாக்குறைக்காக அச்சடித்து வழங்கப்பட்ட 290 கோடி ரூபாயையும் கூட்டினால், மொத்தம் பற்றாக்குறை ரூ. 615 கோடியாகிறது. இந்த அளவுக்குப் பொருளாதாரக் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்ட முறையில், நியாயமற்ற வகையில் நோட்டு அச்சாகி மக்களிடையே புழங்கினால் என்னவாகும்? சர்வ நாசத்துக்கு இதுவே போதுமானது. ஏற்கனவே நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் பணவீக்கத்துக்கு மேல், இந்தப் பெரிய அளவு பணப் புழக்கத்தைச் சேர்த்தால், நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் சீர்குலையும்.

ஆகவே, இந்த பட்ஜெட் பண வீக்கத்தை உண்டாக்கி விலைவாசிகளை உயர்த்தும் கடுமையான பட்ஜெட்.

சாதாரண மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இது துளியும் சாரமற்ற பட்ஜெட். ஏழைகள் மீது — அவர்களின் வாழ்க்கைத்தரத்தின் மீது—தொடுக்கப்பட்ட போர் என்றே இந்த பட்ஜெட்டை நான் கருதுகிறேன்.

சேமிப்பும் தொழில் முதலீடும் எவ்வாறு பாதிக்கப்படும் எனக் கவனிக்கலாம். கடந்த இருபது ஆண்டுகளில் மொத்த தேசிய உற்பத்தியில் எப்படியோ 8 சதவிகிதம் சேமிப்பு செய்து முதலீடும் செய்து வந்தோம். இந்த பட்ஜெட் இதை இனி செய்ய வொட்டாமல் தடையாக நிற்கும். ஏனெனில் சேமிப்புச் செய்து முதலீடு செய்யக் கூடிய வர்க்கத்தினரிடமிருந்து மேலும் 170 கோடி ரூபாயைப் பிடுங்கி அரசாங்கம் தனது ஓட்டை ஜேபிகளில் திணித்துக்கொள்ளப் போகிறது. ஒரு நல்ல ஜேபியிலிருந்து மற்றோர் ஓட்டை ஜேபிக்குப் பணத்தை மாற்றிக்கொள்ளும் வித்தைக்கு அரசாங்கம் சூட்டியுள்ள பெயர் — ''நிதி திரட்டுதல்''. இது மார்க்ஸிஸ்டு தோழர்கள் உருவாக்கிய அழகான வாசகம்.

இந்தக் கொள்கையின் விளைவு என்ன? தனியார் துறையில் ஒரு ரூபாய்க்கு ஏழு பைசா லாபம் கிடைத்து வந்தால் அதைப் பறித்துச் சர்க்கார் துறைக்கு மாற்றி இரண்டு பைசா லாபம் கிடைக்கும்படியாகச் செய்து கொள்வதாகும். சர்க்கார் துறைத் தொழில்கள் இயங்கும் முறையைக் காட்டும் சோகக் கதை இதுதான். சேமிப்புக்கும் தொழில் துறைகளில் முதலீட்டுக்கும் இந்த பட்ஜெட் பரம விரோதி.

சொத்து உரிமைகளைப் பரவலாக்குவது குறித்து இப்போது ஆராய்வோம். செல்வமும் அதிகாரமும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பரவலாகப் பல பேர்களிடையே இருத்தலே நல்லது என்று நாம் எல்லாம் ஒப்புக் கொள்கிறோம். காந்திஜியின் கருத்தும் இதுவே. ஆனால் இந்த பட்ஜெட் சொத்து உரிமைகளைப் பரவலாகச் செய்யவில்லை. மாறாக வரி கொடாது ஏய்ப்பவர், கறுப்பு மார்க்கெட்காரர் ஆகியோரின் கையில் மேலும் அதிகமாகச் செல்வம் குவியச் செய்கிறது. இதுவரையில் ரூ. 2 லட்சம் வருமானமுள்ள ஒருவர் 77 சத விகிதம் வரியாகக் கொடுத்து வந்தார். இனி அவர் 93.5 சதம் வரி கொடுக்க வேண்டும். அதாவது நேர்மையாக நியாயமாக வரி கொடுத்துக் கொண்டிருந்தவர்களுக்குக் கூட இனிமேல் வரி கொடாமல் ஏய்க்கலாமே என்றுதான் தோன்றும். நேர்மையுடன் வரி செலுத்த வேண்டும் என்று நினைப்போரும் மாதச் சம்பளம் பெறுவோரும்தான் அவதிப்படுவார்கள். வரிப்பளு முழுவதையும் இவர்கள்தான் சுமக்க வேண்டும். பிறர் தப்பித்துக்கொள்வார்கள். கறுப்பு மார்க்கெட்காரர்களுக்கும் வரி 'டிமிக்கி' கொடுப்போருக்கும் கொண்டாட்டம்!

வேலைவாய்ப்புக்களைப் பற்றி இனி கவனிப்போம். வேலை வாய்ப்புக்களை உண்டாக்க, பட்ஜெட்டில் பணம் ஒதுக்கி விட்டால் போதும் என்ற தோரணையில் சில ஜால வித்தைகள் செய்யப்பட்டுள்ளன. இருபத்தேழு கோடியைப் பல திட்டங்களை முடிக்கச் செலவிடலாம். கிராமப்புற நலனுக்காக ரஸ்தா போடுவது, கிணறு வெட்டுவது மற்றும் இவை போன்ற திட்டங்களைப் பற்றி எனக்கு ஆட்சேபம் ஒன்றும் இல்லை. இவற்றின் மூலம் சில லட்சம் பேர்களுக்குச் சிறிது காலத்துக்கு வேலை கிடைக்கலாம். ஆனால் நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நிரந்தரமாக இவற்றினால் சமாளிக்க முடியாது. இப்போதே 150 அல்லது 160 லட்சம் பேர்கள் வேலையற்று இருக்கின்றனர். இந்த ஆட்சியினர் கடைப்பிடித்து வரும் சோஷலிஸத் திட்டத்தின் விளைவாக ஐந்தாவது திட்ட கால முடிவில் 280 லட்சம் வேலையற்றோர் இருப்பார்கள்! சோஷலிஸ இந்தியா இந்த இலக்கை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறது!

வேலை வாய்ப்பை அதிகரிக்க வேண்டுமானால் ஒரே வழிதான் உண்டு. உற்பத்தியை



யும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்க வேண்டும். மொத்த உற்பத்தி பெருகினால்தான் பங்குபோடப் பொருள் இருக்கும். பட்ஜெட்டில் சிறிதளவு நிதி ஒதுக்கி விட்டதால் வேலை வாய்ப்பை உற்பத்தி செய்ய முடியாது.

பட்ஜெட்டைக் கண்டனம் செய்துவிட்ட பின், ஆக்க ரீதியில் ஆலோசனையும் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொல்வது இதுதான்: அதிகப்படி வரி போடுவதற்கு அவசியமே இல்லை. நாட்டுக்குத் தேவைப்படுவது இப்போதுள்ள வரிவிகிதங்களைக் கணிசமாகக் குறைப்பதுவே. இதைச் செய்தால் சேமிப்பு வளரும். முதலீடு பெருகும். தொழிலில் உற்சாகம் பிறக்கும். புதிய தொழில் வளர்ச்சி ஏற்படும். வேலை இல்லாத் திண்டாட்டம் ஒழியும்.

பொதுப் பணம் தாறுமாறாக விரயமாகிக் கொண்டிருக்கிறது. நான் பொதுக் கணக்குக் கமிட்டியின் தலைவராக இருந்தபோது 1967-1969 ஆண்டுகளில் பொதுப் பணம் வீண் விரயமாவது பற்றி ஆராய்ந்தேன். எனக்குக் கிடைத்த தகவல்களிலிருந்து பார்த்தால் பல சர்க்கார் இலாக்காக்களில் ரூ. 90 கோடி ஒன்றுக்கும் பிரயோசனமில்லாமல் விரயமாயிருக்கிறது என்று தெரிய வந்தது. பரந்து விரிந்த அரசினர் துறையின் ராட்சதத் தொழிலகங்களில் இப்படி எத்தனை கோடி ஆண்டு தோறும் வீணாகிக் கொண்டிருக்கிறதோ!

ஒவ்வொரு வருஷமும் அபிவிருத்திக்கான இனங்களின் செலவு குறைந்து கொண்டே வருகிறது. அபிவிருத்திக்கல்லாத மற்ற இனங்களில் செலவு ஏறிக் கொண்டே போகிறது. இதைத் தவிர்க்க வேண்டும்.

இப்போதும்கூட அதிக வரி விதிக்காமல் இருக்க வழிகள் உள்ளன. முதலாவதாக, திறமையுடன் வரி பாக்கிகளையும், வரிகளையும் வசூலித்தால் இப்போது வரிகள் மூலம் திரட்ட உத்தேசித்திருக்கும் ரூ. 170 கோடி முழுவதையுமே ஈடு செய்துவிட முடியும். இரண்டாவதாகச் சில ராஜ்யங்களின் பட்ஜெட்டில் துண்டு விழும் தொகையை ஈடு செய்ய ரூ. 175 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொது பட்ஜெட்டில் இம்மாதிரி நிதி ஒதுக்கப்படுவது இதுவே முதல் தடவை. மத்திய சர்க்காருக்கும் ராஜ்ய சர்க்காருக்கும் நிதிப் பங்கீடு குறித்துக் கண்டிப்பான விதிமுறைகள் அரசியல் சாஸனத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றன. பிரதமர் தாம் விரும்பிய ராஜ்யங்களுக்குத் தம் இஷ்டம்போல் பொதுப் பணத்திலிருந்து பங்கு தருவது முறையற்றது. இந்த ஊழல் நடவடிக்கை சட்டப்படி செல்லத்தக்கதா என்பதே சந்தேகம். மூடுமந்திரமாக உள்ள இந்த நிதி ஒதுக்கீட்டை மத்திய பட்ஜெட்டிலிருந்து நீக்கிவிட்டால், அதிகப்படியான நேர்முக, மறைமுக வரிகளுக்குத் தேவையே இராது. உடனே இப்புதிய வரிகளை ரத்து செய்து விடலாம். நாட்டின் வளர்ச்சி விரைவுபடும்.

மூன்றாவதாக, சர்க்கார்த் துறைத் தொழில்கள். இவை நமது பொருளாதாரத்தைச் சீர்குலையச் செய்யும் அமைப்புக்கள். தனியார்த் துறையில் சராசரி 11 சதவீதம் விடுமுதலின் மீது லாபம் கிடைப்பதாக மதிப்பிடப்படுகிறது. சர்க்கார்த் துறைத்



தொழில்கள் ஐந்து சதவீதம் லாபம் சம்பாதித்தால்கூட ரூ. 175 கோடி கிடைத்துவிடும். உபரி வரிகளுக்கு அவசியமே இராது. இதற்கு அநுசரணையாக இப்போதாவது பிரதமர் இத் தொழில்களுக்கு இலக்குகள் நிர்ணயம் செய்து தாக்கீது விடுவாரா?

இப்போதுள்ள நேர்முக, மறைமுக வரி விகிதங்களைப் பாதியாகக் குறைத்தால் — குறைக்க முடியும், வேண்டும் என்று நான் சொல்லுகிறேன் — சர்க்கார் வருமானம் குறைந்துவிடுமே என்று சிந்திக்கத் தோன்றும். அமெரிக்காவில் ஜனாதிபதி கென்னடி இந்த முறையில் ஒரு பரிசோதனை செய்து பார்த்தார். வரிகளைக் குறைத்தால், அரசாங்கத்துக்கு வருமானம் குறையும்தான். ஆனால் வரி எந்த விகிதத்தில் குறைக்கப்பட்டதோ, அதே விகிதாசாரத்தில் வருமானம் குறைவதில்லை. வரி விகிதங்களை ஐம்பது சதவீதம், அதாவது பாதியாகக் குறைத்தால் வருமானம் பாதியாகக் குறையாது; முப்பது சதவீதமே குறையும். ஏனெனில், வரி குறைவதால் உற்பத்தி பெருகும். அதிக உற்பத்தி காரணமாக எக்ஸைஸ் வரிகள் கூடுதலாகச் சர்க்காருக்கு வந்து சேரும். வேலை வாய்ப்புக்கள் பெருகி வருமான வரி கட்டுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

மேலும் சர்க்கார் தம் செலவுகளைக் கஷ்டமில்லாமல் முப்பது சதவீதம் குறைத்துக் கொள்ளலாம். ஏகத்தாறுக வீண் விரயமாகிக் கொண்டிருப்பதைத் தவிர்த்து ஓட்டைகளை அடைத்தாலே போதும். இதைச் சாதித்து விடலாம். இதனாலெல்லாம் வரிக் குறைப்பினால் அரசாங்கம் இழக்கும் தொகையை அது திரும்பவும் சீக்கிரமாக அடைந்துவிட முடியும் என்று இந்தச் சபைக்கு நான் உறுதி அளிக்கிறேன். இந்த நடவடிக்கைகளால் நாட்டு மக்களும் மகிழ்வார்கள்.

அரசினர் கவனம் செலுத்த வேண்டியது எப்படி அதிக வரிகளை விதிக்கலாம் என்பதைப் பற்றி அல்ல. ஜப்பான், கொரியா, தைவான், மலேஷியா போன்ற நாடுகளைப் போல நமது நாட்டிலும் தொழில் வளர்ச்சியைத் தீவிரமாக்க வகை செய்தால், பொதுக் காரியங்களுக்குச் செலவிட அரசுக்குத் தேவைப்படும் வருமானத்தைச் சுலபமாக அடையலாம். கறுப்பு மார்க்கெட்காரர்களை ஊக்குவித்து, நீண்டகால அடிப்படையில் சர்க்காரின் வரு

வாயையே மதியீனமான அதிக வரிக் கொள்கை குறைந்து விடும்; வரி விகிதத்தைக் குறைத்தாலே இன்றைவிட அதிக வருமானத்தைப் பெறலாம்.

முற்போக்குச் சிந்தனையாளர்களுக்கிடையில் தாம் இருப்பதாகப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி எண்ணுகிறார். ஆனால் உண்மை வேறு. முற்போக்காளர் மத்தியில் அவர் இல்லை. அவருடைய பட்ஜெட்டையும் கொள்கைகளையும் பார்த்தால், 1934—36 ஆண்டுகளில் ஆங்கிலேயக் கல்லூரிகளில் மார்க்ஸியத்தை அரைகுறையாகப் படித்து உணர்ந்த மாணவர்கள் வர்க்கத்தில்தான் அவர் இருக்கிறார் என்பது விளங்குகிறது. முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னிருந்த அந்தக் காலத்திலிருந்து உலகம் வேகமாக முன்னேறி விட்டது. உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் சோஷலிஸம் என்ற சொல்லின் அர்த்தமும் அந்தச் சித்தாந்தத்தின் நடைமுறைக் கொள்கைகளும் உருமாறி விட்டன. உதாரணத்துக்கு ஜெர்மானிய ஜனநாயக சோஷலிஸக் கட்சியின் அறிக்கையிலிருந்து ஒரு வாசகம் படித்துக் காட்டுகிறேன். ''போட்டா போட்டி உண்மையிலேயே செயல்படும் கட்டுப்பாடில்லாத தொழிற் போட்டி முறையை ஜனநாயக சோஷலிஸக் கட்சி ஆதரிக்கிறது. மிக அவசியமான குறைந்த அளவுத் திட்டம், முடிந்தவரை சுயேச்சையாக இயங்கும் போட்டா போட்டி நிலைமை— இவற்றையே ஆதரிக்கிறது.'' இது ஜெர்மனியில் சோஷலிஸ்ட்களே விடுத்துள்ள அறிக்கை. சுதந்திரக் கட்சியின் கொள்கையைப் போலவே இதுவும் இருப்பதை எளிதில் உணரலாம்.

உண்மையில், இருபதாம் நூற்றாண்டின் ஜனநாயக சோஷலிஸத்தை இந்த பட்ஜெட் பிரதிபலிக்கவில்லை. இந்தோனீஷியாவில் சுகர்ணோவும், கானாவில் என்க்ருமாவும், மற்றும் அவர்களைப் போன்ற கொடுங்கோலர்களும் பின்பற்றி, இப்போது உயிரிழந்து விட்ட பூரண சர்க்கார் ஆதிக்கம் என்ற பிற்போக்குக் கொள்கையையே இந்த பட்ஜெட் பிரதிபலிக்கிறது. சென்ற ஜனவரியில் நான் கானா சென்றிருந்தேன். ''சோஷலிஸம் என்ற வார்த்தையையே இங்கே பேசாதீர்கள். அது ஓர் இழிவான வார்த்தை. சோஷலிஸ்டு என்று கூறிக் கொள்ளும் எவரோடும் முகம் கொடுத்துப் பேசவும் மக்கள் வெட்கப்படும் அளவுக்கு என்க்ருமா அந்த வார்த்தையை இழிவுபடுத்தி விட்டார்'' என்று அந்நாட்டினர் என்னிடம் சொன்னார்கள். நம்முடைய நாட்டிலும் அம்மாதிரி ஒரு நிலைமை ஏற்பட வேண்டும் என்று நாம் விரும்புகிறோமா?

ஆத்ம சோதனை

ஸ்ரீ எம். ஆர். மஸானியின் உள்ளம் எவ்வளவு தூய்மையானது என்பதை அவரது பாராளுமன்றப் பிரசங்கத்தின் பின்வரும் பகுதி நமக்கு உணர்த்துகிறது :

மத்திய மந்திரிகளின் மாதச் சம்பளம் ரூ. 2250. இதற்கு அவர்கள் வரி செலுத்துகிறார்கள். இவர்களது வருஷாந்தர வருமானம் ரூ. 40,000க்கும் குறைவே. ஆகவே இவ்வாண்டு பட்ஜெட்டில் ரூ. 40,000க்கு மேற்பட்ட வருமானமுள்ளவர்களுக்கென உத்தேசித்திருக்கும் விசேஷ வருமான வரி இவர்களைப் பாதிக்காது. ஆனால் உண்மையிலோ, இம் மந்திரிகள் தங்களுடைய வருமானம் மாதம் ரூ. 2250க்கு மேல் இல்லை என்று சொல்லுவது மக்களை ஏமாற்றுவதாகவே ஆகும். இம்மாதிரி விஷயங்களில் விவரமறிந்த திரு என். ஏ. பால்கிவாலா, அமைச்சர்கள் மாதம் பதினோராயிரம் ரூபாய் அளவுக்கும் பல வகைகளில் அலவன்ஸ்கள் பெற்று வருகிறார்கள் என்று கணக்கிட்டுச் சொல்லுகிறார். ஆனால் இவற்றுக்கு வருமான வரி கிடையாது! அவர்களுடைய மொத்த வருமானம் ஆண்டுக்கு இரண்டு லட்சத்துக்கு மேலாகும். அமைச்சர்களுக்கு மாதம் ரூ. 20,000 அதிகம் என்று சொல்ல நான் முன்வரவில்லை. ஆனால் அதிகாரத்தில் இல்லாத இதர வர்க்கத்தினரைப் போலவே இவர்களும் 2,40,000 ரூபாய் வருமானத்துக்கு உரிய நியாயமான வரியை அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டும் என்கிறேன். ரூ. 2,40,000 வருமானமுள்ள மற்றவர்கள் நாட்டைச் சுரண்டுபவர்களாகக் கருதப்பட்டால், நமது அமைச்சர்களும் அந்தச் சுரண்டல் வர்க்கத்தினரைச் சேர்ந்தவர்களே. நமது நாட்டில் ஒரு பிரஜையின் சராசரி வருமானத்தை விட 750 மடங்கு அதிக வருமானத்தைச் சம்பளமாகவும், ஊதியமாகவும், அலவன்ஸ்களாகவும் அவர்கள் பெற்று வருகின்றனர்.

அமைச்சர்களை விட்டு விட்டு பார்லிமெண்ட் அங்கத்தினர்களாகிய நம்மையே எடுத்துக் கொள்வோம். சென்ற ஆண்டு நம்முடைய ஊதியத்தை நாம் உயர்த்திக்கொண்டபோது, அந்தப் பிரேரணையை எதிர்த்து நான் ஒரு திருத்தம் கொண்டு வந்தேன். ''நம்முடைய கோரிக்கை பற்றி நாமே முடிவெடுப்பது அழகல்ல; இதை ஒரு மத்தியஸ்த முடிவுக்கு விட்டு விடலாம். அவர்கள் பரிசீலனை செய்து மற்ற அரசாங்க ஊழியர்களுக்கு நியாயம் வழங்குவது போல் நம்முடைய கோரிக்கை மீது நியாயம் வழங்கட்டும்'' - இது என் திருத்தப் பிரேரணையின் சாராம்சம். ஆனால் நான் சொன்னதை எவரும் ஏற்கவில்லை. பொறுக்குக் கமிட்டியினர் தம்மிடம் சாட்சியம் கூறிய பாராளுமன்ற அங்கத்தினர்களிடம், வருமான வரிக்கு உட்படாத வகையில் அவர்கள் பெற்றுவரும் ஊதியத்தின் அளவு என்ன என்று கேட்டார்கள். பெரும்பான்மையினர் ''மாதம் ரூ. 1500 லிருந்து 2000 வரையில் வருமான வரிக்கு உட்படாத ஊதியம் எங்களுக்குக் கிடைத்து வருகிறது'' என்று கூறினர்.

நாம் பெறும் ஊதியத் தொகைக்கு நாம் அருகதை உள்ளவர்களாகவே இருக்கலாம். ஆனால் மக்கள் முன்னிலையில் உண்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். உண்மையாகப் பாடுபட்டு உழைத்துச் சம்பாதிப்பவர்களைச் சுரண்டல்காரர்கள் என்றும், சமூக விரோதிகள் என்றும் வர்ணிக்காமல் இருப்போம். வெவ்வேறான இரண்டு அளவுகோல்களைக் கொண்டு நாம் செயல்படக்கூடாது. நன்றாகச் சம்பாதிக்கும் சாமர்த்தியம் படைத்தவர்களைச் சுரண்டல்காரர்கள் என்போமாயின் நாமும் சுரண்டல்காரர்களே.







சுதந்திரக் கட்சித் தலைவர்கள்

திரு எம். ஆர். மஸானி

சுதந்திரக் கட்சியின் தலைவர். தொழில்களுக்கு நிர்வாக ஆலோசகராகப் பணியாற்றுகிறார். சட்டம் படித்தவர். பம்பாய் நகரத்தின் மேயராகப் பதவி வகித்தவர். பிரேஜில் நாட்டுக்கு இந்தியாவின் தூதுவராக விளங்கியவர். பல முறை லோக சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். தற்போது குஜராத்தைச் சேர்ந்த ராஜ்கோட் தொகுதியின் பிரதிநிதியாக லோக சபையில் அரும் பணியாற்றி வருகிறார்.

உப தலைவர்கள் :

திரு ஆர். என். சிங்தேவ்

ஒரிஸ்ஸா ராஜ்யத்தின் முதன்மந்திரி; அரச குடும்பத்தில் பிறந்து மற்றொரு அரச குடும்பத்தில் ஸ்வீகாரப் புதல்வரானவர். 1949ம் ஆண்டில் கண தந்திர பரிஷத் கட்சியைத் துவக்கினார்; 1962ல் இக்கட்சி சுதந்திரக் கட்சியுடன் இணைந்தது. லோக சபை அங்கத்தினராயும் பின்னர் ஒரிஸ்ஸா சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்து இன்று அந்த ராஜ்யத்தில் ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கிறார்.

பேராசிரியர் எம். ரத்தினஸ்வாமி

பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். பச்சையப்பன் கல்லூரியின் தலைவராகவும், சென்னை சட்டக் கல்லூரியின் தலைவராகவும், அண்ணாமலை சர்வகலாசாலையின் உப அத்யக்ஷகராகவும் பணி ஆற்றியுள்ளார். ஆரம்பத்திலிருந்தே சுதந்திரக் கட்சியுடன் தொடர்பு கொண்டவர். 1962லிருந்து ராஜ்ய சபை அங்கத்தினர்.

மஹாராணி காயத்ரி தேவி

ராஜஸ்தான் ராஜ்ய சுதந்திரக் கட்சித் தலைவர். சாந்திநிகேதன் சர்வகலாசாலையிலும், லண்டன், லௌஸான் சர்வகலாசாலைகளிலும் கல்வி பெற்றவர்; ஜெய்பூரில் மஹாராணி காயத்ரி தேவி பெண்கள் பொதுப் பள்ளியைத் தோற்றுவித்தார். ராஜஸ்தானில் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரே பெண்கள் பொதுப் பள்ளி இது. லோகசபை அங்கத்தினர்.

திரு என். டாண்டேகர்

கம்பெனி கணக்காயர்; லண்டன் பொருளாதாரப் பள்ளியில் கல்வி பயின்றவர்; ஐ. ஸி. எஸ்.ல் 1931ல் சேர்ந்து, பல பதவிகளையும் வகித்து இருபத்து மூன்று ஆண்டுகள் அநுபவம் பெற்றவர். ஐ. ஸி. எஸ்.ஸிலிருந்து 1953ம் ஆண்டில் ராஜிநாமா செய்தார். 1964, 1967 தேர்தல்களில் லோக சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுதந்திரக் கட்சியின் பம்பாய், மகாராஷ்டிர கிளைகளுக்குத் தலைவராயிருந்தார்.

திரு தாஹ்யாபாய் வி. பட்டேல்

ராஜ்ய சபையில் சுதந்திரக் கட்சியின் தலைவர்; இந்திய சுதந்திர இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டவர்; பம்பாய்நகர மேயராகப் பதவி வகித்தவர். ஸர்தார் வல்லபாய் பட்டேலின் புதல்வர்.


















நிர்வாகக் குழு

ஸ்ரீமதி ஔவெல்லா லோபோ பிரபு
'இன்லைட்' பத்திரிகை கூட்டாசிரியர்

திரு என்.ஜி.ரங்கா எம்.பி.
லோக சபையில் சுதந்திரக் கட்சித் தலைவர்.

குமாரி குஸும் குமாரி வி. ஜோஷி, வழக்கறிஞர்

கர்னல் எச்.ஆர். பஸ்ரீசா
சஸ்திர சிகிச்சை நிபுணர்

திரு ஜான்சன் வள்ளிக்காப்பன்
தோட்டத் தொழிலதிபர்


திரு ஓய். காதிலிங்கண கௌட் எம். பி.
கட்சிக் கொறடா

திரு டி. என். பட்டோடியா எம். பி.
தொழில் வர்த்தக அதிபர்

திரு திரிவிக்ரம் திரிபாதி
வழக்கறிஞர்

ஜனாப் ஜே. முஹம்மது இமாம், எம்.பி., விவசாயி.

திரு புத்தி பிரகாஷ்
வழக்கறிஞர்




அங்கத்தினர்கள்

திரு பிலூ மோடி, எம். பி.
கட்டிடக்கலை நிபுணர், ''மார்ச் ஆஃப் தி நேஷன்'' ஆசிரியர்.

ராஜாஜி

திரு எச். எம். பட்டேல்,
எம்.எல்.ஏ., குஜராத். ஓய்வு பெற்ற ஐ.ஸி.எஸ். அதிகாரி.

சர்தார் பஸந்த் சிங்,
எம்.எல்.ஏ., பஞ்சாப். விவசாயி.

திரு லோபோ பிரபு,
எம்.பி., ஆசிரியர், 'இன்ஸைட்'

திரு எஸ்.எஸ். மாரிசாமி,
எம்.பி., தமிழ்நாடு சுதந்திரக் கட்சி பொதுக் காரியதரிசி.


திரு ஜி. லட்சண்ணா,
எம்.எல்.ஏ., ஆந்திர எதிர்க் கட்சித் தலைவர்.


திரு என்.கே. கணபய்யா
தோட்டத் தொழிலதிபர்.

திரு ஜி. கே. சுந்தரம்,
எம்.பி., தொழிலதிபர்.

மகாராஜா பி.கே. தேவ்,
எம்.பி.
















பொதுச் செயலாளர் : டாக்டர் ஆர். வி. கூப்பர், பொருளாதார நிபுணர்

பொருளாளர்கள் : திரு எச். பி. நந்தா, தொழிலதிபர்

திரு லால்சந்த் ஹீராசந்த், தொழிலதிபர்

துணைச் செயலாளர்கள்: திரு ஹரிஹர் பட்டேல், தொழில் துறை மந்திரி, ஒரிஸ்ஸா

பேராசிரியர் ஆர். கே. அமீன், எம். பி,
பொருளாதார நிபுணர்

டாக்டர் எச். வி. ஹண்டே, எம்.எல்.ஏ.

திரு மது மேத்தா
வர்த்தகத்துறைப் பிரமுகர்; தொழிலாளர் தலைவர்

திரு என். கே. சோமானி, எம். பி.
தொழில் வர்த்தக அதிபர்

முப்பத்தைந்தாம் அத்தியாயம்

"வேளை நெருங்கிவிட்டது!"

நூறு வருஷங்களுக்கு முன்பு கட்டப்பட்டு, இப்போது பாழடைந்து காடு அடர்ந்திருந்த பள்ளிப்படைக் கோயிலை முன்னொரு தடவை நாம் பார்த்திருக்கிறோம். ஆழ்வார்க்கடியான் இங்கே ஒளிந்திருந்துதான் ரவிதாஸன் முதலியவர்களின் சதியைப் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டான். அதே இடத்துக்கு இப்போது வந்தியத்தேவனும் மற்றவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

பாழடைந்த பள்ளிப் படையின் ஒரு பக்கத்துச் சுவர் ஓரமாக வந்தியத்தேவனையும் அவன் குதிரையையும் அழைத்து வந்தார்கள்.

''அப்பனே! சற்று நீ இங்கேயே இரு! உன்னைக் கூப்பிட வேண்டிய சமயத்தில் கூப்பிடுகிறோம். தப்பித்துச் செல்லலாம் என்று கனவு காணாதே! பழக்கப்பட்டவர்களைத் தவிர வேறு யாரும் இக் காட்டுக்குள் வரவும் முடியாது; வெளியேறவும் முடியாது. அப்படி வெளியேற முயன்றால், நிச்சயம் உயிரை இழப்பாய்'' என்றான் ரவிதாஸன்.

''அப்படி நான் வழி கண்டுபிடித்துப் போகப் பார்த்தால் நீ மந்திரம் போட்டுக் கொன்றுவிடுவாய்! இல்லையா, மந்திரவாதி!'' என்று கூறி வந்தியத்தேவன் நகைத்தான்.



''சிரி, சிரி! நன்றாய்ச் சிரி!'' என்று சொல்லி ரவிதாஸனும் சிரித்தான்.

அச்சமயம் பார்த்து எங்கேயோ தூரத்தில் நரி ஒன்று ஊளையிடத் தொடங்கியது. அதைக் கேட்டுப் பக்கத்தில் எங்கேயோ கோட்டான் ஒன்று முனகியது.

வந்தியத்தேவனுடைய உடல் சிலிர்த்தது. குளிரினால் அல்ல. அடர்ந்த அந்தக் காட்டின் மத்தியில் வாடைக் காற்று பிரவேசிக்கவும் பயந்ததாகக் காணப்பட்டது. ஏன்? அங்கே மழைகூட அவ்வளவாகப் பெய்ததாகத் தெரியவில்லை. தரையில் சில இடங்களில் மட்டும் மழைத் துளிகள் சொட்டி ஈரமாயிருந்தது. காற்று இல்லாதபடியால் இறுக்கமாக இருந்தது. அங்கே வந்து சேர்வதற்குள் வந்தியத் தேவனுடைய அரைத் துணி உலர்ந்து போயிருந்தது. சுற்றிக் கட்டியிருந்த துணிச் சுருள் மட்டுமே ஈரமாயிருந்தது. அதை எடுத்து விரித்துப் பக்கத்தில் கிடந்த பாறுங் கல்லின் மீது உலர்த்தினான். அதே கல்லின் ஒரு மூலையில் வந்தியத்தேவன் உட்கார்ந்து பள்ளிப்படைச் சுவரின் மீது சாய்ந்து கொண்டான். அவனுக்குக் காவலாக அருகில் ஒருவன் மட்டும் இருந்தான்.

சற்றுத் தூரத்தில் காட்டின் மத்தியில் ஏற்பட்டிருந்த இடை வெளியில் அவனுடன் வந்தவர்களில் மற்றவர்கள் வட்ட வடிவமாக உட்கார்ந்தார்கள். பள்ளிப் படைக்கு உள்ளேயிருந்து ஒருவன் பழைய சிம்மாதனம் ஒன்றை எடுத்துக் கொண்டுவந்து போட்டான். அதில் 'சக்கரவர்த்தி' என்று அழைக்கப்பட்ட சிறுவனை உட்காரச் செய்தார்கள். தீவர்த்திகளில் இரண்டை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவற்றை அணைத்து விட்டார்கள். அவ்விதம் தீவர்த்திகளை அணைத்தபோது எழுந்த புகை நாலாபுறமும் சூழ்ந்தது.

''ராணி இன்னும் வரவில்லையே?'' என்றான் ஒருவன்.

''சமயம் பார்த்துத்தானே வரவேண்டும்? இரண்டாவது ஜாமத்திலேதான் நானும் வரச் சொல்லியிருக்கிறேன். அதுவரையில் வழுதி குலத்துப் புகழ் மாலையை யாராவது பாடுங்கள்!'' என்றான் சோமன் சாம்பவன்.

இடும்பன்காரி உடுக்கு ஒன்றை எடுத்து இலேசாக அதைத் தட்டினான். தேவராளன் ஏதோ ஒரு பாட்டுப் பாடத் தொடங்கினான்.

வந்தியத்தேவன் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான்; கேட்டுக் கொண்டுமிருந்தான். வழுதி குலம் என்பது பாண்டிய குலம் என்று அவன் அறிந்திருந்தான். பாடல் ஏதோ ஒரு சோகப் பிரலாபமாக அவன் காதில் தொனித்தது. உடுக்கின் நாதமும் சோகப் பாடலின் இசையும் அவன் உள்ளத்தில் ஒரு நெகிழ்ச்சியை உண்டாக்கின. பாடலில் சிற்சில வார்த்தைகள் அவன் காதில் விழுந்தன. அவற்றிலிருந்து அந்த இடத்தில் நூறு வருஷங்களுக்கு முன்னால் நடந்த மாபெரும் போரைப் பற்றிய வரலாறு அவன் நினைவுக்கு வந்தது.

ஆம்; அங்கேதான் வரகுண பாண்டியனுக்கும் அபராஜித பல்லவனுக்கும் மூன்று நாட்கள் கொடிய யுத்தம் நடந்தது. பல்லவனுக்குத் துணையாகக் கங்க மன்னன் பிருதிவீபதி வந்தான். அப்போரில் மாண்ட



லட்சக் கணக்கான வீரர்களைப் போல் அம்மகா வீரனும் இறந்து விழுந்தான். அவனுடைய ஞாபகமாகக் கட்டிய பள்ளிப் படைக் கோவில்தான் இப்போது சதிகாரர்கள் கூடும் இடமாக அமைந்திருந்தது.

கங்க மன்னன் இறந்ததும் பல்லவர் படைகள் சிதறி ஓடத் தொடங்கின. பாண்டிய சைன்யத்தின் வெற்றி நிச்சயம் என்று தோன்றியது. இச்சமயத்தில் சோழர் படைகள் பல்லவர்களின் உதவிக்கு வந்தன. அப்படைக்குத் தலைமை வகித்துத் திருமேனியில் தொண்ணூற்றாறு புண் சுமந்த விஜயாலய சோழன் வந்தான். இரண்டு கால்களையும் முன்னமே இழந்திருந்த அவ்வீரப் பெருங் கிழவனை நாலு பேர் தூக்கிக் கொண்டு வந்தார்கள். இரண்டு கைகளிலும் இரண்டு நெடிய வாள்களை ஏந்திக் கொண்டு அவன் பாண்டியர் சைன்யத்தில் புகுந்தான். இரண்டு வாள்களையும் சக்கராகாரமாகச் சுழற்றிக் கொண்டே போனான். அவன் சென்ற இடங்களிலெல்லாம் இரு



புறமும் பாண்டிய வீரர்களின் உயிரற்ற உடல்கள் மலை மலையாகக் குவிந்தன.

சிதறி ஓடிய பல்லவ சேனாவீரர்கள் திரும்பி வரத் தொடங்கினார்கள்.

ஜண ஜண ஜண ஜணார்!—பதினாயிரம் வாள்கள் மாலைச் சூரியனின் மஞ்சள் வெய்யிலில் மின்னிக் கொண்டு வந்தன!

டண டண டண டணார்!—பதினாயிரம் வேல்கள் இன்னொரு பக்கமிருந்து ஒளி வீசிப் பாய்ந்து வந்தன!

வாள்களும் வேல்களும் மோதின!

ஆயிரம் பதினாயிரம் தலைகள் நாலாபுறமும் உருண்டன!

ஆயிரம் பதினாயிரம் உயிரற்ற உடல்கள் விழுந்தன!

ஈ ஈ ஈ ஈ! — குதிரைகள் கனைத்துக் கொண்டே செத்து விழுந்தன!

ப்ளீளீ — யானைகள் பிளிறிக்கொண்டே மாண்டு விழுந்தன.

இரத்த வெள்ளத்தில் செத்த மனிதர்கள் — மிருகங்களின் உடல்கள் மிதந்தன!

இருபதினாயிரம் கொட்டைப் பருந்துகள் வட்டமிட்டுப் பறந்து வானத்தை மூடி மறைத்தன!

முப்பதினாயிரம் நரிகள் ஊளையிட்டுக் கொண்டு ஓடி வந்து போர்க்களத்தைச் சூழ்ந்து கொண்டன!

"ஐயோஓஓஓ!" என்ற ஐம்பதினாயிரம் ஓலக் குரல்கள் ஒன்றாகச் சேர்ந்து எழுந்தன!

"விடாதே! பிடி! துரத்து! வெட்டு! குத்து!"

இவ்விதம் நூறு ஆயிரம் குரல்கள் முழங்கின!

பதினாயிரம் ஜயபேரிகைகள் "அதம்! அதம்! அதம்!" என்று சப்தித்தன.

இருபதினாயிரம் வெற்றிச் சங்கங்கள் "பூம்! பூம்! பூம்!" என்று ஒலித்தன.

"ஹா! ஹா! ஹா! ஹா!!" என்று அறுபதினாயிரம் பேய்கள் சிரித்தன.

* * *

வந்தியத் தேவன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். நாலாபுறமும் பார்த்து விழித்தான். பள்ளிப் படைச் சுவரில் சாய்ந்தபடியே சிறிது நேரம் தான் கண்ணயர்ந்து விட்டதாக அறிந்து கொண்டான். அந்த அரைத் தூக்கத்தில் கண்ட பயங்கரமான கனவை மறுபடியும் நினைத்துப் பார்த்தான். கனவுதானா அது? இல்லை! உடுக்கின் முழக்கத்துக்கு இணங்கத் தேவராளன் பாடிய பாடலில் போர்க் களத்தைப் பற்றிச் செய்த வர்ணனைதான் அப்படி அவன் மனக் கண் முன் தோன்றச் செய்திருக்க வேண்டும்.

அச்சமயம் தேவராளன் பாண்டியர் படைக்கு முன்னால் பல்லவரும் கங்கரும் தோற்று ஓடியதைப் பற்றிப் பாடிக் கொண்டிருந்தான். அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் சிரித்த களிச் சிரிப்புத்தான் அப்படி அநேகமாயிரம் பேய்களின் சிரிப்பைப் போல் ஒலித்து வந்தியத் தேவனைத் திடுக்கிட்டுக் கண் விழிக்கச் செய்திருக்க வேண்டும்.

உடுக்கு முழக்கம் திடீரென்று நின்றது. தேவராளனும் பாட்டை உடனே நிறுத்தினான்.

சற்றுத் தூரத்தில் ஒரு தீவர்த்தி வெளிச்சம் தெரிந்தது. அது நெருங்கி நெருங்கி வந்தது. தீவர்த்தி வெளிச்சத்தைத் தொடர்ந்து ஒரு பல்லக்கு வந்தது. பல்லக்கைச் சுமந்து வந்தவர்கள் அதைக் கீழே இறக்கி வைத்தார்கள். பல்லக்கின் திரைகள் விலகின. உள்ளேயிருந்து ஒரு ஸ்திரீ வெளியில் வந்தாள். ஆம்; அவள் பழுவூர் ராணி நந்தினிதான். ஆனால் முன் தடவைகளில் வந்தியத்தேவன் பார்த்தபோது அவள் சர்வாலங்கார பூஷிதையாக, மோகினியாக விளங்கினாள். இப்போது தலைவிரி கோலமான உக்கிர துர்க்கா தேவியாகக் காட்சி தந்தாள்.

அவளை இந்தத் தோற்றத்தில் பார்த்த வந்தியத் தேவனுடைய உள்ளத்தில் ஒரு திகில் தோன்றியது. அவன் உடம்பில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது.

* * *

நந்தினி பல்லக்கிலிருந்து இறங்கியதும் சிம்மாதனத்தில் வீற்றிருந்த சிறுவனைப் பார்த்தாள். அவனையே பார்த்த வண்ணம் நடந்து வந்தாள்.

சிறுவனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். மற்ற அனைவரும் அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சிறுவனைப் பாழும் மண்டபத்துக்குள் தேடி ஓடி வந்த ஸ்திரீ, — அவனால் "அம்மா" என்று அழைக்கப்பட்டவள், சிம்மாதனத்துக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தாள்.

நந்தினி சிறுவன் அருகில் வந்ததும் தன் இரு கரங்களையும் நீட்டினாள்.

சிறுவன் அவளையும் தனக்குப் பின்னால் நின்ற ஸ்திரீயையும் மாறி மாறிப் பார்த்தான்.

"நீதானே என் அம்மா? இவள் இல்லையோ?" என்று கேட்டான்.

''ஆம், கண்மணி!''

''இவள் ஏன் என்னுடைய அம்மா என்று சொல்லிக் கொள்கிறாள்?''

''அவள் உன்னை வளர்த்த தாய்!''

''நீ ஏன் என்னை வளர்க்கவில்லை? ஏன் உன்னுடன் என்னை வைத்துக் கொள்ளவில்லை? இவள் எதற்காக என்னை எங்கேயோ மலைக் குகையில் ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறாள்?''

''கண்மணி! உன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத்தான். உன் தந்தையைக் கொன்றவர்களைப் பழிக்குப் பழி வாங்குவதற்காகத்தான்!''

''ஆமாம்; அது எனக்குத் தெரியும்!'' என்று சிறுவன் எழுந்து நந்தினியை அணுகினான்.

நந்தினி அவனைத் தன் இரு கரங்களாலும் அணைத்துக் கொண்டாள். உச்சி முகந்தாள். சிறுவனும் அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கட்டிக்கொண்டான். மறுபடியும் அவள் தன்னை விட்டுப் போகாமல் இருக்கும் பொருட்டு அவன் அப்படிப் பிடித்துக் கொண்டான் போலும்.

ஆயினும் இந்தக் காட்சி நீடித்திருக்கவில்லை. அவனுடைய குஞ்சுக் கரங்களை நந்தினி பலவந்தமாக எடுத்துத் தன்னை விடுவித்துக் கொண்டாள். சிறுவனைச் சிம்மாதனத்தில் உட்கார வைத்தாள். மீண்டும் பல்லக்கின் அருகில் சென்றாள். அதனுள்ளிருந்து நாம் முன்பு பார்த்திருக்கும் வாளை எடுத்துக்கொண்டாள். பல்லக்குத் தூக்கி வந்தவர்களைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்தாள். அவர்கள் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு சற்றுத் தூரத்தில் போய் மறைவாக உட்கார்ந்து கொண்டார்கள்.

நந்தினி மீண்டும் சிம்மாதனத்தின் அருகில் வந்தாள். கத்தியை அச் சிம்மாசனத்தின் மீது குறுக்காக வைத்தாள்.

சிறுவன் அதை அடங்கா ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டே, ''நான் இதைக் கையில் எடுக்கலாமா?'' என்று கேட்டான்.

''சற்றுப் பொறு, என் கண்மணி!'' என்றாள் நந்தினி.

பிறகு ரவிதாஸன் முதலியவர்களையும் வரிசைக் கிரமமாக உற்றுப் பார்த்தாள்.

''சபதம் எடுத்துக் கொண்டவர்களைத் தவிர இங்கு வேறு யாரும் இல்லையே?'' என்று கேட்டாள்.

''இல்லை, தேவி!'' என்றான் சோமன் சாம்பவன்.

ரவிதாஸனைப் பார்த்து நந்தினி, ''சேநாபதி!...'' என்று ஆரம்பித்தாள்.

ரவிதாஸன் சிரித்தான்.

''இன்றைக்கு உமக்குச் சிரிப்பாயிருக்கிறது. அடுத்த மாதம் இந்த நாளில் எப்படி இருக்குமோ யார் கண்டது?''

''தேவி! அந்த நல்ல நாள் எப்போது வரப் போகிறது என்று எத்தனையோ காலமாக நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம்.''

''ஐயா! நாமோ ஒருசிலர். நம் சக்கரவர்த்தி சின்னஞ் சிறு குழந்தை. சோழ ராஜ்யம் மகத்தானது. சோழர்களின் சேனாபலம் அளவற்றது. நாம் அவசரப்பட்டிருந்தோமானால் அடியோடு காரியம் கெட்டுப் போயிருக்கும். பொறுமையாக இருந்ததினால் இப்போது காரிய சித்தி அடையும் வேளை நெருங்கியிருக்கிறது. ரவிதாஸரே! நீர் ஏதாவது சொல்ல வேண்டி யிருக்கிறதா? இங்குள்ள வேறு யாரேனும் ஏதாவது சொல்ல வேண்டியிருக்கிறதா?''

ரவிதாஸன் அங்கே இருந்தவர்களின் முகங்களை வரிசையாகப் பார்த்துக் கொண்டு வந்தான். அனைவரும் மோன விரதம் கொண்டவர்களாய்க் காணப்பட்டார்கள்.

''தேவி! நாங்கள் சொல்ல வேண்டியது எதுவும் இல்லை. தாங்கள்தான் சொல்ல வேண்டும். சபதம் நிறைவேறும் வேளை நெருங்கி விட்டது என்றீர்கள். எங்கே, எப்படி, யார் மூலமாக நிறைவேறப் போகிறது என்று சொல்லி அருள வேண்டும்'' என்றான்.

''ஆகட்டும். அதைச் சொல்லுவதற்காகவே இங்கு வந்தேன். அதற்காகவே உங்கள் எல்லோரையும் தவறாமல் வரச் சொன்னேன். நம்முடைய சக்கரவர்த்தியையும் அழைத்து வரச் செய்தேன்'' என்றாள் நந்தினி.

சிம்மாசனத்தில் வீற்றிருந்த சிறுவன் உள்பட அனைவரும் நந்தினியின் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். அவள் மேலும் கூறினாள்:

''உங்களில் சிலர் அவசரப்பட்டீர்கள். நாம் எடுத்துக் கொண்ட சபதத்தை மறந்துவிட்டேனோ என்றும் சிலர் சந்தேகப்பட்டீர்கள். அந்தச் சந்தேகம் அடாதது. மறவாமல் நினைவு வைத்துக் கொள்ள உங்கள் எல்லோரைக் காட்டிலும் எனக்குத்தான் காரணம் அதிகம் உண்டு. இல்லை; நான் மறக்கவில்லை. சென்ற மூன்று ஆண்டுகளாக அல்லும் பகலும் அனவரதமும் நான் வேறு எதைப் பற்றியும் சிந்தித்ததில்லை. நாம் எடுத்துக் கொண்ட சபதத்தின்படி பழி வாங்குவதற்குச் சமய சந்தர்ப்பங்களையும் தந்திர உபாயங்களையும் தவிர வேறு எதையும் பற்றி நான் எண்ணியதில்லை. எங்கே சென்றாலும் என்ன



'பட்' என நடுத்தர மக்களின் தலையில் ஒரு போடு போட்டு, ஜெட் வேகத்தில் விலைவாசிகளை ஏற்றி விடுவதுதான் பட்ஜெட்.

- லட்சுமி ராமஸ்வாமி.

காரியம் செய்தாலும், யாரிடம் பேசினாலும் நமது நோக்கம் நிறைவேறுவதற்கு அதனால் உபயோகம் உண்டா என்பதைத் தவிர வேறு நினைவு எனக்கில்லை. சமய சந்தர்ப்பங்கள் இப்போது கூடியிருக்கின்றன. சோழ நாட்டுச் சிற்றரசர்களும் பெருந்தர அதிகாரிகளும் இரு பிரிவாகப் பிரிந்திருக்கிறார்கள். பழுவேட்டரையர், சம்புவரையர் முதலானோர் மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட முடிவு செய்துவிட்டார்கள். கொடும்பாளூர் பூதிவிக்கிரமகேசரியும் திருக்கோவலூர் மலையமானும் அதற்கு விரோதமாயிருக்கிறார்கள். பூதி விக்கிரமகேசரி தென் திசைச் சைன்யத்துடன் தஞ்சை நோக்கி வருவதாகக் கேள்விப்படுகிறேன். திருக்கோவலூர் மலையமான் படை திரட்டி வருவதாகவும் அறிகிறேன். இரு தரப்பாருக்கும் எந்த நிமிஷமும் யுத்தம் மூளலாம்..."

"தேவி! அப்படி யுத்தம் மூளாதிருப்பதற்குத் தாங்கள் பெரு முயற்சி செய்து வருவதாகக் கேள்வியுறுகிறோம். கடம்பூர் சம்புவரையன் மாளிகையில் சமரசப் பேச்சு நடக்கப் போவதாக அறிகிறோம்."

"ஆமாம்; அந்த ஏற்பாடு செய்திருப்பது நானேதான். ஆனால் என்ன காரணத்துக்காகவென்று உங்களால் ஊகிக்க முடியவில்லையா?"

"முடியவில்லை, ராணி! ஒரு பெண் உள்ளத்தின் ஆழத்தைக் கண்டு பிடிக்கச் சர்வேசுவரனால்கூட முடியாது என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்களால் எப்படி முடியும்?"

"அது உங்களால் முடியாத காரியந்தான். நான் சொல்கிறேன்; தெரிந்து கொள்ளுங்கள். நம்முடைய சபதம் நிறைவேறுவதற்கு முன்னால் சோழ ராஜ்யத்தில் இந்த உள்நாட்டுச் சண்டை மூண்டால், அதன் விளைவு என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. சுந்தர சோழன் இன்னும் உயிரோடிருக்கிறான்; அன்பில் பிரம்மராயன் ஒருவனும் இருக்கிறான். இவர்கள் தலையிட்டு இரு கட்சிக்காரர்களையும் அடக்கி விடுவார்கள். அல்லது ஒரு கட்சி தோற்று இன்னொரு கட்சி வலுத்து விட்டாலும் நம்முடைய நோக்கம் நிறைவேறுவது அசாத்தியமாகி விடும். அதற்காகவே இந்தச் சமாதானப் பேச்சை இப்போது தொடங்கியிருக்கிறேன். சண்டை உண்மையாக மூளுவதற்குள்ளே நம் நோக்கத்தை நிறைவேற்றிவிட வேண்டும். அப்படி நிறைவேறியபிறகு சோழ ராஜ்யத்துச் சிற்றரசர்களுக்குள் மூளும் சண்டைக்கு முடிவேயிராது. இரு கட்சியாரும் சர்வ நாசம் அடையும் வரையில் சண்டை நடந்து கொண்டேயிருக்கும். இப்போது தெரிகிறதா?.... சமாதானப் பேச்சு தொடங்கியதன் காரணம்?"

இதைக் கேட்டதும் அங்கே சூழ்ந்து நின்றவர்கள் எல்லாருடைய முகங்களிலும் வியப்புக்கும் உற்சாகத்துக்கும் அறிகுறிகள் காணப்பட்டன. பழூர் இளைய ராணியின் மதி நுட்பத்தை வியந்து அவர்கள் ஒருவருக்கொருவர் மெல்லிய குரலில் பேசிக் கொண்டார்கள். ரவிதாஸனும்கூட ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை.

"தேவி! தங்களுடைய அபூர்வமான முன் யோசனைத் திறனை வியக்கிறோம். சமாதானப் பேச்சின் கருத்தை அறிந்து கொண்டோம். ஆனால் சபதம் நிறைவேறும் நாள் நெருங்கி விட்டது என்றீர்கள். அதை நடத்துவது யார்? எப்படி? எப்போது?" என்றான்.

"அதற்கும் சேர்த்துத்தான் இந்த யுக்தி செய்திருக்கிறேன். சமாதானப் பேச்சு என்ற வியாஜத்தின் பேரில் நமது முதற் பகைவனைக் கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்கு வரும்படி அழைப்பு அனுப்பியிருக்கிறது. அவன் அங்கே கட்டாயம் வந்து சேருவான். நம்முடைய சபதத்தை அங்கேதான் நிறைவேற்றியாக வேண்டும். வீர பாண்டிய சக்கரவர்த்தியின் ஆபத்துதவிகளே! உங்களுடைய பழி தீரும் வேளை நெருங்கி விட்டது. இன்றைக்குச் சனிக்கிழமையல்லவா? அடுத்த சனிக்கிழமைக்குள் நம்முடைய சபதம் நிறைவேறிவிடும்!..."

அங்கே இருந்த இருபது பேர்களும் ஏககாலத்தில் 'ஆஹா'காரம் செய்தார்கள்.

சிலர் துள்ளிக் குதித்தார்கள்.

உடுக்கு வைத்திருந்தவன் உற்சாக மிகுதியினால் அதை இரண்டு தடவை தட்டினான்.

மரக்கிளைகளில் தூங்கிக் கொண்டிருந்த ஆந்தைகள் விழித்து உறுமிக் கொண்டு வேறு கிளைகளுக்குத் தாவின.

வௌவால்கள் சடசட வென்று சிறகுகளை அடித்துக் கொண்டு ஓடின.

வந்தியத்தேவனுடைய குதிரை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டது.

வந்தியத்தேவனும் நிமிர்ந்து பார்த்தான். நந்தினி தன்னைச் சுற்றியிருந்தவர்களிடம் ஏதோ பரபரப்புத் தரும் விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாள் என்பது மட்டுந்தான் தெரிந்தது. அவளுடைய பேச்சு ஒன்றும் அவன் காதில் விழவில்லை.

ரவிதாஸன் மற்றவர்களுடைய உற்சாகத்தைக் கையமர்த்தி அடக்கினான்.

''தேவி! தங்களுடைய கடைசி வார்த்தை எங்களுக்கு அளவிலாத குதூகலத்தை அளித்திருக்கிறது. நமது முதற் பகைவனைக் கொன்று பழி முடிக்கும் காலம் இவ்வளவு அண்மையில் வந்திருப்பதை எண்ணிக் களிக்கிறோம்! ஆனால், பழி முடிக்கும் பாக்கியம் யாருக்கு?'' என்று கேட்டான்.

''அதற்கு நமக்குள் போட்டி ஏற்படுவது இயற்கைதான். அதை யாருக்கும் மனத் தாங்கல் இல்லாத முறையில் முடிவு செய்வதற்காகவே வீர பாண்டியரின் திருக் குமார சக்கரவர்த்தியை இங்கு அழைத்து வரச் செய்தேன். வீர பாண்டியரின் கத்தியும் இதோ இருக்கிறது. இந்தச் சின்னஞ்சிறு குழந்தை தந்தையின் கத்தியைத் தொட்டு நம்மில் எவர் கையில் கொடுக்கிறதோ, அவர் பழி முடிக்க வேண்டும். மற்றவர்கள் அக்கம் பக்கத்தில் உதவிக்குச் சித்தமாக நிற்க வேண்டும். ஏற்றுக் கொண்டவர் தவறி விட்டால் மற்றவர்கள் முன்வந்து முடிக்க வேண்டும். கடம்பூர் மாளிகைக்குள்ளேயே நான் இருப்பேன். இடும்பன்காரி கோட்டைக் காவலர்களில் ஒருவனாக இருப்பான். பழி முடிக்கும் பொறுப்பு ஏற்றுக் கொண்டவர் மாளி

பந்தை அடித்தார்; பொத்தென்று விழுந்தார்!



ஒரு நாள் காலையில் டில்லியிலிருந்து ஒரு பெரிய மனிதர் கால்ஃப் பயிற்சிக்கு வந்தார். அவரோடு வந்த சினிமா நட்சத்திரம் ராஜ் கபூர் சிவப்பு சில்க் ஷர்ட்டும் பைஜாமாவும் அணிந்து ஜொலித்தார். முதலில் பயிற்சியாளர் பெரிய மனிதருக்கு எப்படி கால்ஃப் ஆடுவது என்பதைச் சொல்லிக் கொடுத்தார். எந்த விளையாட்டும் தேர்ந்த பயிற்சியாளர் சொல்லிக் கொடுக்கும்போது எளிதாகத்தான் தோன்றும்.


நடிகர் ராஜகபூருக்கும் அவ்வாறே கால்ஃப் ஆட்டம் மிக எளிதாகவே தோன்றியது போலும்! தமது நண்பர் பயிற்சியாளரிடம் சிரமப்பட்டுப் பலதடவை ஆடக் கற்றுக் கொள்வது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. 'இந்தச் சிறு பந்தை அடிக்க இத்தனை முஸ்தீபுகள் தேவையா?' என்று கருதினார் நடிகர் ராஜ் கபூர். தம் மனத்தில் பட்டதை நடிகர் அந்தப் பயிற்சியாளரிடம் எடுத்துரைத்தார்.

''பந்தை அடிப்பது அவ்வளவு கஷ்டம் என்கிறீர்களா? நான் உங்களுக்கு மூன்று தடவை சான்ஸ் தருகிறேன். ஒவ்வொரு தடவை பந்தை அடிப்பதற்கும் ஒரு ரூபாய் தருகிறேன்!'' என்று பயிற்சியாளர் நடிகரிடம் கூறினார்.

இவரிடமிருந்து தாம் ஒரு ரூபாய் வாங்குவதா? ராஜ்கபூருக்கு அவமானம் பிடுங்கித் தின்றது. உடனே அவர், ''நான் ஒவ்வொரு தடவை பந்தை அடிக்கும்போதும் எனக்கு நீங்கள் ஒரு ரூபாய் கொடுங்கள். நான் பந்தை அடிக்கத் தவறினால் உங்களுக்கு ஒவ்வொரு தடவையும் ஐந்து ரூபாய் தருகிறேன்!'' என்று விருப்புடன் பேசினார்.

நடிகர் ராஜகபூர் ராஜநடை போட்டு கால்ஃப் குச்சியைப் பிடித்துக் கொண்டு ஆட முன்வந்தார். ரொம்ப வேகத்தோடு பந்தை அடிக்க முற்பட்டார். தடுமாறிக் கீழே விழுந்தார். புரண்டு எழுந்ததும் அவர் முகம் ரத்தச் சிவப்பேறியது. மேலும் இரண்டு தடவை முயன்றார். பந்து இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. இதன் பிறகுதான் நடிகர் ராஜகபூருக்கு இந்த ஆட்டத்தில் உள்ள கஷ்டம் புரிய வந்தது. பதினைந்து ரூபாயை பையிலிருந்து எடுத்துப் பயிற்சியாளரிடம் கொடுத்தார். 'எனக்கு சினிமாவில் நடிக்கத் தெரியும்; உங்களுக்கு கால்ஃப் ஆடத் தெரியும்' என்று சொல்லி நடையைக் கட்டினார்!

—குண்டுமணி



''என்ன சார் நீங்க, இந்த மண்டை பிளக்கும் வெய்யிலில் ரெண்டு குடைகூட இல்லாமே போறீங்களே ?''

கைக்குள் பிரவேசிப்பதற்கு நாங்கள் உதவி செய்வோம். இந்த ஏற்பாடு உங்களுக்கெல்லாம் சம்மதந்தானே ?''

ஆபத்துதவிகள் ஒருவரை யொருவர் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டார்கள். எல்லாருக்கும் அந்த ஏற்பாடு சம்மதமாகவே தோன்றியது.

ரவிதாஸன் கூறினான்: ''தாங்கள் சொன்னது சரியான ஏற்பாடுதான். அதற்கு நாங்கள் எல்லாரும் சம்மதிக்கிறோம். ஆனால் இன்னும் ஒரு விஷயம். பழி முடிக்கும் பொறுப்பு யாருக்குக் கிடைக்கிறதோ, அவர் சொல்கிறபடி மற்றவர்கள் கண்டிப்பாகக் கேட்கிறதென்று வைத்துக் கொள்ள வேண்டும். சக்கரவர்த்திக்குப் பிராயம் வருகிற வரையில் பழி முடித்தவன் இட்டதே சட்டமென்று மற்ற அனைவரும் நடந்து கொள்ள வேண்டும்.''

இதைக் கேட்ட நந்தினியின் முகத்தில் புன்னகை அரும்பியது.

'' என்னையும் உட்படுத்தித்தானே சொல்கிறீர்?'' என்று கேட்டாள்.

''ஆம், தேவி! விதிவிலக்குச் செய்ய முடியாது!'' என்றான் ரவிதாஸன்.

''சந்தோஷம். இப்போது ரவிதாஸர் கூறியதும் உங்கள் எல்லோருக்கும் சம்மதந்தானே ?'' என்று நந்தினி மற்றவர்களை நோக்கி வினவினாள்.

எல்லாரும் ஒருவரையொருவர் பார்த்தார்கள். மறுமொழி சொல்வதற்குத் தயங்கினார்கள். சிலருக்கு அந்த ஏற்பாடு சம்மதம் இல்லை என்று தோன்றியது.

சோமன் சாம்பவன், ''அது எப்படி நியாயமாகும்? நமக்கு எல்லா உதவியும் அளித்து வரும் தேவியை எப்படிப் பொது விதிக்கு உட்படுத்த முடியும் ?'' என்று கேட்டான்.

''என்னைப் பற்றிக் கவலை வேண்டாம். நான் உயிர் வாழ்ந்திருப்பதே வீரபாண்டிய சக்கரவர்த்தியின் கொடூரக்கொலைக்குப் பழி வாங்குவதற்காகத்தான். அந்தப் பழியை முடித்துக் கொடுக்கிறவர் யாராயிருந்தாலும், அவருக்கு நான் என்றென்றும் அடிமையாக இருக்கச் சித்தம் !'' என்றாள் நந்தினி.

பின்னர், இந்தப் பேச்சுக்களையெல்லாம் புரிந்தும் புரியாமலும் கேட்டுக் கொண்டிருந்த சிறுவனை நந்தினி தேவி பார்த்து, ''என் கண்மணி! இந்த வீரவாள் உன் தந்தையினுடையது. இதை உன் குஞ்சுக் கையினால் எடுத்து இங்கே உள்ளவர்களில் உனக்கு யாரை அதிகமாய்ப் பிடித்திருக்கிறதோ, அவரிடம் கொடு !'' என்றாள்.

ரவிதாஸன் சற்று அருகில் வந்து, ''சக்கரவர்த்தி! எங்களையெல்லாம் நன்றாய்ப் பாருங்கள்! எங்களில் யார் வீரன் என்றும், தைரியசாலி என்றும் தங்களுக்குத் தோன்றுகிறதோ, அவனிடம் இந்தப் பாண்டிய குலத்து வீரவாளைத் தொட்டுக் கொடுங்கள்!'' என்றான்.

சிம்மாசனத்தில் வீற்றிருந்த சிசு சக்கரவர்த்தி சுற்றுமுற்றும் பார்த்தான்.


எல்லாரும் அடங்காத ஆவலுடனும் பரபரப்புடனும் சக்கரவர்த்தியின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவருடைய கண்களும், ''என்னிடம் கொடுங்கள் ! என்னிடம் கொடுங்கள்!'' என்று கெஞ்சும் பாவத்தைக் காட்டின.

ரவிதாஸனுடைய முகமும் கண்களும் மட்டும், ''என்னிடம் கொடுங்கள்!'' என்று அதிகார பூர்வமாகப் பயமுறுத்திக் கட்டளையிட்டன.

சிறுவன் இரண்டு மூன்று தடவை எல்லாரையும் திருப்பித் திருப்பிப் பார்த்த பின்னர், கத்தியைக் கையில் எடுத்தான். அதைத் தூக்க முடியாமல் தூக்கினான்.

அனைவருடைய பரபரப்பும் சிகரத்தை அடைந்தது.

சிறுவன் பளிச்சென்று நந்தினி நின்ற பக்கம் திரும்பினான். ''அம்மா! எனக்கு உன்னைத்தான் எல்லாரைக் காட்டிலும் அதிகமாகப் பிடித்திருக்கிறது. நான் பெரியவனாகும் வரையில் நீதான் எனக்காக இராஜ்யத்தை ஆள வேண்டும்!'' என்று சொல்லிக் கொண்டே வாளை அவளிடம் கொடுத்தான். (தொடரும்)



23

அஹிம்ஸை என்பது பேரடங்கலான ஒரு தத்துவம். பிரபஞ்சம் ஹிம்ஸை என்கிற பெரிய தீயில் அகப்பட்டுக் கிடக்கிறது. அதில் சிக்கி யிருக்கும் நாம் என்ன செய்ய முடியும்? உயிருக்கு உயிர் உணவாக உலகம் அமைக்கப் பட்டிருக்கிறது. ஜீவ ஹிம்ஸை தெரிந்தோ, தெரியாமலோ சற்றேனும் செய்யாமல் ஒரு நிமிஷம் கூட வாழ முடியாது. சாப்பிடும்போதும் நீர் அருந்தும் போதும் இடம் பெயர்ந்து அசையும் பொழுதும் உயிர் கொண்ட மனிதன் பிற உயிரை ஒவ்வொரு நிமிஷமும் துன்புறுத்தியோ கொன்றோதான் வருகிறான். கண்ணுக்குக் காணாத உயிர்களாயிருப்பினும் உயிர்கள்தானே! ஆன படியால் அஹிம்ஸை பக்தன் அஹிம்ஸைக் கொள்கையை இவ்வளவுதான் செய்ய முடியும். உள்ளத்திலும் ஒவ்வொரு செயலிலும் கருணை இருக்க வேண்டும். ஆனமட்டில் எந்தச் சிறு உயிரையும் ஹிம்ஸை செய்யாமல் இருக்கப் பார்க்க வேண்டும். கொல்லாமல் உயிர்களைக் காப்பாற்றப் பார்க்க வேண்டும். நம்மை வளைத்துப் பற்றிக் கொண்டிருக்கும் ஹிம்ஸையிலிருந்து ஒவ்வொரு கணமும் இடை விடாமல் தப்பித்துக் கொள்ள முயல வேண்டும். அவ்வளவேதான். இப்படிச் செய்தோமானால், புலனடக்கமும் இரக்கமும் வளர்ந்து கொண்டே போகும். ஆனால் ஒரு நாளும் ஹிம்ஸை என்கிற குற்றத்திலிருந்து முற்றிலும் தப்ப முடியாது.

(சுய சரிதம்)

தவிர, நாம் என்ன செய்தபோதிலும் பிறருடைய ஹிம்ஸையிலும் நமக்குப் பங்குண்டு. அதிலிருந்து தப்புவதும் கஷ்டம். உயிர்கள் எல்லாம் ஒன்றே அல்லவா? ஒருவனுடைய பிழை அனைவரையும் சார்கிறது. சமூகத்தில் நடைபெறும் குற்றங்கள் எல்லாம் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவனையும் பொறுத்தது. இல்லாவிடில் ஒருவன் சமூகத்தில் அடங்கியவன் ஆகமாட்டான். இரண்டு மனித ஜாதிகளுள் சண்டை ஆரம்பித்தால் அஹிம்ஸா வாதியினுடைய கடமை யுத்தத்தை நிறுத்தவேண்டியது. ஆனால் அப்படிச் செய்யச் சக்தி இல்லாதவன், யுத்தத்தை எதிர்த்து நிற்கும் வலிமையற்றவன், தன்னுடைய அரசாட்சி யுத்தத்தில் புகுவதை எதிர்ப்பதற்கு வேண்டிய தகுதியைப் பெறாதவன், யுத்தத்தில் கலந்து கொண்டேதான் போக வேண்டும். ஆயினும் அதிலிருந்து தானும் தன் ஜாதியும் உலகமும் தப்புவதற்கு வேண்டிய காரியங்களை இடைவிடாமல் செய்து கொண்டே போக வேண்டும். (சுய சரிதம்)



மாரீசனுடைய முகமானது சுண்டி வாய் உலர்ந்தது. ராவணனைக் கண் கொட்டாமல் பார்த்தவண்ணமாக நின்றான். ராமனுடைய பராக்கிரமத்தை அறிந்த மாரீசன் ராவணனுடைய தீர்மானத்தைக் கேட்டுப் பயந்து போனான். அநுபவம் பெற்ற அறிவாளியும் தவமிருந்து ஓரளவு ஞானமும் ஈசுவர பக்தியும் அடைந்தவனும் ஆன மாரீசன் பார்த்தான். ராவணனுடைய உள்ளத்தை அறிந்து கொண்டான். 'விதி இவனைக் கயிறு போட்டு இழுத்துப் போகிறது. இதை இனி தடுக்க முடியாது' என்று கண்டு கொண்டான். ராவணன், குலத்தின் கௌரவம், அரசியல் நீதி, சூர்ப்பனகையின் அவமானம் இவற்றையெல்லாம் காரணம் காட்டிப் பேசினானே யொழிய, சீதையை அபகரிக்கும் துன்மார்க்க எண்ணத்திலேதான் அவன் புத்தியை இழந்து விட்டான். மாரீசன் அதை நன்றாகத் தெரிந்து கொண்டான்.

* * *

சூர்ப்பனகையின் கருத்தையும் நாம் கொஞ்சம் ஆராய வேண்டும். காம வெறியினால் அவளுக்கு அனர்த்தம் ஏற்பட்டது. மூக்கு அறுத்ததும் துன்பப் படுத்தியதும் லக்ஷ்மணன். ஆயினும், ஸ்திரீ சுபாவம், அவன் மேல் அவ்வளவு கோபம் இல்லை. தன் எண்ணம் நிறைவேறாமல் போனதற்குக் காரணம் நடுவிலிருந்த சீதைதான்; அவளுடைய அழகும் குணமுமே தன்னைக் கெடுத்தன என்று அவள் பேரில் சூர்ப்பனகைக்கு அதிக ரோஷம் உண்டாகிவிட்டது. அவளை அவமானப்படுத்திப் பழி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே சூர்ப்பனகையின் உள்ளத்தைப் பற்றிக் கொண்ட ஆசை. ராவணனை அந்தக் காரியத்தில் உபயோகிக்கவே அவள் சீதையின் உருவத்தைக் காமாதுரனான ராவணன் முன் நிறுத்தி அவன் எண்ணத்தை அந்த வழியில் செலுத்தினான். மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசியதெல்லாம் சந்து அடைக்கவே. குலத்தின் கௌரவம், பந்துக்கள் உயிர் இழந்தது முதலிய காரணங்களைச் சேஷ பூரணமாகச் சேர்த்துச் சொல்லி ராவணனுக்கு வழிகாட்டினாள். முக்கிய நோக்கம் காமத்தைத் தூண்டி ராவணனைச் சீதையண்டை போகச் செய்வது. அவனும் இந்தச் சூழ்ச்சிக்குள் அகப்பட்டுப் போனான்.

49. மாரீச மான்

மாரீசன் ராவணனைப் பார்த்துச் சொன்னான்:

"ராக்ஷஸ மன்னனே! நீ சொன்னதை யெல்லாம் கேட்டேன். உன் பேச்சைக் கேட்டு எல்லையற்ற துக்கம் உண்டாகிறது. யோசனை சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படும்போது, கேட்பதற்கு இனிமையான வார்த்தைகளைப் பேசுவது சுலபம். ஆனால், பிரியப் படாத ஹிதத்தைக் கண்டிப்பாகச்

சொல்லுவதற்கு யாரும் முன்வர மாட்டார்கள்; சொன்னாலும் யாரும் கேட்பார் இல்லை. எப்படியாயினும் உனக்கு நன்மையைச் சொல்ல விரும்புகிறேன். தித்திப்பாகப் பேசிவிட்டு உன்னைத் திருப்தி செய்து விட்டு, உன்னை அபாயத்தில் தள்ளிக் கெடுத்து விடுவதில் எனக்கு இஷ்டமில்லை.

''ராமனைப் பற்றி உனக்குச் சொல்லியிருக்கிறவர்கள் உண்மையைச் சொல்லவில்லை. அறியாதவர்களுடைய பேச்சைக் கேட்டு ஏமாந்து போகாதே. ராமன் மகா வீரன். உத்தம குணங்கள் வாய்ந்தவன். அவனுடைய கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டு குலமும் லங்காபுரியும் அழிந்து போவதற்கு வழி தேடாதே. சீதை உன்னை நாசம் செய்வதற்காகவே அவதரித்தாளோ என்னவோ! உன்னை அரசனாகக்கொண்ட அரக்கர் குலமும் லங்காபுரியும் சீக்கிரத்தில் ராமனால் நாசம் செய்யப்படும். உலகத்தில் உள்ள ராக்ஷஸ குலமே நிர்மூலமாவதற்கு வழி தேடுகிறாய். யார் உனக்கு இந்த எண்ணத்தைத் தூண்டியது? பெரும் விபத்துக்கு உன்னையும் உன் ராஜ்யத்தையும் உன் குலத்தாரையும் ஆளாக்கவே இந்தக் கெட்ட உபதேசம் யாரோ செய்திருக்கிறார்கள்.

''ராமனுடைய தந்தை அவனிடம் குற்றம் கண்டு அவனைக் காட்டுக்குத் துரத்தவில்லை. அவனைப் பற்றி நீ சொன்னதெல்லாம் தவறு. அரசன் தன் மனைவி கைகேயிக்குக் கொடுத்திருந்த வாக்கை நிறைவேற்றித் தருவதற்காக ராமன் தானாக வனம் சென்றான். தந்தையின் சத்தியத்தைக் காப்பதற்காக ராஜ்யம், போகம் எல்லாவற்றையும் தானாகவே விட்டு விட்டுத் தண்டகாரண்யம் சென்றான். சிற்றின்பக்காரன், மோசக்காரன் என்றெல்லாம் உனக்கு யார் சொன்னது? சுத்த பொய். ராமன் தருமமே உருவெடுத்த புருஷன். அறவழியில் பராக்கிரமம் செலுத்துகிறவன். தேவர்களுடைய உலகத்தில் இந்திரனைப் போல் இந்த உலகத்து மக்களில் ராமன் முதன்மை இடம் பெற்ற வீரன். அவன் மனைவியை நீ ஆசைப்படலாமா? இது



நடக்கும் காரியமா? அவள் உன் வசப்படுவாளா? சூரியனை ஏமாற்றிச் சூரியனுடைய ஒளியைத் திருட முடியுமா? ஜனக புத்திரி சீதையின் தேஜஸை நீ தீண்ட முடியுமா? எரிந்து போவாய். ராமனுடைய பாணங்களுக்கு இரையாகாதே! அவனை உனக்கு ஒரு யமனாகச் செய்து கொள்ளாதே. அவனால் காக்கப்படும் இந்த நெருப்பைத் தீண்டப் போகாதே. உன் சர்வ நாசத்துக்கு வழி தேடிக் கொள்ளாதே.

''பூரணமாக யோசிக்காமல் ஒரு காரியத்தில் பிரவேசிக்கலாகாது. ராமனுடன் யுத்தம் செய்து நீ வெற்றி பெற மாட்டாய். அரக்கர்களின் அரசனே! நான் சொன்னதைப் புறக்கணிக்காதே. முன்னால் நான் தேக பலம் கொண்ட செருக்கினால் ரிஷிகளைக் கொன்று தின்று அவர்களுடைய விரதங்களையும் வேள்விகளையும் அழித்து வந்தேன் அல்லவா? அந்தக் காலத்தில் விசுவாமித்திர முனிவர் செய்த வேள்வியைக் கெடுக்கப் போனேன். இந்த ராமன் அந்த நாளில் சிறுவனாக இருந்தவனை விசுவாமித்திர முனிவர் தசரதனைக் கேட்டுத் தம் வேள்வியைக் காக்க அழைத்து வந்திருந்தார். அந்த முனிவருக்கு இவனுடைய சௌரியம் அப்போதே தெரிந்திருந்தது. நான் வேள்வித் தீயை அழிக்கச் சென்றேன். இந்தப் பாலன் தன் வில்லை வளைத்துச் செலுத்திய பாணமானது என்னைச் சமுத்திரக் கரையில் கொண்டு போய்த் தள்ளி வெகு நேரம் பிரக்ஞை இழந்து கிடந்தேன்.

''இவனுடைய கோபத்தைச் சம்பாதித்துக் கொள்ளாதே. செல்வமும் சிற்றின்பங்களும் அடைந்து சுகமாக இருக்கும் உன் அரக்கர் குலத்துக்கு நாசத்தைத் தருவித்துக் கொள்ளாதே. சீதையை அடையப் போய் அழகும் செல்வமும் நிறைந்திருக்கும் உன் நகரத்தை வீணாகப் பாழாக்கி மரணம் அடையாதே. நீ அடையப் போகும் நாசம் இப்போதே என் மனக்கண் முன் நிற்கிறது. எரியும் லங்கையைப் பார்க்கிறேன். பெரும் பாவத்தில் இறங்கப் பார்க்கிறாய். வேண்டாம். உன்னுடைய கோபத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாதாயின் ராமனுடன் நேராக யுத்தம் செய். அக்கிரம மோசத்தில் உன்னை இழக்காதே. உன் மனைவிகளுடன் சுகமாக இரு. நூற்றுக் கணக்காக வைத்திருக்கிறாயே. அது போதாதா? உன் பந்து மித்திரர்கள் அனைவருக்கும் விநாசம் தருவித்துக் கொடுத்து நீயும் அழிந்து போவதற்கு வழி தேடாதே! யமனை அழைக்காதே!''

இவ்வாறு ராவணனுடைய நன்மையைக்கருதி மாரீசன் வெகு நேரம் பேசினான். அது ராவணனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. காமத்தால் தூண்டப்பட்டவனுக்கு நல்ல யோசனை சொல்லி என்ன பயன்? நோயாளி மருந்தை வேண்டாம் என்பது போல் ஒரே பிடிவாதமாக ராவணன், ''நீ சொல்வது சரியல்ல. நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்'' என்று மாரீசனுடைய புத்திமதியைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

''அரசன், ஒருவனிடத்தில் போய் இன்னது செய்யலாமா, வேண்டாமா என்று யோசனை கேட்டால் அதைப் பற்றி அவன் லாபா லாபம் ஆராய்ந்து சொல்லலாம். ஆனால் உன்னிடம் நான் யோசனை கேட்க வரவில்லை. 'இதைச் செய்யத் தீர்மானித்தேன். இதற்கு நீ இந்த உதவி செய்ய வேண்டும்' என்று அரசன் கேட்கும்போது அரசனிடம் நடந்து கொள்ள வேண்டிய மரியாதையை மறந்து. 'நீ செய்யப் போவது தவறு' என்று சொல்கிறாய். நான் இந்த விஷயத்தில் முற்றிலும் ஆலோசித்து முடிவுக்கு வந்து விட்டேன். இந்த மானிடப் பதருடன் நான் யுத்தம் செய்யலாகாது. ஊரிலிருந்து துரத்தப்பட்டவன், அதமன், ஒரு ஸ்திரீயின் சூழ்ச்சியால் ஏமாற்றப்பட்டு ராஜ்யப் பதவியை இழந்த முட்டாள். இவனோடு நான் சமான எதிரியாக நின்று போர் செய்வேனா? அது முடியாது. இத்தகைய ஆளுக்குச் சரியான தண்டனை அவன் மனைவியைத் தூக்கிப் போய் அவனை அவமானப்படுத்துவதே. இது நான் தீர்மானித்துவிட்ட சங்கதி. அதைப் பற்றி உன்னைக் கேட்கவில்லை. நான் சொல்லுவதை நீ செய்ய வேண்டும். நீ ஒரு விசித்திர மாய மான் வடிவம் எடுத்துக் கொண்டு சீதையின் கண்ணைக் கவர்ந்திழுக்க வேண்டும். இதைத் தான் நான் கேட்கிறேன். மானைப் பிடிக்கச் சீதை ராமனை அனுப்புவாள். நீ ராமனைத் தூரமாக இழுத்துச் சென்று, 'ஹா, சீதா! ஹா, லக்ஷ்மணா!' என்று ராமன் குரலில் கூப்பிட வேண்டியது. அதைக் கேட்டு ராமனுக்கு ஏதோ ஆயிற்று என்று சீதை லக்ஷ்மணனை ராமனுக்குச் சகாயமாக அனுப்பி விடுவாள். நான் அந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு சீதையைத் தூக்கிக் கொண்டு இலங்கைக்குப் போவேன். இந்தக் காரியத்தில் நீ உதவி செய்துவிட்டுப் பிறகு உன் இஷ்டப்படி போகலாம். இல்லையென்றாயாகில் இங்கேயே என்னால் வதம் செய்யப்படுவாய்'' என்றான். (தொடரும்)


சிலையைத் தேடி...
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
27
அவர்கள் தப்பி விட்டார்கள். அவர்களோடு அந்தப் புத்தர் சிலையும் போகிறதே, ஐயோ!
அந்தச் சின்னப்படகு வேகமாகப் போகலாம். ஆனால் இந்தக் கடலில் அதனால் அதிக தூரம் போகமுடியாது. நாம் அவர்களைப் பிடித்துவிடலாம். கவலைப் படாதே.
ஹரிசரண் வர்மாவின் பெரிய விசைப் படகு வேகமாக விரைந்தது. ஆனால் அதே சமயம் புயலின் உக்கிரமும் அதிகமாயிற்று. இருள் — மூண்டது.......
அந்தப் பக்கமாக.. அந்தச் சதிகாரர்களின் படகை இங்குதான் பார்த்தேன். காற்று கடல் நீரை வாரிவீசுகிறதே.. எதுவுமே தெரியவில்லையே.
மலை போல எழும் கடல் அலைகளினூடே, அந்தப் படகை அன்னம் போல மிதந்து செல்லும்படி ஓட்டினார் திறமையுடன் ஹரிசரண் வர்மா.
ஆனாலும் அந்தப் பயங்கரப் புயலில் அதிக நேரம் திசை தெரியாமல் தவிக்க முடியாதென்பதை உணர்ந்த வர்மாவும் மகளுக்குக் கட்டளையிட்டார்...
ஷோபா, கரையிலிருந்து உதவி கோரி அந்த ராக்கெட்டுகளைக் கொளுத்தி விடு. அந்த ஆகாச வாணங்கள் நமக்குத் தக்க சமயமாகத் தக்க உதவியுடன் படகுகளை அனுப்பி வைக்கும்!
ஷோபா கொளுத்திவிட்ட ஆகாச வாணங்கள் வானத்திலே ஒளி சிந்தி உதவி கேட்டு நின்றன.
அதோ.. ஆபத்துக்கால ஆகாச வாணம்! யாரோ கடலில் புயலில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள்.. வாருங்கள் மீட்புப் படகுகளோடு விரைவோம்.
நடுக்கடலில், புயல் நடுவில் நீசனின் விசைப்படகு சங்கடத்துக்குள்ளாகியது.
எஞ்சினில் என்ன கோளாறு? சனியன். நல்ல சமயத்தில்...
மோட்டார் இயங்கவில்லை. எங்கோ அடைப்பு ஏற்பட்டிருக்கிறது...


முட்டாள்! நல்ல படகைக் கொண்டு வரக் கூடாது? ஏதாவது செய்து ஓட்டவை. நாம் திகைக்காதே. சீக்கிரம் எஞ்சினை ஓட்டிப் பார்.
இனி அது ஓடாது.. நாம் ஆபத்தில் சிக்கிக் கொண்டு விட்டோம். அலைகள் நம் படகைப் பந்தாடிக் கழிக்கும். அல்லது பாறைகளில் கொண்டு போய் மோதி உடைக்கும்.
அதோ அவர்கள் படகு...
இருவரும் கையை உயர்த்தி அசைக்கிறார்கள்.....
அந்தப் படகின் மோட்டார் எஞ்சின் கெட்டிருக்க வேண்டும். அலைகள் அதைப் பாறையை நோக்கித் தள்ளிக் கொண்டு போகிறது.
அந்தப் பாழடைந்த கோவிலுள்ள காளி மாதாவின் செயல்தான் இது. உங்கள் படகை அவர்கள் அருகே எத்தனை தூரம் கொண்டு போக முடியுமோ கொண்டு போங்கள் மாமா. நான் இந்தக் கயிற்றை என் இடையில் கட்டிக்கொண்டு கடலில் குதித்து நீந்தப் போகிறேன். அவர்களிடமிருக்கும் அந்தச் சிலையைக் கைப்பற்ற இதைத் தவிர வேறு மார்க்கமில்லை.
அக்கா..! வேண்டாம். ஐயோ, இது ரொம்ப அபாயம்.
நீலா தயங்கவில்லை. நீச்சலில் கெட்டிக்காரி அவள். துணிச்சல் மிக்கவளும் கூட....
கவலைப் படாதே கோபா! அவள் இடையில் கட்டிக் கொண்டிருக்கும் கயிறு அவளைக் காப்பாற்றும்.
அக்கா! ஐயோ! உன்னைக் கடல் விழுங்கி விடப் போகிறது....
அவர்கள் நீசர்கள், கொடியவர்கள், அயோக்கியர்கள். ஆனாலும் என் கண்ணெதிரே அவர்கள் கடலுக்கு இரையாவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? காப்பாற்றத் தான் வேண்டும்....



போய் மோதியது......
வீரதீர மணிகளே! வருக... வருக...!
நீலா...ரவி... வாழ்க! வாழ்க!
சுபம்


அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!
PEARS
TRANSPARENT
SOAP
பியர்ஸ்—அசல் கிளிசரின் சோப்
பியர்ஸ் சருமக் களை ... கன்னிப் பருவக் களை

அத்தியாயம் 12

விமானம் புறப்பட முக்கால் மணி நேரம் இருக்கும்போது ஆனந்த் டாக்ஸியில் வந்து இறங்கினான். டாக்ஸியை வெயிட்டிங்கில் நிறுத்திவிட்டு உள்ளே வந்தான். முகத்தில் எல்லையற்ற களைப்பு தாண்டவமாடினாலும், நிம்மதியின் நிழலும் தட்டியது.

''என்னப்பா, இவ்வளவு தாமதம்? எங்கு சென்றிருந்தாய்? இன்று புறப்படுவதில் ஏதாவது தடங்கலா? வாசுவும் ரமாவும்கூட இன்னும் வரவில்லையே? ஏதாவது செய்தி தெரியுமா?'' என்று சீதாபதி கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனார்.

''பயப்படும்படி ஒன்றும் இல்லை, அப்பா! வாசுவின் அம்மாவும் இப்போது இங்கிருப்பது நல்லதாகிவிட்டது. வாசு வீடு திரும்பச் சில நாட்களாகும். ரமா நாளைக் காலையில் வந்து விடுவாள். வாசுவைப் பார்க்கப் போய்

குடை ராட்டினம்

எஸ். ரங்கநாயகி



வந்ததனால்தான் இவ்வளவு தாமதம்'' என்றான்.

''ஆனந்த், கூறுவதை விளக்கமாகக் கூறேன்!'' என்றாள் தேவகி.

''கவலைப்படக் கூடிய விஷயம் ஒன்றுமில்லை. வாசுவின் ஸ்கூட்டர் வழியில் சிறு விபத்துக்குள்ளாகி விட்டது. அவன் உயிருக்கு ஆபத்தில்லாமல் தப்பினான். ஆனாலும் ஆஸ்பத்திரியில் அவன் சில நாட்கள் தங்கும்படி இருக்கும். ரமாவுக்கு மேல் காயம்தான். அதனால் ஆஸ்பத்திரியில் தங்க வேண்டிய அவசியமில்லை. ஆபீசில் சமாசாரம் தெரிந்து ரூபகுமார் அங்கு போய் விட்டான். பியூன் உங்களுக்குச் செய்தி தெரிவிக்க வந்தபோது நீங்கள் வீட்டில் இல்லை. யதேச்சையாக என்னைப் பார்த்து என்னிடம் கூறினான். நான் உடனே டாக்ஸி அமர்த்திக் கொண்டு ஓடினேன். வாசு ஆபத்தில்லாமல் தப்பி விட்டான். நாளை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அவளை அழைத்து வந்து விடுவார்கள். எனக்கு அதிக நேரம் இல்லாததால் ரூபகுமாரையே காலையில் ரமாவை அழைத்து வரும்படி சொல்லி விட்டு வந்து விட்டேன். எனக்கு விமானத்துக்கு நேரமாகி விட்டது. ஸ்ரீகாந்த் தவித்துக் கொண்டிருப்பார். நான் போய் வருகிறேன். நீங்கள் ஒருவரும் விமான நிலையத்துக்கு வரவேண்டாம். ரமாவைக் காலையில் அவள் வீட்டில் சந்தித்தால் விவரம் கூறுவாள்.''

சடசடவென்று விஷயத்தைக் கூறிவிட்டு ஆனந்த் தந்தை முதலானவரிடம் விடைபெற்றான். சீதாபதி கண்களில் நீர் பெருக விடை கொடுத்தார்.

''காந்தி! நீ செய்யும் உதவிக்கு நன்றி. மகன் இல்லையே என்ற குறை இனி என் அப்பாவுக்கு இருக்காது. உன் பாதுகாப்பில் என் தந்தையை ஒப்படைத்துவிட்டு நான் நிம்மதியாகக் கிளம்புகிறேன்'' என்று கூறிய ஆனந்த் தேவகியின் பக்கம் திரும்பி, ''அம்மா! நான் போய் வருகிறேன். எனக்காகக்



காத்திராமல் வாசுவின் விவாகத்தைச் சீக்கிரமே முடித்து விடுங்கள்'' என்று கூறி அவளை நமஸ்கரித்தான். தேவகி ஆசிர்வதித்து விடை கொடுத்தாள்.

ஆனந்த் ஏறிக் கொண்டதும் டாக்ஸி கிளம்பி விட்டது. டாக்ஸி தூரத்தில் சென்று மறையும் வரை தேவகியும் காந்தியும் வாசலிலேயே நின்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

* * *

"ரமா, வாசுவுக்கு ஆபத்து ஒன்றும் இல்லை என்றால் நீ ஏன் இப்படி விசனமாகக் காணப்பட வேண்டும்? எங்களைத் தேற்றுவதற்காக வாசுவுக்கு ஆபத்தில்லை என்கிறாயா?'' என்று காந்தி கேட்டாள்.

''இல்லை, காந்தி! நான் உண்மையாகவே கூறுகிறேன். வாசுவின் உயிருக்கு ஆபத்தில்லை. கடவுள், அவர் தாயாருக்கு உதவி விட்டார். நீ வாசுவின் அம்மாவுடன் ஜெனரல் ஆஸ்பத்திரியில் போய்ப் பார்......'' ரமா ஒரு மூலையைப் பார்த்தபடி கூறினாள்.

''நீயும் வாயேன் ரமா, இங்கு தனியாக உட்கார்ந்து என்ன செய்யப் போகிறாய்?''

'' வேண்டாம் காந்தி, எனக்குக் களைப்பாக இருக்கிறது. நீங்கள் இருவரும் போய்வாருங்கள்!''

ரமா நடந்து கொண்டவிதம் தேவகி - காந்தி இருவருக்கும் வியப்பை அளித்தது.

'அம்மா! ரமா வரவில்லையா?' என்று மகன் கேட்டால.....?

தேவகி காந்தியின் முகத்தை நோக்கினாள். காந்திக்கும் அச்சமயம் தடுமாற்றமாகத்தான் இருந்தது. இருந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம் என்ற தைரியமும் இருந்தது.

இருவரும் ஆஸ்பத்திரியை அடைந்தபோது வாசு நல்ல நினைவோடு இருந்தான். ஸ்கூட்டர் விபத்து நினைவு வந்ததும், நர்ஸைக் கூப்பிட்டு முதல் காரியமாக ரமாவைப் பற்றித்தான் கேட்டான். சென்னை ஆஸ்பத்திரியில் இருந்த நர்சுக்கு ரமாவைப் பற்றிய விவரம் தெரியவில்லை. அவனுக்குத்தான் அதிக அடி என்றும், ஒரு நண்பர் ரத்த தானம் செய்தது காரணமாகத்தான் அவன் பிழைக்க முடிந்தது என்றும் அவள் கூறினாள். ரமாவுக்கு அதிக அடியில்லாததால் அவள் வீட்டுக்குச் சென்றிருப்பாள். இரத்த தானம் யார் செய்திருப்பார்கள்? தெரிந்துகொள்ள ரமாவை எதிர்பார்த்தான். ஆனால் காந்தியும் தேவகியும் மட்டுமே வந்திருப்பதைப் பார்த்ததும் அவனுக்கு ஏமாற்றமாகப் போய் விட்டது.

''காந்தி! ரமா வரவில்லையா?'' என்று கேட்டான் வாசு.

''வருவாள்!'' என்றாள் காந்தி.

''வராமலிருப்பாள் என்று நானும் கூற வில்லை. அவள் அடிபடாமல் தப்பினாளா என்று தெரிய வேண்டும்.''

காந்திக்கு ஆதாரம் கிடைத்து விட்டாற் போல் இருந்தது. ''அவளுக்குக் காலில் கொஞ்சம் அடி!'' என்றாள்.

''என்னது? காலில் அடியா? என்னிடம் சொல்லவில்லையே!'' என்றாள் தேவகி.

''என்னிடமும் அவளாகச் சொல்லவில்லை. மாடிக்குப் போனபோது நானாகத் தூண்டிக் கேட்டேன். அப்போது கூறினாள். ஆஸ்பத்திரியில் தங்கவைத்துவிடப் போகிறார்களே என்று அவள் ஒருவரிடமும் கூறாமல் இருந்திருக்கிறாள்!'' காந்தி சமாளித்து விட்டாள்.

''அவளை அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டாம் என்று சொல்லு'' என்றான் வாசு.

''மெதுவாகப் போயிருந்தால் இந்த விபத்து நேர்ந்திராதல்லவா? ஏதாவது எக்கச்சக்கமாக நேர்ந்து ரமாவின் உயிருக்கோ கை காலுக்கோ கேடு வந்திருந்தால் அவள் தந்தைக்கு நாம் என்ன பதில் சொல்லி யிருக்க முடியும்?'' என்றாள் தேவகி.

''யார் பேரிலும் தவறில்லை, அம்மா. ஸ்கூட்டரில் ஒரு சக்கரம் நழுவி விட்டது. கீழே விழுந்த பிறகு என்ன நடந்ததென்றே எனக்குத் தெரியாது. நினைவு வந்த பிறகு எனக்காக யாரோ இரத்த



தானம் செய்திருக்கிறார்கள் என்பதை அறிந்தேன்'' என்றான் வாசு.

''ரத்தம் தந்தது யார் என்பதைக் கேட்டால் அசந்து போய்விடுவாய். நீங்கள் எதிரியாக நினைத்துக் கொண்டிருந்த ரூபகுமார் தான் இரத்தம் தந்திருக்கிறார். விபத்து பற்றித் தன் வீட்டுக்குப் போன் செய்ய இயலாததால் ரமா உன் ஆபீசுக்குப் போன் செய்திருக்கிறாள். அப்போது யதேச்சையாக அங்கிருந்த ரூபகுமார் உடனே விபத்து நடந்த இடத்துக்கு ஓடி வந்திருக்கிறார். ஆஸ்பத்திரியில் இரத்தம் இல்லை என்றதும் தன் இரத்தத்தைக் கொடுத்திருக்கிறார்!'' என்றாள் தேவகி.

''என்னது? ரூபகுமாரா இரத்த தானம் செய்தது?'' என்று வாசு மிகுந்த வியப்புடன் கேட்டான்.

''ஆமாம்பா. ரமா கூறுவதிலிருந்து தெய்வமாக அவர் வந்து உனக்கு இரத்தம் கொடுத்திருக்கா விட்டால் நாங்கள் உன்னைப் பார்த்தே இருக்க முடியாது. ஆபத்துக் காலத்தில் கடவுள் பொல்லாதவனையும் நல்லவனாக மாற்றி விடுகிறார், பார். ரமாவைக்கூட அவர் தான் பத்திரமாக வீட்டில் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்!'' தன் மகன் பிழைத்துவிட்டான் என்ற குதூகலத்தில் தேவகி நன்றிப் பெருக்கோடு கூறினாள்.

வாசுவோ அதற்குமேல் பேசவே இல்லை. அப்படியும் இருக்குமா? ரூபகுமார் அவனுக்காக ரத்த தானம் செய்ய முன் வந்திருப்பானா? அம்மா கூறுவது போல் ஆபத்துக் காலத்தில் எதிரியும் நண்பனாக மாறிவிட முடியுமா? ரூபகுமார் இரத்த தானம் செய்யாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்! இனி அவன் சொல்லிக் காட்ட வாய்ப்பு ஏற்பட்டு விட்டதே! 'என்னால் தான் நீ உலகில் நடமாடுகிறாய்' என்று கூறுவானே! ஆண்டவனே! ரூபகுமாரை எதற்காக அங்கு அனுப்பி வைத்தாய்?

இப்படி வாசு நினைக்கவும் ரூபகுமார் ஆஸ்பத்திரிக்குள் நுழையவும் சரியாக இருந்தது. ரூபகுமார் வருவான் என்று வாசு எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் ''வாருங்கள்'' என்று வாசு பொதுப்படையாக வரவேற்றான்.

''உங்களுக்கு நாங்கள் ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறோம். சமயத்தில் என் மகனைக் காப்பாற்றி என் வயிற்றில் பால் வார்த்தீர்களே!'' என்று தேவகி நன்றி தெரிவித்தாள்.

''ரமா வரவில்லையா?'' என்று ரூபகுமார் பேச்சைத் திருப்பினான்.

''சரியாய்ப் போச்சு! உங்களிடமும் அவள் சொல்லவில்லையா? பாவம், அந்தப் பெண்ணுக்குக் காலில் அடி. ஒருவரிடமும் சொல்லாமல் இருந்திருக்கிறாள். வாசுவைப் பார்க்கவும் வரவில்லை. இவனோ அவளைப் பார்க்கத் துடிக்கிறான்'' என்றாள் தேவகி.

''வாசுவைப் பார்க்க ரமா வரவில்லை!'' ரூபகுமாருக்கு இச் செய்தி இனித்தது. தான் அளித்த வாக்கில் ரமா நிலையாக இருக்கிறாள் என்று உள்ளூற மகிழ்ந்தான்.

* * *

அன்று இரவே கோசல்ராம் ஊர் திரும்பி விட்டார். வாசுவுக்கு நேர்ந்த விபத்தைப் பற்றி அறிந்தவர் மறுநாள் காலையில் முதல் காரியமாக வாசுவைப் பார்க்கப் புறப்பட்டார். திரும்பியதும் ரமாவிடம் சென்று ''ரமா! வாசுவை ஆஸ்பத்திரியிலிருந்து இரண்டு நாட்களில் 'டிஸ்சார்ஜ்' செய்து விடுவார்கள். அவன் கொஞ்சம் நடக்க ஆரம்பித்ததும் உன் விவாகத்தை நடத்தி விடலாம்'' என்றார்.

ரமாவின் கண்களில் நீர் முட்டியது. ''அப்பா! நான் மிக்க அபாக்கியவதி. முதலில் தாயார் உலகிலிருந்து மறைந்து விட்டாள். இப்போது வாசு என் வாழ்விலிருந்து நகர்ந்து விடும்படி நேர்ந்து விட்டது... ரூபகுமாருடன்தான் என் வாழ்வு பிணைய வேண்டுமென்று விதி சதி செய்தால் அதற்குமேல் நான் என்ன செய்ய முடியும்?'' என்றாள்.

இந்தச் சொற்களை இவள் எப்படித்தான் கூறினாளோ? அவளுக்கே புரியவில்லை.

''என்ன கூறுகிறாய், ரமா? நினைத்த போதெல்லாம் மணாளனை மாற்றிக் கொள்வது தற்கால பாஷனா?''

''இல்லையப்பா, இனி மாற்ற முடியாத கோட்டில் நிற்கிறேன். வாசுவுக்காக வாழ்வில் எத்தனையோ சங்கடங்களைத் தாங்கச் சித்தம் கொண்டிருக்கிறேன். அதில் இதுவும் ஒன்று'' என்று கூறிய ரமா வேகமாக அங்கிருந்து சென்று விட்டாள்.

கோசல்ராம் ஊர் திரும்பிவிட்டார் என்பதை அறிந்த ரூபகுமார் அவரைப் பார்க்க வந்தான். அப்போது காந்தி அவர் அருகில் இருந்தாள். ''மாமா! ரமா இல்லையா?'' என்று ஆவலை அடக்க மாட்டாமல் கேட்டான் ரூபகுமார்.

''ரூபகுமார்! என் கேள்வி ஒன்றுக்குத் தயவு செய்து பதில் கூறுகிறீர்களா? ரமா இப்போது வாசுவை விடுத்து உங்களை மணப்பதாகக் கூறுவதன் காரணம் என்ன?'' என்று நேரிடையாகவே கேட்டாள் காந்தி.

ரூபகுமாருக்கு இதைக் கேட்டதும் எல்லையற்ற குதூகலம். ரமாவே தன் திருமணத்தைக் கிளப்பி விட்டிருக்கிறாள்! இதைவிட அவனுக்கு வேறு என்ன பாக்கியம் வேண்டும்?

''காந்தி! இந்தக் கேள்வியை என்னிடம் கேட்பானேன்? உன் சகோதரியைக் கேட்டாலே கூறுவாளே! என்னை மணப்பதாகக் கூறுபவளுக்கு அதற்கான காரணமும் தெரிந்திருக்க வேண்டுமே! என்வரையில் நான் என்றைக்குமே அவளை மணக்க விருப்பம் கொண்டவன்'' என்றான் ரூபகுமார் சிரித்துக் கொண்டே.

கோசல்ராம் மேற்கொண்டு பேச்சை வளர்க்காமல் ரமாவை அழைத்து வரச் சொன்னார். ரமா வந்து தந்தையின் அருகில் அமர்ந்தாள். குனிந்த தலை நிமிரவில்லை.

''ரமா! ரூபகுமார் வந்திருக்கிறான், பார்! அவனையே மணப்பதாகச் சொன்னாயல்லவா? முகூர்த்தத்துக்குத் தேதி வைக்கட்டுமா? இனிமேலும் உன் விவாகத்தைத் தள்ளிப் போட நான் விரும்பவில்லை. முதலில் உன் விவாகத்தைப் பற்றியே எனக்குக் கவலை இல்லாமல் இருந்தது. ஆனால் இப்போது நிமிடத்துக்கு நிமிடம் மாறும் திட்டங்களைப் பார்த்தால் உன் விவாகத்தை உடனே முடித்துவிட வேண்டும் என்று தோன்றுகிறது'' என்றார் கோசல்ராம்.

''மாமா! நீங்கள் கூறுவதைப் பார்த்தால் என்னையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவீர்கள் போலிருக்கிறதே! ரமா தான் உங்களிடம் கூறினவள் என்பது நினைவிருக்கட்டும். நான் வந்தது முதல் மௌனமாகத்தான் இருக்கிறேன்'' என்றான் ரூபகுமார்.

''அப்பா! மேற்கொண்டு எதற்குப் பேச்சு? எனக்குத் திருமணம் என்று ஒரு சடங்கை முடித்து விடுங்கள், போதும்!'' என்றாள் ரமா.

''மாமா! இனியும் தள்ளிப் போடாமல் கூடிய சீக்கிரம் எங்கள் திருமணத்தை முடிக்க ஏற்பாடு செய்யுங்கள்!'' என்றான் ரூபகுமாரும்.

''அப்பா! ஒரே ஒரு வேண்டுகோள். விவாகத்தை எளிய முறையில் நடத்தி

னால் போதுமானது. எந்த விதமான ஆடம்பரமும் தேவையில்லை.''

''நீ கூறியபடியே நடத்திவிடலாம். ஆனால் என் சார்பில் ஒரிருவருக்கு நான் அழைப்பு விடலாம் அல்லவா?—மாமா, நானே போன் பண்ணுகிறேன். விவாகத் தேதியை மட்டும் சொல்லி விடுங்கள்'' என்று கூறிய பின், ரூப குமார் புறப்பட்டு விட்டான்.

அவன் சென்றதும் கோசல்ராம் ரமாவை அருகில் அழைத்தார். ''ரமா, நீயாகத்தான் அவனை விவாகம் செய்து கொள்வதாகக் கூறினாய். அப்படியிருந் தும் விவாகம் என்றதும் உன் முகத்தில் குதூகலத்தைக் காணுமே, ஏன்?'' என்று வாஞ்சையுடன் கேட்டார்.

ரமா மௌனமாக இருந்தாள்.

''ரமா! நீ குதூகலத்துடன் இசைந் தால் இத்திருமணத்தை நிறைவேற்று கிறேன். இல்லாவிடில்...'' கோசல் ராம் மீண்டும் ஆரம்பித்தார்.

ரமா செயற்கைச் சிரிப்பைக் காட்டிக் கொண்டாள். ''தயங்க வேண்டாம், அப்பா! விவாகத்தை முடித்துவிடுங்கள். உங்கள் பாசம் மட்டும் என்னிடம் என் றுமே மாறாமல் இருந்தால் அதுவே நான் செய்த பாக்கியம் ஆகும்'' என்று கூறிவிட்டு நகர்ந்தாள்.

காந்தி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். ரமாவின் போக்கு அவளுக்குப் பெரும் வியப்பை அளித்தது. ஒரளவு எல்லாம் புரிவது போலும் இருந்தது. 'ரூபகுமார் இரத்த தானம் செய்திருப்பதாக ரமா கூறி னாளே? வாசுவின் உயிரைக் காப்பாற்ற ரூபகுமாரை விவாகம் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக் குமோ? ரமாவிடம் வாக்குறுதி வாங்கிக் கொண்டுதான் ரூபகுமார் இரத்த தானம் செய்திருப்பாரோ?'

''ரமா...''

காந்தி ஏதோ கூற வாய் திறந்தாள்.

''காந்தி! இனி நான் என் வாழ்வைப் பற்றிய சிந்தனையையே விட்டுவிட் டேன். கொடூரமான, கோரமான வெள்ளம் என் வாழ்க்கையை இழுத் துக்கொண்டு போகிறது. அது போகும் வழியே நான் போவதைத் தவிர வேறு வழியில்லை. எனக்குப் பதில் உன் வாழ்வு மலர வேண்டும் என்பதே உன் குறிக் கோளாக இருக்கட்டும். என் வாழ்வின் இன்பமெல்லாம் சேர்ந்து உனக்குக் கிட்டட்டும். என்னிடம் நீ கூற மறுத் தாய். ஆயினும் உனக்கு ஒரு காதலன் உண்டென்று நான் எண்ணுகிறேன். நீயாவது காதலில் வெற்றி கண்டு அவனுடன் சுகமாக இரு!'' என்று ரமா பேச்சை முடித்தாள்.

ஆ! என்னது! காதலில் வெற்றியா? ரமா கூறுவது போல் வாசு அவளுக்குக் கிட்டுவானா? இனி அவன் ரமாவைப் பற்றி மறந்து விடவேண்டியவன். அதற் காக? அவள் சகோதரியை மணக்க முன்வருவானா? வாசுவோடு அவள் வாழ்வு கூடிவிட்டால்...வாழ்க்கையின் லட்சியமே ஈடேறிவிட்டது போன்ற குதூகலத்தில் மிதந்தாள் காந்தி.

காந்தியின் மனம் தேனாற்றுப் பாதை யில் திரும்பி விட்டது. **(தொடரும்)**

அறிவுக் கொத்து

பிறர் அறியாததை வைத்து அவர்களை மதித்தல் ஆகாது. அறிந்துள்ளதை எவ்வாறு அறிந்திருக் கின்றனர் என்பதை வைத்தே அவர்களை மதித்தல் வேண்டும். -பிரஞ்சுப் பழமொழி

அறிவு என்பது ஆற்றைப் போன்றது. அது எவ் வளவுக்கெவ்வளவு ஆழமாக இருக்கிறதோ அவ் வளவுக்கவ்வளவு சந்தடியின்றி அமைதியாயிருக்கும். -பேக்கன்

எவனொருவன் மிதமிஞ்சித் தன்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறானோ அவன் நிச்சயமாகத் தன் குற்றம் குறைகளை மறைக்க முயல்கிறான். -ஷா


தொகுப்பு: இந்திரா ராஜகோபாலன்

உண்மையைச் சொல்வதுதான் நான் செய்யும் நகைச்சுவை. அது உலகிலேயே மிகவும் வேடிக்கை யான ஹாஸ்யம்.

-பெர்னார்ட் ஷா

எவனொருவன் தன்னையே நேசிக்கிறானோ அவ னுக்குப் போட்டியாக யாரும் வரமாட்டார்கள். -பிராங்க்ளின்

நண்பர்களை வைத்துக் கொள்வதில் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கிறீர்களோ அதையே நீங்கள்



படிக்கும் புத்தகங்கள் விஷயத்திலும் கடைப்பிடி யுங்கள். -பாக்டன் ஹீட்

கடவுள் நமக்கு உறவினர்களைக் கொடுக்கிறான். ஆனால் நம்முடைய நண்பர்களை நாமே தேர்ந் தெடுக்கலாம். இதற்காக நாம் கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். -அடிஸன் மிஸ்னர்

தொகுப்பு: பிரசன்னா

கடல்நுரை

மகரிஷி

நெடுங் கதை



நான்கு சிறப்புச் சிறுகதைகள்

விஞ்ஞானக் கதை ○ யூரேக்கா! — மீனாட்சி கிருஷ்ணா

சரித்திரக் கதை ○ ராஜதந்திரம் - கோவி மணிசேகரன்

சமூகக் கதை ○ வழித்துணை - ராஜா

நகைச்சுவைக் கதை ○ கள்ள நோட்டு அடிப்பது எப்படி?- நாடோடி

புதிய அம்சங்கள்:

○ முடியாது? முடியாது!

○ கொரிக்கவும் சிரிக்கவும்

ஜெகசிற்பியன் எழுதும்

புதிய சமூக நாவல்

காணக் கிடைக்காத தங்கம்!

தமிழ்ப் புத்தாண்டு மலரில் ஆரம்பமாகிறது



இவரிடமிருப்பது பிரஸ்டிஜ் Prestige இவரிடமிருப்பது ப்ரீத் PREETT



இவர் இருப்பது இந்தியாவில்



இவர் இருப்பது வெளிநாட்டில்


இருவரும் உபயோகிப்பது ஒரே பிரஷர் குக்கர்தான் இரண்டுமே டிடி.(பிரைவேட்) லிமிடெட் தயாரிப்புதான் – பெயர் மட்டுமே வித்தியாசம்

இந்தியாவில் பிரஸ்டிஜ் என்றும், ஏற்றுமதிக்கு ப்ரீத் என்றும் தயாரிக்கப்படும் இரண்டு குக்கர்களும் எவ்வகையிலும் ஒன்றுதான். எட்டு லட்சத்திற்கும் அதிகமான குடும்பத் தலைவிகள் இவற்றை நாள்தோறும், ஆண்டுக்கணக்கில் பயன்படுத்துகிறார்கள்.

உங்கள் பிரஷர் குக்கர் பிரஸ்டிஜானாலும் சரி, ப்ரீத்தானாலும் சரி அவை பயன்படுத்தப் பத்திரமானது. ஆயுள்கால உத்தரவாதம் கொண்டது. நாடெங்கும் விற்பனைக்குப் பின்னரும் பராமரிப்புக்கு வசதியுள்ள பிரஷர் குக்கர் இது ஒன்றே.

சீக்கிரமாயும் சுலபமாயும் சமைக்க உதவுபவை, ப்ரீத் 'ஸ்டீம்-இட்', ஸ்கில்லெட், ஸாஸ்பான் பாத்திரங்கள்.

HTA-TTP-3491



டிடி. (பிரைவேட்) லிமிடெட், பெங்களூர் 16

சாருலதா

கீ.ராஜேந்திரன்



அத்தியாயம் 35

வாழத் துடிப்பவன்

'உனக்கே இப்படி ஒரு சரீர உபாதை நேர்ந்தால்தானே உன்னிடம் வரும் நோயாளிகளின் அவதியும் உனக்குப் புரியும்? — இப்படி நினைத்துத்தான் ஆண்டவன் என்னை இந்த வேதனையை அநுபவிக்கச் செய்கிறாரோ' — வேணுகோபால் பல்லைக் கடித்துக் கொண்டான். ஆயினும் தாங்க முடியாது போகவே, ''ஆ! ஐயோ, அம்மா!'' என்று வாய் விட்டுக் கூறி முனகினான்.

உடல் அநுபவித்த வேதனையைக் காட்டிலும் அவன் மனம் அதிகமாகத் துன்பப்பட்டுக் கொண்டிருந்தது. இரண்டையும் சகித்துக் கொண்டு மெல்ல ஊர்ந்து நகர முற்பட்டான். விண் விண்ணென்று தெறித்தது வலி.

'ஈ காக்காய் கிடையாது இந்த இடத்தில். டெலிபோன் வசதியும் இல்லை. தன்னந் தனியாக என்னை இந்த நிலையில் விட்டு விட்டுப் போய் விட்டார்களே அந்த அயோக்கியர்கள்! இங்கிருந்து காருக்கு எப்படிப் போவேன்? காரை அவர்கள் ஓட்டிக் கொண்டு சென்று விட்டால்? அப்படி அவர்கள் செய்யவில்லை என்றாலும் நான் எப்படி அதைச் செலுத்த முடியும்? சென்னைக்கு எவ்வாறு போய்ச் சேரப் போகிறேன்? இங்கேயே கிடந்து சாக வேண்டியதுதான். ஆனால் நான் சாக விரும்பவில்லை. ஆண்டவனே, என்னைக் கொன்று விடாதே!'

மாடிப் படிகளில் யாரோ அவசரம் அவசரமாக ஏறி வரும் சத்தம் கேட்டது. வேதனையையும் மீறி வியப்பு மேலிட்டது வேணுகோபாலுக்கு. மஹிபாலின் தலை தென்பட்டபோது அவனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. 'திருந்தி விட்டானா இவன்!'

''உன் உதவி தேவை'' என்றான் மஹிபால், வேணுகோபாலின் அருகில் வந்து நின்று.

ஏமாற்றத்துடன் வேணுகோபால் கரத்தைத் தலையணையாக்கிச் சிரத்தை அதன் மீது சாய்த்தான். ''யாருடைய உதவி யாருக்குத் தேவை?'' என்று முணுமுணுத்தது அவன் வாய்.

''சந்திரபாலைப் பாம்பு கடித்துவிட்டது'' என்றான் மஹிபால்.

''கோ டு ஹெல்!''

''அவன் செத்துப் போய் விடுவான், டாக்டர்!''

வேணு வேதனையையும் மீறிச் சிரித்தான். ''அவன் செத்துப் போய்விடுவானா? இங்கே நான் செத்துக் கொண்டிருப்பது உன் கண்களுக்குத் தெரியவில்லையா?''

''நீ ஒரு டாக்டர். அவனுக்கு உதவ வேண்டியது உன் கடமை.''

''பாம்பு எப்படிக் கடிக்கும்? பஞ்சாபி சப்பல் அணிந்திருந்தானே அவன்?''

''அதுதான் விதி! சவுக்குத் தோப்பில் சில மரங்களை விறகுக்காக வெட்டியிருக்கிறார்கள். வேர்க்கட்டையைத் தோண்டி எடுக்காமல் அடி மரத்தை அப்படியே விட்டிருக்கிறார்கள். அதைக் கவனியாமல் நடக்கவே தடுக்கி விட்டது. கீழே விழுந்து விட்டான். பைஜாமாவும் அப்போது மேலே வயண்டு கொள்ளத் தரையில் சருகுகளுக்கிடையில் சுருண்டு படுத்திருந்த பாம்பு வகையாகக் கொத்தி விட்டது, கணுக்காலுக்கு மேலே. கட்டு விரியன் என்று நினைக்கிறேன். விஷமில்லையா அது?''

''ஓடிப் போய்ப் பாம்பு கடித்த இடத்தில் வாயை வைத்துக் கடி. ரத்தத்தை

உறிஞ்சித் துப்பு. காயத்துக்கு நாலு அங்குலம் மேலே இறுக்கமாய்க் கட்டுப் போடு.''


''அதை நீ செய்!'' என்றான் மஹிபால்.

''என்னால் நகர முடியவில்லை.''

''நான் உதவுகிறேன்.'' மஹிபால் அவனைத் தூக்கி நிறுத்தினான். வலக் கரத்தைத் தன் தோளைச் சுற்றிப் போட்டுக் கொண்டான். தொய்ந்தபடி படி இறங்கி நடந்தான் வேணுகோபால்.

சவுக்குத் தோப்பில், பாம்பு கடித்த இடத்தில் கடுப்புப் பரவ விறிட்டு அலறியபடியே இருந்தான் சந்திரபால். வேதனையைக் காட்டிலும் பயத்தால் அதிகக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தான்.

வேணுகோபால் அருகில் வந்து மண்டியிட்டு அமர்ந்ததும் மஹிபால் காலைத் தூக்கிப் பிடிக்க, பாம்பு கடித்த இடத்தில் வாயை வைத்துக் கடித்து ரத்தத்தை உறிஞ்சித் துப்பினான் வேணுகோபால். கூரிய ஆயுதத்தால் நெஞ்சையே துளைப்பதுபோல் வேணுகோபாலுக்கு அப்போது வலித்தது. சந்திரபாலோ, சந்திரலோகத்துக்கே எட்டக்கூடிய அளவுக்குக் கத்தினான். இரு கைக்குட்டைகளைச் சேர்த்து முடிந்து முழங்காலுக்குமேல் இறுகக் கட்டுப் போட்டான் மஹிபால். டாக்டர் வேணு



கோபால் இருமினான். தன் நெஞ்சிலிருந்து வாய் நிறைய வந்து சேர்ந்த ரத்தத்தை வெளியே துப்பினான். முறிந்த மார்புக் கூட்டு எலும்பு, தன் நுரையீரலைப் பொத்து விட்டிருக்கிறதென்பது உடனே அவனுக்குத் தெளிவாயிற்று.

"இதை நீயே செய்திருந்தால்என்ன?" என்று வாயில் இருந்த ரத்தத்தைத் துடைத்துக்கொண்டே கேட்டான் வேணுகோபால். "எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் இதைச் செய்கிறோமோ, அவ்வளவுக்கு அவன் உயிர் பிழைக்கும் வாய்ப்பு அதிகமாகிறது தெரியுமல்லவா?"

"எனக்குப் பயமா யிருந்தது" என்றான் மஹிபால்.

"என்ன பயம்?" என்று சந்திரபால் கேட்டான்.

"விஷ ரத்தத்தை உறிஞ்சப் போக என் உடலிலும் விஷம் பரவிவிட்டால்?"

"தூ" என்று வெறுப்புடன் காரி உமிழ்ந்தான் சந்திரபால். "மனுஷனா நீ?"

'அப்படி அவனைப் பார்த்து நீ கேட்கிறாயா? பேஷ்!' என்று நினைத்துக் கொண்டான் வேணுகோபால். அவனால் அதிகமாக எதுவும் பேச முடியவில்லை.

"நீ ஒன்றும் சாக மாட்டாய். உன் உயிர் கெட்டி. எழுந்து நட" என்றான் மஹிபால். சந்திரபாலைக் கைத் தாங்கலாகப் பற்றிக் காருக்கு அழைத்துப் போனான். "உடனே ஆஸ்பத்திரிக்குப் போய் விஷ முறிவுக்கு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்" என்றான் வேணுகோபால்.

முன் ஸீட்டில் சந்திரபாலை உட்கார வைத்த மஹிபால், இரண்டு தோல் பைகளையும் டேப் ரிகார்டரையும் பின் ஸீட்டில் போட்டான். டிரைவர் ஸீட்டில் அமர்ந்து காரைக் கிளப்பினான். வேணுகோபால் இருந்த பக்கம் அவர்கள் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. 'என்னையும் அழைத்துப் போகக் கூடாதா?' என்று அவர்களைக் கெஞ்சிக் கேட்க வேணுகோபாலின் மனம் இடம் தரவில்லை.

அவன் தட்டுத் தடுமாறி மெல்ல எழுந்து நடந்தான். சவுக்குத் தோப்பைக் கடக்கும் வரை ஒவ்வொரு மரமாகப் பிடித்துக் கொண்டு நடக்க முடிந்தது. அதன் பிறகு, திருவான்மியூர் நெடுஞ்சாலையை அடையும்வரை அரைஃபர்லாங் தூரம் நடப்பது நரக வேதனையாக இருந்தது. கடைசி பத்துப் பதினைந்தடி தூரம் அவன் தவழ்ந்துதான் சென்றான். வாழ வேண்டும் என்ற பேரவா அவனை இழுத்துக் கொண்டு போய்ச் சாலையில் தள்ளியது.

ஏகாந்தமான இடத்தை நாடிக் காரில் வந்த காதலர் இருவர் மனித உருவம் ஒன்று சாலையின் குறுக்கே விழுந்து கிடப்பதை ஒரே சமயத்தில் கண்டனர்.

"ஒன்றுமில்லை, பயப்படாதே! காக்காய் வலிப்பு. கொஞ்ச நேரத்தில் எழுந்து நடக்க ஆரம்பித்து விடுவான்" என்றான் காதலன். காரின் வேகத்தைக் குறைத்துச் சாலையின் ஓரமாக ஒட்டிக் கடந்து சென்றுவிடத் திட்டம் போட்டான் அவன்.

"ரத்தம்! ரத்தம்! அடிபட்டிருக்கிறது அவனுக்கு!" என்று பதறினாள் காதலி.

வேணுகோபாலைக் கடந்து போன கார், 'கீச் கீச்' சென்று பிரேக் போடப்பட்டு நின்றது.



இப்பொழுது நடைபெறுகிறது

சென்னை

சித்ரா மகாலட்சுமி அகஸ்தியா (70mm) லிபர்ட்டி

மற்றும் தென்னாடெங்கும்



ரவி புரொடக்ஷன்ஸ்

தபால்காரன் தங்கை

கதை-வசனம்-டைரக்ஷன்	தயாரிப்பு	ஸ்டுடியோ
K.S.கோபாலகிருஷ்ணன்	பாலு	கற்பகம்

ELEGANT

Lakshmi

காதலன் கீழே இறங்கிப் போய்ப் பார்த்தான். குப்புற விழுந்து கிடந்த வேணு கோபாலின் முகத்தருகே குனிந்தான். 'செத்துப் போய் விட்டானோ?' என்று அவனுக்குச் சந்தேகம். வேண்டாத வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டதாகி விடுமோ என்று பயம். தயக்கத்துடன் நோக்கிய அவனுக்கு வேணு கோபாலின் வாயசைவு கொஞ்சம் தெம்பு அளித்தது. மண்டியிட்டுத் தலை சாய்த்துக் கவனமாகக் கேட்டான். ''மயிலாப்பூர், எட்வர்ட் எலியட்ஸ் ரோடு, டாக்டர் மல்லிகார்ஜுனன் — நர்ஸிங்ஹோம்'' என்று வீங்கிய உதடுகள் முணுமுணுத்தன.

காதலி காரை விட்டு இறங்கி அருகில் வந்தாள். ''ஸாரி, டார்லிங்! இது எமர்ஜென்ஸி கேஸ். நம்ம 'பிக்னிக்'கை இன்னொரு நாளைக்கு வைத்துக் கொள்ள வேண்டியதுதான்'' என்றான் காதலன்.

இருவருமாக மெல்ல வேணுவைத் தூக்கிக் காரின் பின் ஸீட்டில் படுக்க வைத்தார்கள்.

கார் திரும்பியது; பறந்தது.

''ஹனி! டாக்டர் மல்லிகார்ஜுனனுக்கு ஒரு பேஷண்டை நாம் கொண்டு போனால் போதும். மூன்று பேருக்குச் சேர்ந்த மாதிரி அவரால் வைத்தியம் பண்ண முடியாது'' என்றாள் காதலி.

வேகம் சற்றுத் தணிந்தது.

டாக்டர் மல்லிகார்ஜுனன் சொன்னார்: ''இது போலீஸ் கேஸ் வேணு!''

''டாம் இட்!'' என்றான் வேணு கோபால். ''நான் கம்ப்ளெய்ண்ட் கொடுத்தால்தானே அதற்கு?''

''இந்தக் காயமெல்லாம் விளையாடும் போதோ அல்லது சறுக்கி விழுந்ததாலோ பட்டிருக்க முடியாது என்று எனக்குத் தெரியும். ஆகவே, போலீசுக்குத் தகவல் கொடுக்க வேண்டியது என் டியூட்டி.''

கூடாது என்று தலையசைத்தான் வேணு. ''உன் முதல் கடமை, என்னைக் காப்பாற்றுவதுதான்.''

''நீ ஜி. எச்.சுக்குப் போவது நல்லது. ரிப்ஸ் ஃப்ராக்ச்சர் ஆகியிருக்கு. என்னிடம் போதுமான எக்விப்மெண்ட் இல்லை.''

மெல்லிய குரலில் பேசினான் வேணு: ''எல்லா உபகரணங்களும் இருக்கு. உன்னிடம் இல்லாதது தைரியம் ஒன்றுதான். போலீஸ் விசாரணையை நினைத்துத் தயங்குகிறாய். நீ காலத்தைக் கடத்தினால் நான் செத்துப் போவேன். பிசாசாக வந்து உன்னை ஆட்டிப் படைப்பேன்.'' வேணு இருமினான். 'குபுக்' கென்று வாயிலிருந்து ரத்தம் வடிந்தது.

''பேசாதேடா பாவி! நானே உன்னைக் கவனிக்கிறேன்'' என்றார் மல்லிகார்ஜுனன்.

''மல்லி! ஐ வாண்ட் டு லிவ். எப்படியாவது என்னைக் காப்பாற்றுடா!... சாக விடாதே!'' என்று கேட்டுக் கொண்டான் வேணுகோபால்.

அத்தியாயம் 36

மனமாற்றம்

தன்னை அலங்கரித்துக் கொள்வதில் சாருலதா இன்று வழக்கத்தைவிட அதிகமான சிரத்தை காட்டியிருந்தாள். வித்தியாசமான வர்ணத்தில் கரையோ தலைப்போ இல்லாத குறையை அந்த அழுத்தமான மஞ்சள் நிறப் பட்டுப் புடவையின் சரிகை வேலைப்பாடுகள் ஈடு நிரப்பின. நிற வித்தியாசத்தின் சாயல்கூட இல்லாத வகையில் ஜாக்கெட் துணி தேர்ந்தெடுத்திருந்தாள். உயிர் பெற்று எழுந்து வந்த தங்கப் பதுமை, புதிதாய்க் கிடைத்த இந்த அநுபவத்தை ஆசை தீர அநுபவித்து மகிழ்வதுபோல் அவள் நடையில் ஒரு துள்ளலுடன் சாப்பாட்டு அறைக்குள் நுழைந்து அப்பாவுக்கு அருகே அமர்ந்தாள்.

இரவு நேரச் சாப்பாட்டுக்காக வரும்போது சாருலதா சாதாரணமாக இந்த அளவுக்கு அலங்கரித்துக் கொள்வதில்லை. 'சாப்பிட்ட பிறகு எங்கேயோ வெளியே போக வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது போலிருக்கிறது' என்று நினைத்துக் கொண்டார் பெருமாள்.

ஆயினும் அவளிடம் காணப்பட்ட ஒரு புதுமைப் பொலிவும் மெருகேற்றப்பட்டது போன்ற அவள் சருமத்தின் பளபளப்பும் கண்களில் மின்னிய கிளுகிளுப்பும் அவரைச் சிந்திக்கச் செய்தன.

'என்ன இன்றைக்கு இவ்வளவு உற்சாகம்?' என்பதுபோல் அவர் கேள்விக் குறியாகப் புருவங்களை உயர்த்தினார்.

''அப்பா! குணாவின் கல்யாணப் பிரச்னையைத் தீர்த்துவைக்க ஒரு வழி கண்டு பிடித்து விட்டேன்'' என்றாள் சாருலதா. வெட்கத்தில் அவள் முகம் குப்பென்று சிவந்தது. மொட்டுப்

போன்ற அவள் உதடுகள் மலர்ந்தன. முத்துப் போன்ற பற்களிடையே ஒளிதழ் சிக்கியது.

''கொஞ்ச நாட்களாக அதைப்பற்றிப் பேசாமல் இருந்தோம்; நிம்மதியாக இருந்தது'' என்று சூள் கொட்டிய பிறகு சொன்னான் குணசீலன்.

ஆனால் பெருமாளுக்குச் சாருலதாவின் தவிப்பு எதையோ உணர்த்துவது போலிருந்தது. அவர் தட்டை ஒதுக்கி விட்டு மேஜை மேல் கை நீட்டி அவள் விரல்களைப் பற்றி வருடினார். அவளை ஆர்வத்தோடு பார்த்தார். 'அம்மா! என் வயிற்றில் பாலை வார்க்க வேண்டும், தாயே!' என்று கேட்டுக் கொள்வது போலிருந்தது அந்தப் பார்வை.

அப்பாவின் கரத்தை அவள் குழந்தை போல் எடுத்துக் கன்னத்தில் ஒற்றிக் கொண்டாள். கண்ணீரால் நனைத்து முத்தம் கொடுத்தாள்.

''அப்பா! வேணுவை நான் கல்யாணம் செய்து கொள்வதில் உங்களுக்கு ஆட்சேபனை ஏதுமில்லையே?''

''உய்!'' என்று கத்தியபடி மடியிலிருந்த 'நாப்கின்'னை மேலே வீசினான் குணசீலன். அவனுடைய சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டது போல் அந்தத் துணியும் படபடத்துப் பறந்து பிறகு மேஜையின் மையத்தில் வந்து அமர்ந்தது. 'டர்ர்' என்று நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுப் பரபரப்புடன் சாருவுக்குப் பக்கத்தில் விரைந்து வந்து உட்கார்ந்தான் குணசீலன்.

''சாரு! சாரு! உன் வாழ்நாளில் நீ செய்துள்ள காரியங்களில் ரொம்ப ரொம்ப நியாயமான, புத்திசாலித்தனமான காரியம் இதுதான். அடாடா! எப்போது நீ இவ்வளவு சமர்த்தாக மாறினாய்?''

''உனக்காகத்தான் இந்த முடிவுக்கு வந்தேன்'' என்றாள் அவள். அவள் நெஞ்சு படபடத்தது.

''ஆ! தியாகம், அது இது என்றெல்லாம் கதை அளக்காதே! உனக்கு வேணுவை மணந்து கொள்ள ரொம்ப நாளாகவே ஆசை! ஆனால் இப்போதுதான் உனக்குத் தைரியம் வந்திருக்கிறது அதற்கு!''

நம்பியை ஏறிட்டுப் பார்க்க வெட்கப்பட்டுக் கொண்டிருந்த அவளை, ''சாரு!'' என்று மெதுவாக அழைத்தார் பெருமாள்.

''அப்பா! நீங்களா பேசினீர்கள்?''

ஆச்சரியமும் அளவு கடந்த ஆனந்தமும் பொங்க அப்பாவைப் பார்த்தாள் அவள்.

''மௌன விரதம் இன்றோடு முடிய வேண்டியது தானே? ஆண்டவனிடம் நான் எதற்காக இத்தனை நாட்களாகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேனோ, அது நடந்து விட்டதே!''

மூவருக்குமே எத்தனையோ விஷயங்கள் பேச வேண்டியிருந்தன. கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியவை இருந்தன. ஆனால் எதை முதலில் கேட்பது, சொல்வது என்று புரியாமல் மூவரும் பேசாதிருந்தார்கள். இன்ப வேதனை மூவர் உள்ளங்களிலும் ததும்பி நின்றது.

சாருலதா மௌனத்தைக் கலைத்தாள். ''அப்பா! நான் ரிஜிஸ்தர் கல்யாணம் செய்து கொள்வது என்று தீர்மானித்து விட்டேன். அப்புறம் ஒரு 'ரிஸப்ஷன்' நடத்தி விடலாம்.''

''நோ! நோ! அதெல்லாம் கூடாது! மூன்று கல்யாணங்களும் ஒரே பந்தலில் நடக்கட்டுமே!'' என்றான் குணசீலன்.

பெருமாள் ஒருகணம் யோசித்து விட்டு, ''ஓ! சாரங்கனையும் சேர்த்துச் சொல்கிறாயா?'' என்று கேட்டார். பிறகு, ''சாரு சொல்வதுதான் சரி. அவளைச் சங்கடத்துக்குள்ளாக்கக் கூடாது நாம்'' என்றார்.

''என்ன சங்கடம்?''


''போடா, அசடு!'' என்று தந்தை கடிந்து கொண்டார். ''கட்டியும் ராக்கொடியும் வைத்துக் கொண்டு மணப் பந்தலில் சாரு உட்காருவாளா? அல்லது நலங்கு விளையாட்டில்தான் அவளால் ஈடுபட முடியுமா? அதெல்



''நம்பி கடையில் வாங்கின புடவைக்குப் பாக்கி தர முடியாமல் திரும்ப தந்த அந்தப் புடவையே தான் காரணம் என்கிறீங்களே இந்த அம்மா, அது எப்படி இருக்க முடியும்?''

(53ம் பக்கம் பார்க்க)

வாழ்வில் முன்னேற விரும்பும் இளைஞர்களில் நீங்களும் ஒருவரா?



முன்னேற விரும்புவோர்க்கு வாழ்வே ஒரு எதிர்நீச்சல்.
அதைச் சமாளிக்க இணையற்ற ஆர்வம், ஈடில்லாமுயற்சி.
உத்வேகம் முதலியன உறுதுணை நிற்கும்.
இவை ஒருங்கிணைந்த இளைஞரா நீங்கள்?

அப்படியானால் உங்களுக்கேற்ற சைக்கிள் பிலிப்ஸ்
உங்கள் துடிப்புமிகு தன்னம்பிக்கை, உறுதிமிகு ஆர்வம்,
இவற்றை அப்படியே பிரதிபலிக்கிறது பிலிப்ஸ் சைக்கிள்.

உயரிய எஃகினால் நுண்ணிய வேலைப்பாட்டுடன்
உருவாக்கப்படும் பிலிப்ஸ் உறுதியில் தன்னிகரற்றது.
சவாரிக்கு சுகமானது. தோற்றத்தில் எடுப்பானது.

வெற்றிப்பாதையில்
வேகமாக முன்னேற

பிலிப்ஸ்

சைக்கிள்

இந்தியாவில் தயாரிப்போர்: டி ஐ சைக்கிள்ஸ்
ஆஃப் இந்தியா, அம்பத்தூர், சென்னை-53
உரிமையாளர்கள்: டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆஃப்
இந்தியா லிமிடெட், சென்னை-1
பதிவு பெற்று உபயோகிப்போர்.
J.A. பிலிப்ஸ் கம்பெனி லிமிடெட்.
யு.கேவின் பதிவுபெற்ற டிரேட் மார்க்குகள்

TIC/PM/5382

லாம் காலா காலத்தில் நடக்கிற கல்யாணங்களுக்குத்தான் பொருந்தும். உனக்கும் சாரங்கனுக்கும் எல்லாம் சம்பிரதாயப்படி நடக்கட்டும். நாங்கள் பார்த்துச் சந்தோஷப்படுகிறோம். சாருவை அவள் இஷ்டப்படி விட்டு விடு.''

''கமலாவின் கழுத்தில் தாலி கட்டப் போகிறோம் என்பதால் குணவுக்குத் தலைகால் புரியவில்லை'' என்று கூறிச் சிரித்தாள் சாருலதா.

''சாரு!'' என்று அழைத்து, பிறகு தயங்கினார் பெருமாள். தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''வேணுவுக்கு விவரமெல்லாம் தெரியுமா, அம்மா?'' என்று கேட்டார்.

''தெரியும். என் கதை முழுவதையும் சொல்லி விட்டேன். எல்லாவற்றையும் கேட்ட பிறகும் என்னை மணந்து கொள்வதில் துடியாய் நிற்கிறார். நான்தான் தட்டிக் கழித்துக்கொண்டே வந்தேன். அவர் அம்மா கூட மனப்பூர்வமாய் ஆசிர்வதித்து விட்டாளாம்.'' சாருலதா விழியோரத்தில் தேங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.



''எப்படி இருக்க முடியும்னு சொல்றேன். அவ்வளவு விலையில் நான் புடவை வாங்கினதாகக் கேள்விப்பட்டதும் என் கணவருக்கு ரத்தக் கொதிப்பு வந்து, அதுனாலே அவரை ஆஸ்பத்திரியில் சேர்க்கும்படியாகி, அங்கே ஏற்பட்ட ரூபாய் செலவு. அப்படி செலவானதினாலே நான் உங்க புடவை பாக்கியைத் திருப்பித் தர முடியவில்லை. புரிஞ்சுதா?''

''இப்போ நீ எடுத்திருக்கிற முடிவு நான் சரியானது சாரு. சந்தேகமே யில்லை. நான் செய்த பூஜாபலன்தான் வேணுவைப் போன்ற ஒரு தங்கமான மாப்பிள்ளை இந்த வீட்டுக்குக் கிடைத்திருக்கிறான்.'' பெருமையோடு பேசினார் பெருமாள்.

''அப்பா! குணவின் கல்யாணத்துக்கு நமது உறவினர்கள், பழைய நண்பர்கள் எல்லோரையும் அழைக்கலாம் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''அவர்களில் பலருக்கு நம்மை மறந்தே போயிருக்கும். ஆனாலும் உறவு முறைகளைக் கத்திரித்துக் கொள்ளாமல் சந்தர்ப்பம் ஏற்படும்போது அணைத்துக் கொண்டு போவதுதான் சரி.''

''நம்மை மறந்திருக்கலாம், ஆனால் சாருலதாவைத் தெரிந்திருக்கும். அவள் தங்களுக்கு உறவு என்று அறியும்போது எவ்வளவு ஆச்சரியப்படுவார்கள்!'' என்று கூறிச் சிரித்தான் குணசீலன்.

''எல்லோருமே அப்படி என்று சொல்ல முடியாது. சிலருக்கு நாம் இன்னார் என்பது தெரிந்திருக்கும். ஆனால் கிட்டத்தில் நெருங்கத் தயங்கி ஒதுங்கி யிருப்பார்கள். செல்வம் ஒரு விதத்தில் சிறைதான்!''

''நல்லதாய்ப்போயிற்று: உறவு முறை கொண்டாடி இழைந்து வேண்டாத கேள்விகளைக் கேட்டுச் சிரமப்படுத்துவதை விட இது மேல்'' என்றாள் சாருலதா. ''சாருலதாவின் திறமையும் சாமர்த்தியமும் தான் இந்தக் குடும்பத்தின் செல்வச் செழிப்புக்குக் காரணம் என்று கருதுபவர்கள் அப்படியே தொடர்ந்து நினைத்துக்கொண்டிருக்கட்டும்.''

'அந்த எண்ணத்திலும் தவறு ஏதுமில்லையே, சாரு! சந்தர்ப்பங்கள் எத்தனையோ பேர்களுக்கு ஏற்படுகின்றன. அந்தச் சந்தர்ப்பங்களை எல்லோருமே நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு முன்னேறி விடுகிறார்களா; வாழ்க்கையில்? கிண்டி குதிரைப் பந்தயத்தில் இரண்டு லட்சம் ரூபாய் ஜாக்பாட் அடிக்கிறான் ஒருவன். அது விரும்பத் தகாத முறையில் கிடைத்த பணம்தான். ஆனால் அதன்பிறகு அந்தப் பணத்தைச் சாமர்த்தியமாகக் கையாண்டு முன்னுக்கு வராமல் கெட்டலைபவன் முட்டாள். வாய்ப்புக்களை நழுவவிடாமல் உயர் நிலைக்கு வருபவர்கள் ரொம்ப சொற்பம்.''

டெலிபோன் மணி அடித்தது.

சாருலதா ரிஸீவரைக் கையில் எடுத்தாள். ''ஹலோ?''

மறுபுறம் ஆண் குரல் ஒலித்தது. ''யார்? சாருவா? நான் டாக்டர் மல்லிகார்ஜுனன் பேசுகிறேன்.''

''ஓ! யெஸ், டாக்டர்! குட் ஈவினிங்!''

''சாரு, நீ பயப்படக் கூடாது. அதிர்ச்சி தரக்கூடிய ஒரு செய்தி சொல்லப் போகிறேன். நீ தைரியமாக இருக்க வேண்டும். என்ன புரிந்ததா?'' என்றார் டாக்டர் மல்லிகார்ஜுனன். (தொடரும்)

பிரும்ம கான சபா (Regd.)

மயிலாப்பூர் - போன்: 72767 - சென்னை-4

"முதல் ஆண்டு விழா"

யுனிவர்ஸிடி சென்டினரி ஹாலில்

14-4-70 செவ்வாய் தமிழ்ப் புத்தாண்டு திருநாளில்
மாலை 5-15 மணிக்கு

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி - பாட்டு

வி. வி. சுப்பிரமணியம்	- வயலின்	வி. நாகராஜன்	- கஞ்சிரா
டி. கே. மூர்த்தி	- மிருதங்கம்	டி. எச். விநாயக்ராம்	- கடம்

மியூஸிக் அகாடமி ஹாலில்

18-4-70 சனி & 19-4-70 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
கலா நிலையம் (திருவல்லிக்கேணி) அளிக்கும்
99-வது & 100-வது நாடகம்
"வாஷிங்டனில் திருமணம்" By: சாவி

24-4-70 வெள்ளி & 25-4-70 சனி மாலை 6-30 மணிக்கு
சேவா ஸ்டேஜ் நாடக சபா S. V. சகஸ்ரநாமம் அளிக்கும்
"சந்நிய தரிசனம்"

3-5-70 ஞாயிறு மாலை 6-05 மணிக்கு
சிட்டிபாபு - வீணை
வேலூர் ராமபத்ரன் - மிருதங்கம்

யுனிவர்ஸிடி சென்டினரி ஹாலில்

10-5-70 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
பரதநாட்டியாலயா அளிக்கும் கமலா, ராதா, வசந்தி & குழுவினர் பங்கு கொள்ளும் **"நாட்டியாஞ்சலி"**
(இந்தியாவின் பல்வேறு ஸ்தல மகிமைகளை விளக்கும் ஒப்பற்ற நாட்டிய நாடகம் முதன்முறையாக அளிக்கப்படுகிறது)
நடன அமைப்பு & டைரக்ஷன்: கமலா

மியூஸிக் அகாடமி ஹாலில்

16-5-70 சனி & 17-5-70 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
நேஷனல் தியேட்டர்ஸ் மனோகர் அளிக்கும்
"சாணக்ய முத்ரராக்ஷஸன்"

14-6-70 ஞாயிறு மாலை 6-05 மணிக்கு
யுனிவர்ஸிடி சென்டினரி ஹாலில்
பத்மஸ்ரீ பிஸ்மில்லாகான் & பார்ட்டி - ஷெனாய்

மியூஸிக் அகாடமி ஹாலில்

20-6-70 சனி & 21-6-70 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
நேஷனல் தியேட்டர்ஸ் மனோகர் அளிக்கும்
"சூரபத்மன்"
நாடக ஆக்கம் & உரையாடல்: இரா. பழனிசாமி

தினசரி டிக்கட்டுகள்: ரூ. 15, 10, 5, 3 & 2

டிக்கெட்டுகள் தினசரி காலை 9 மணி முதல் 43, அருள்மேதுமங்காபுரம், சென்னை-4 விலாசத்தில் கிடைக்கும் (போன்: 72767)

குறிப்பு: அங்கத்தினராக சேர விரும்புவோர்கள் மேற்கண்ட விலாசத்தில் காரியதரிசியை அணுகவும்

அவள் பெயர் கவிதா என்பது அப்புறமாகத்தான் தெரிந்தது. எனக்கு. முதன் முதலில் அவளைப் பார்த்தவுடனேயே ஒரு கவிதை நயத்துடன் கூடிய ஓர் அழகுக் கற்பனையை பிரம்மன் தன் இலக்கிய ரசனைகள் அத்தனையையும் திரட்டிப் படைத்த ஓர் அழகு வடிவத்தைப் பார்ப்பது போல மிக மிகப் பிரமிப்புடன்தான் பார்த்தேன். என் பெற்றோர் எனக்கு 'இந்திரன்' என்று வைத்த பெயரை நான் மாற்றிக் கொள்ளவில்லை.

உடம்பெல்லாம் கண்ணாக இல்லாவிட்டாலும் உள்ளத்தில் 'கண்' இருந்தது. எதைப் பார்த்தாலும் அதில் ஒரு கண்!

போகட்டும், கவிதாவை 'ஏர் ஃபோர்ஸின் பாஸிங் அவுட் பரேடின்'போது பார்த்த நினைவு.

அவள் அண்ணா ராம் (எனக்கு சீனியர் 'குரூப்') தன் பயிற்சி முடிந்து அதிகாரி விருது பெறும் வைபவத்தைக் காண வந்திருக்கிறாள். மடையன் இந்த ராம்... தனக்கு இப்படி ஒரு தங்கை இருப்பதை என்னிடம் சொல்லவேயில்லையே! இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. ராம் அதிகாரியாய்ப் பெங்களூர் போகிறான். அவன் தங்கை கல்லூரிப் படிப்பு முடிந்து ஹாஸ்டலில் இருந்து இப்போதுதான் வந்திருக்கிறாள். எனக்கு இன்னும் ஆறு மாதப் பயிற்சி பாக்கியிருக்கிறது. போதாதா?

அன்று இரவு விருந்தில் அவளை நன்றாகப் பார்த்தேன் நான். ராம் அவளை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தான். ''மீட் மிஸ் கவிதா...மை ஸிஸ்டர்...''

அந்த இரவு நேரத்தின் மென்மையிலே, மங்கிய நீல விளக்கு சிந்திய ஒளியிலே, மயக்கமான அந்தச் சூழ்நிலையில் அவள் ஒரு 'போதை'யாய், புரிபடாத மென்கனவையாய் நின்றிருந்தாள்.



சிரித்த அந்த முகம், உணர்ச்சித் துடிப்புடன் சுழலும் அந்தச் சலன விழிகள், துடிக்கும் உதடுகள் ... எனக்கு நம்பிக்கை இருந்தது.

அவள் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக இருக்கலாம்; ஆனால் இந்தப் புதுமைகள் இந்தப் 'புது' உலகம் அவளுக்குப் புரியாத ஒன்று என்பதைப் புரிந்து கொண்டேன்.

பெண்களைக் கவர ஒரே வழி... 'சைகலாஜிகல் அப்ரோச்'... அதுவும் கவிதா... சே... அவள்தான் என்ன அழகு! சிரிக்கும் போது அவள் கன்னத்தில் விழுகிறதே ஒரு குழி... சுழன்றோடும் நதியின் ஓட்டத்தில் ஒரு சுழியைப் போல் அந்தக் குழிக்குள் என் மனம் சிக்கிக் கொண்டதோ?

"மிஸ்டர் இந்திரன்! என் தங்கையை அடிக்கடி கவனித்துக்கொள்."

"இனி உன் தங்கையைப் பற்றிய கவலை உனக்கு இல்லை; எனக்குத்தான்..."

"என்னைப் பற்றிக் கவலைப்பட எனக்குத் தெரியும். நீங்கள் இருவருமே கவலைப்பட வேண்டாம்."

சிரிப்பின் மெல்லிய அலைகள் ஜலதரங்கத்தின் இசையாய்ப் பரவியது.

அன்று...

சனிக்கிழமை. 'பரேடு'கள் முடிந்து மாலை ஓய்வு. வெளியில் போய்வர அனுமதி உண்டு. 'கௌரவக் கைதி' வாழ்விலிருந்து சற்று விடுதலை. சட்டெனக் கவிதாவின் நினைவுதான் வந்தது எனக்கு. விலாசத்தை ஒரு முறை நினைவுபடுத்திக் கொண்டேன். என் கால்கள் என் எண்ணத்தைச் செயல்படுத்த முயன்றன.

அவள் வீட்டை அடைந்தபோது அவள் வயதான தாயார்தான் வீட்டிலிருந்தாள். ஏமாற்றம்தான். இருந்தாலும் மனத்தின் வின்னல்களை வெளியே காட்டாமல் அவளுக்கு ஏற்ற மாதிரி வேதாந்தத்தையும் தத்துவத்தையும் பேசினேன்.

"நல்ல பையன். கெட்டிக்காரப் பையன்." —கிழவி [illegible] பட்டம் தந்துவிட்டாள்.

நான் வெளியே நடந்தேன். வேதனையுடன் அருகில் இருந்த தியேட்டரில் நுழைந்தேன். படம் ஓடிக் கொண்டிருந்தது. இருட்டில் தட்டுத் தடுமாறியபடி போய் அமர்ந்தேன். ஒளியிலிருந்து இருட்டுக்கு வந்தாலும் தடுமாற்றம்தான். இருட்டிலிருந்து ஒளிக்குத் தாவினாலும் கூச்சம்தான்! கண்கள் ஒரு நிதானமடைந்ததும் மெல்லத் திரும்பினேன். என் அருகில்...என் மிக அருகில்...என் அடுத்த சீட்டில் கவிதா... என் கவிதாவே தான் அமர்ந்திருந்தாள். சினிமா பார்க்கும் மும்முரத்தில் அவள் என்னைக் கவனியாமல் இருந்திருக்கலாம். ஆனால் நான்...?

மனத்தின் துள்ளலுடன் சினிமா பார்க்க ஆரம்பித்தேன். எதையோ இழந்துவிட்டேன் என நினைத்தேன். எத்தகைய அரிய வாய்ப்பினை ஆண்டவனே உண்டுபண்ணியிருக்கிறார்! இந்த இடத்தில் ஆண்டவனை அழைப்பது அநாவசியம் என உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் ஆஸ்திகனுக்கு ஒரு கடவுள் இருந்தால் நாஸ்திகனுக்கும் ஒரு சைத்தான் இருக்க வேண்டுமே! —

சரியான சமயத்தில் இடைவேளை வந்தது.

"ஸாரி" — என்று சொல்லியபடி திரும்பியவன் அப்போதுதான் அவளைப் பார்ப்பவனாக, "ஹாய் கவிதா! நீயா?" என்றேன் மிகுந்த வியப்புடன்.

அவளும் மிகுந்த அதிசயத்துடன் என்னைப் பார்த்தாள்.

அதன் பிறகு...

என்ன என்னவோ பேசினோம். எதை எதையோ வாங்கிச் சாப்பிட்டோம். மீண்டும் விளக்குகள் அணைந்த பிறகு அடிக்கடி நான் 'ஸாரி' சொன்ன நினைவு!

அவள் சிரித்துக் கொண்டேயிருந்தாள்.

அடுத்த சந்திப்பை ஆவலுடன் எதிர்பார்த்தேன் நான். அன்று இரவு ... நான் கனவே காணவில்லை. ஆம்... தூங்கினால் தானே கனவு காண!

அதற்குப் பிறகு...

பலமுறை அவளைச் சந்தித்தேன். பல மணி நேரங்கள் பேசிக் கொண்டே இருந்தேன். பார்க்கில், சினிமாவில், நாடகத்தில், நாங்கள் சந்தித்துக் கொண்டேயிருந்தோம்.

என் நண்பர்கள் பலரின் வாழ்வில் நடந்த எத்தனை எத்தனையோ பரிதாபச் சம்பவங்களை என் சொந்த வாழ்வில் நடந்ததுபோல் கூறும் திறமை எனக்கு இருந்ததை நான் சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது.

என்னுடைய 'ஏர்போர்ஸ்' கதைகளையெல்லாம் வியப்புடன் அவள் கேட்டுக் கொண்டிருந்தாள். எப்படிப்பட்டதொரு பயங்கரமான வாழ்வில், நாட்டின் நலனைக் கருதும் பணியில், தன் சொந்த விருப்பு வெறுப்புகளைத் தியாகம் செய்யும் பணியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறேன் என்பதைக் கதையாய்...காவியமாய் வருணித்தேன்.

நான் சொன்னவை உண்மைதான். அந்த 'இலட்சியம்' உயர்ந்ததுதான்.....ஆனால்.... என் இலட்சியம்? அது எனக்கே தெரியும்!

'கோரிக்கைகளுடன் வரும்போது கடவுள் தரிசனம் கிடைப்பதில்லை; காணிக்கையுடன், இதயக் காணிக்கையுடன் வரும்போதுதான் கடவுள் சாட்சாத்காரம் கிடைக்கும்' என்பார்கள் பெரியவர்கள்.

நானும் அப்படித்தான்..... என்னைப் பொறுத்தவரை கவிதா என் கடவுள்...என் பூஜைக்குத் தெய்வம். என் அன்புக் காணிக்கையுடன்தான் அவள் சந்நிதானத்துக்குள் நுழைந்தேன். ஆனால் நான் பக்தனல்ல.... சாதாரண மனிதன்.. சராசரி மனிதன்...

கோரிக்கையுடன் காத்திருப்பது தவறா?

அன்று...?

கவிதாவின் வீட்டில் யாருமில்லை.

"உறவினருக்குக் கல்யாணம். அம்மா போயிருக்கிறாள். நீங்கள் வரப்போகிறீர்களே என்று நான் போகவில்லை..." சிரித்தபடியே கூறினாள் கவிதா.

"என்மீது அத்தனை அன்பு. அப்படித் தானே?"

இயற்கையாகச் சிரிக்க முயன்றேன். என் கண்கள் எங்கெங்கோ அலைபாய்ந்தன.

அவள் தலை குனிந்து கொண்டாள்.

"அண்ணாவின் அருமை நண்பராயிற்றே... உங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டாமா?"

"அவ்வளவுதானா கவிதா?"

''அவ்வளவுதான்...''

''எங்கே என்னை நிமிர்ந்து பார்த்துச் சொல்!'' என்னை நோக்கி நிமிர்ந்த அவள் கண்கள் மீண்டும் தாழ்ந்தன.

''கவிதா... நீ....நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா? காவியத்தின் சிருங்கார ரஸம்போல்.''

அவள் நிமிரவில்லை. என் கண்கள் சுதந்திரமாய்ச் சுற்றிப் பறந்தன.

''உங்கள் வாழ்வில் எத்தனையோ பெண்களைச் சந்தித்திருப்பீர்கள் இல்லையா? நான்.....''

நான் எனக்குள் சிரித்துக் கொண்டேன். பெண்கள் பெண்கள்தான். தான் விரும்பும் ஆடவனின் கடந்த கால வாழ்வு பற்றி அறிந்து கொள்ளத்தான் எத்தனை ஆர்வம் அவர்களுக்கு! என்னிடம் கூட எத்தனையோ பெண்கள் இதே கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார்கள்!

நானும் அதே மாதிரி ஒரே பதிலைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால்.... ஆனால் இன்று ஏனோ என் மனம் இடறுகிறது.

''கவிதா... ஆண்டவன் படைத்த வண்ணத் தோட்டத்தில் ஆயிரமாயிரம் மலர்கள் பூத்திருந்தாலும் பெண்களின் முக அழகைப் பற்றி ஒப்பிட்டுப் பேசும்போது தாமரையைத் தானே குறிப்பிடுகிறோம்... பெண்களில் பலர் அழகாக இருக்கலாம்... கவர்ச்சியுடன் கூட இருக்கலாம்.... ஆனால் உன்னிடம் அன்பு, அழகு, அறிவு, அடக்கம் எல்லாம் பொருந்திய ஓர் அற்புதக் கவர்ச்சி! அழகு முகத்தில் மட்டுமில்லை....மனத்தில் கூட இருக்கிறது.''

நான்... நானா இப்படிப் பேசினேன்...? எனக்கே பிரமிப்பு. கவிதா நிதானமாகக் கேட்டாள்.

''ஒருவேளை...ஒருவேளை...நம் .. இருவருக்கும் இடையில் இடையூறு முளைத்தால்...''

நான் இலட்சியவாதியாக முழக்கமிட்டேன்.

''இடையூறுகளைக் கடப்போம்... வாழ்வு என்பது ரோஜாப்பூ விரித்த பாதையல்ல... முட்களிருந்தால் கடக்க வேண்டியதுதான்.''

கவிதா மெல்லக் கேட்டாள்.

''அந்தத் துணிவு உங்களுக்கு இருக்கிறதா?''

''நிச்சயமாக இருக்கிறது.''

கவிதா சற்று நேரம் பேசாமலிருந்தாள். அவள் என் வார்த்தைகளால் முழுதும் கவரப்பட்டாள் என்கிற உண்மை எனக்கு நன்கு புலனாயிற்று.

நான் என் குரலில் மென்மையை வரவழைத்துக் கொண்டேன். அவள் அருகே நெருங்கி உட்கார்ந்தேன்.

''என்ன கவிதா யோசனை?''

அவள் விலகவில்லை. அவளும் துணிச்சல்காரிதான்.

பாரதியாரைப் பாடத் தூண்டிய பாட்டு! (உண்மை நிகழ்ச்சி)

மகா கவி பாரதியார் புதுச்சேரியில் மற்ற சுதேசி இயக்கத் தலைவர்களோடு தங்கியிருந்த சமயம். ஒரு நாள் பாரதியார், தம் மனைவி செல்லம்மாவுக்கும் தெரியாமல் மாறுவேடம் போட்டுக் கொண்டு வெளியூர் பயணமானார். சுதேசி இயக்கத்தைச் சேர்ந்தவர்களை பிரிட்டிஷ் அரசாங்கம் தீவிரமாக வேட்டையாடிக் கொண்டிருந்தது. சி. ஐ. டி. போலீசார் தீவிரமாகப் புதுச்சேரியிலிருந்து வந்து கொண்டிருந்தவர்களைக் கண்காணித்தனர்.

இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலையிலும் சற்றும் அஞ்சாமல் பாரதியார் மாறுவேடத்துடன் புதுச்சேரியைக் கடந்து ரயில் பயணம் செய்து கொண்டிருந்தார். இந்தப் பயணத்துக்காகப் பாரதியார் தாம் வளர்த்து வந்த தாடி, மீசையைப்பும் களைந்து விட்டிருந்தார். பாரதியார் அமர்ந்திருந்த பெட்டிக்குள் திடீரென்று ஒரு குரல் எழுந்தது - வேறொன்றுமில்லை. ரயில் பிச்சைக்காரி பாடித்தான்!

ஒவ்வொரு வண்டியாக ஏறி இறங்கிப் பிச்சை கேட்டு வந்த இளம் பெண் ஒருத்திதான் பாரதியார் பெட்டிக்குள்ளும் பிரவேசித்தாள். பிச்சைக்காரப் பெண் இந்துஸ்தானி மெட்டில் கர்ணாமிர்தமாகப் பாடினாள். அவள் பாட்டிலும் மெட்டிலும் பாரதியார் உள்ளத்தைப் பறி கொடுத்துவிட்டார். கவிபுள்ளமாயிற்றே! பிச்சை கேட்டு வந்த பெண் பெட்டியினுள் வளைய வந்துவிட்டு அடுத்த பெட்டிக்குள் போனாள்.



பாரதியார்.....?

சற்று முன் கேட்ட இந்துஸ்தானி மெட்டில் புதிய கவிதை ஒன்றை உருவாக்கிக் கொண்டிருந்தார். கவிதை பிறந்து விட்டது! அப்போது அவருக்கு வாய் விட்டுப் பாட வேண்டுமென ஆசை எழுந்தது: உள்ளம் துடித்தது. வாய் விட்டுப் பாட ஆரம்பித்தால் எங்கே தம் மாறுவேடம் தெரிந்துவிடுமோ எனத் தோன்றியதால் மிகுந்த சிரமத்துடன் பிள்ளைப் பேறு சமயம் பெண் தவிப்பதுபோல வெகு வேதனையடைந்து பாட்டைப் பாடாமல் அடக்கிக் கொண்டுவிட்டார்.

இப்படி ரயில் பயணத்தின்போது எதிர்பாராமல் உருவான பாடல்தான் ''பாருக்குள்ளே நல்ல நாடு- எங்கள் பாரத நாடு'' என்ற இந்துஸ்தானி மெட்டில் அமைந்த பாடல்!

(பின் குறிப்பு: ஓர் அச்சுக் குறிப்பில் காணப்பட்ட இந்தத் தகவலுடன் பாரதியாரின் இரண்டாவது மகளான ஸ்ரீமதி சகுந்தலா இல்லம் சென்றேன். ரயிலில் கேட்ட மெட்டில் பாடிய பாட்டையும் காண்பித்தேன். ''என் தந்தையார் புதுச்சேரியிலிருந்து அடிக்கடி மாறுவேடத்தில் வெளியூர்களுக்குச் சென்று வந்ததைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படிப் போன ஒரு சந்தர்ப்பத்தில் ரயிலில் பாட்டுக் கேட்டு எழுதியிருக்கலாம்...'' என்னும் கருத்தை அவர்கள் தெரிவித்தார்கள்.)

— ஏ. சுவாமிநாதன்

அவன் விட்ட மூச்சுக்களில் உஷ்ணத்தை என்னால் உணர முடிந்தது.

இது எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் பொன்னான நேரம். நான் பைத்தியக்காரனாக இருக்கக்கூடாது. நான் முன்னும் அடியெடுத்து வைக்க வேண்டிய தருணம்.

"கவிதா!" — மெல்ல அழைத்தபடி அவள் முகத்தை நிமிர்த்தினேன்.

அதே சமயம்—

"பளார்!"

அறைந்தது...?

ராம்! கவிதாவின் அண்ணன்! வீட்டுக்கு வந்திருக்கிறானா?

"இதுதான் நீ என் தங்கையைக் கவனித்துக்கொள்ளும் லட்சணமா?" என்று கேட்ட அவன் என்ன என்னமோ பேசினான்... பெரிதாகக் குதிகுதித்தான். என்னமோ அவனுடைய அன்புத் தங்கையை உலகம் தெரியாத அப்பாவிப் பெண்ணின் மனத்தைக் கெடுத்து விட்டதாகக் கத்தினான்.

கவிதாவின் மேல் தப்பே இல்லை போல் பேசியது எனக்கு எரிச்சலாக இருந்தது.

கவிதா...?

அவள் பேசாமல் அமர்ந்திருந்தாள்.

என் ஆத்திரம் கரை புரண்டது.

"சரிதான் மிஸ்டர் ராம்! நிறுத்திக்கொள். அத்துடன், உன் தங்கை இடம் தரவில்லை என்றால் நான் இவ்வளவு தூரம் முன்னேறி இருக்க முடியுமா? அவள் ஓர் இலட்சியப் பெண்ணாக இருந்தால் ஏன் என்னுடன் துணையின்றி ஊர் சுற்ற வேண்டும்?, அவளுக்கு இது போல் எத்தனை நண்பர்களோ? எத்தனை உறவுகளோ....?"

நான் வாக்கியத்தை முடிக்கவில்லை. மீண்டும் ஒரு "பளார்!"

இம்முறை அறைந்தது....?

கவிதா! கவிதாவேதான்! அவள் கண்கள் கலங்கியிருந்தன.... "மிஸ்டர் இந்திரன்! உங்களுக்கு நான் இடம் தந்தேன், உண்மை. என்னைச் சுற்றித் திரிந்த எத்தனை எத்தனையோ கும்பல்களுக்கு இடம் அளிக்காத நான் உங்களுக்கு இடமளித்தேன். உயர்ந்தவர் போல் நடித்த உங்கள் நடிப்புக்கு மதிப்பளித்து அதை நம்பி இடமளித்தேன்... முதல் பார்வையிலேயே என் கையைத் தொட்டவனைக் கன்னத்தில் அறைந்திருக்கிறேன். உங்களைவிட அவன் நல்லவன். என் கல்லூரி நண்பன். தன் தவற்றை எண்ணி வருந்தி மன்னிப்புக் கேட்டு என் கால்களைத் தொட்டுக் கும்பிட்டான் அவன். ஆனால் நீங்களோ...? என் அண்ணாவின் சொற்களால் ஆத்திரமடைந்து மனமறிந்து அபாண்டப் பழியை ஒரு பெண்மீது சுமத்துகிறீர்களே! 'உன் தங்கையைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்' என்று துணிவான ஒரு சொல் உங்கள் கண்டத்திலிருந்து புறப்படவில்லையே! நீங்களா உண்மைக் காதலர்? இன்று இப்பழியைச் சுமத்தியவர் நாளை எப்பழியையும் சுமத்தத் தயங்க மாட்டீர்கள்! என்னிடம் என்ன துணிவை எதிர்பார்த்தீர்கள்? 'துணிவு வேண்டும் உண்மைகளைச் சந்திக்கும் திடம் வேண்டும்' என்று அடிக்கடி அறிவுரை தருவீர்களே... அது என்ன துணிவு? என்ன திடம்? தேரோட்டம் அறைக்கு உங்களுடன் வரும் துணிவா? ஏன் விழிக்கிறீர்கள்? இந்த அடியை அன்றே தந்திருக்க வேண்டும்... சினிமாத் தியேட்டரில் என் அருகில் அமர்ந்தபோதே தந்திருக்க வேண்டும். பலவீனமான பெண்மைதானே... தவிர உங்களைக் காதலனாக மனம் கள்ளத்தனமாக ஏற்றுக் கொண்டதன் விளைவு! நல்ல வேளை... என் மனத்தைத் திறந்து அண்ணாவுக்குக் கடிதம் எழுதினேன். அவனும் உங்களைப் பற்றியெல்லாம் விசாரித்து விட்டு எனக்குக் கடிதம் எழுதினான். 'நீங்கள் டூப் மாஸ்டர்' என்று! பல பெண் சிநேகிதிகள் கொண்ட கோபாலகிருஷ்ணன்' என்றான். ஆனால்... பைத்தியக்காரப் பெண் நான்... காதலில் தோல்வி காண முடியாத என் மனத்தின் குரல்களை நானே தேய்த்துக் கொண்டேன். கடந்த காலம் எப்படி இருந்தாலும் நிகழ்காலத்தின் நிழலை வசந்தத்தின் தென்றலென நினைத்து ஏமாந்தேன். இலையுதிர் காலத்தின் மொட்டை மரத்தின் கீழ் நிற்பது எனக்குத் தெரியவில்லை...என்னை நீங்கள் காதலிக்காவிட்டால் போகிறது.... ஆனால்... ஆனால்... சுயநலத்துக்காக அப்படி ஒரு பழியையா கற்பனை செய்வது?"

கவிதாவின் அழுகுரல் மெல்ல மெல்லக் கேட்கிறது... தொடர்பற்ற வாக்கியங்கள் கேவல்களுடன் கலந்து கலந்து வருகின்றன.

நான் தலைகுனிந்தபடியே மௌனமாக வெளியேறுகிறேன். நான் படித்த பெண்கள் மனோதத்துவப் புத்தகங்கள் என்னைப் பார்த்துச் சிரிக்கின்றன.


பெண் ஒரு புதிர்! அவர்களாலேயே விடுவிக்க முடியாத ஒரு புதிர்!

ஸ்ரீ ராம கான சபையின் ஸ்ரீ ராமநவமி உற்சவம்

இம்மாதம் 6ந்தேதி முதல் 16ந் தேதி வரை ஸ்ரீ ராம கான சபையின் ஆதரவில் சென்னை, திருவல்லிக்கேணி, நல்லதம்பி முதலித் தெரு, ஜெனரல் ஸ்டோர்ஸ் ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் கல்யாண மகாலில் ஸ்ரீ ராமநவமி உற்சவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இதில் ஸ்ரீ ராமபிரானுக்குக் கோடி அர்ச்சனை விசேஷ பூர்ண அம்சம். கோடி அர்ச்சனையில் பங்கு கொண்டு ஸ்ரீ ராமபிரானின் அருளுக்குப் பாத்திரர்களாக விரும்பும் பக்தர்கள் அர்ச்சனை ஒன்றுக்கு மூன்று ரூபாய் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்:

செயலாளர், ராம கான சபை, 30, வாலாஜா ரோட், சென்னை-2.

இதோ ஒரு
மிக வலிமையான டயர்




அதிக மைலேஜையும்
அதிக பாதுகாப்பையும்
தர பயர்ஸ்டோனின்
மும்மடங்கு சக்தி அமைப்பு முறை

நாள்தோறும் எண்ணற்ற குழிகள், ஏற்றத்தாழ்வுகள், கரடுமுரடான கற்கள், செப்பனிடப்படாத பாதைகள் இவற்றின் வழியே காரோட்டிச் செல்ல நேரிடுகிறதல்லவா ! இதனால் சாதாரண டயர் மிக சீக்கிரம் தேய்ந்து விடுகிறது. புதிய டயர்களின் விலையோ சொல்லவே வேண்டாம். அதனால் தான் பயர்ஸ்டோன் தனக்கே உரிய இந்த விசேஷ மும்மடங்கு சக்தி அமைப்பைப் பின்பற்றுகிறது.

மும்மடங்கு சக்தி அமைப்பு என்றால் என்ன ?

இந்த அமைப்பின்படி ஒரு விசேஷ முறையில் : 1. ட்ரெட். டயருடன் பாண்ட் செய்யப்படுகிறது 2. டயரின் பக்கங்கள் வலிமைப்படுத்தப் படுகின்றன 3. ஒவ்வொரு கார்டும் இன்ஸுலேட் செய்யப்படுகிறது.



பயர்ஸ்டோன்

இந்தியா முழுவதும் விற்கப்படுகிறது—
இன்றே பயர்ஸ்டோன் விற்பனையாளரை அணுகுங்கள



வேகமாக இயங்கிக் கொண்டிருந்தன ஜானின் கால்களும், கைகளும். நெற்றியில் வியர்வை வழிந்தோட, அடிக்கொரு தரம் அவற்றை ஒற்றி எடுத்தவாறு துணிகளைத் தைத்துக் கொண்டிருந்தான் அவன். அச் சமயம் கிறிஸ்துமஸ் நெருங்கிக் கொண்டிருந்தது. எனவே மேலும் மேலும் துணிகள் வந்து குவிந்த வண்ணம் இருந்தன. வேலையில் ஊன்றியிருந்த அவனை நிமிர்ந்து பார்க்கச் செய்தது ஒரு பிஞ்சுக் குரல்.

''டெய்லர் மாமா!''

கற்றை கற்றையான சுருள் முடி. குறு குறுத்த கண்கள். குங்குமச் சிமிழ் போன்ற உதடுகள். காண்பவரைக் கவரும் தோற்றம். வயது ஐந்திருக்கும். அவனது கடையிலிருந்து நான்கைந்து வீடுகள் தள்ளி ஒரு பங்களாவில் வசிக்கும் பேராசிரியர் பீட்டரின் குழந்தை இது. அதன் தாயார் இக்குழந்தையுடன் பல முறை அவன் கடைக்கு வந்திருக்கிறாள். அந்தப் பழக்கத்தில் 'துணியைக் கொடுக்க நானே போகிறேன்' என்று முரண்டு பிடித்திருக்கும். அனுப்பி யிருக்கிறார்கள்.

''என்னம்மா வேணும்?''

''அம்மா எனக்குக் கவுன் தைக்கச் சொல்லி இதைக் கொடுத்தாங்க. அளவெல்லாம் எடுத்துக்கச் சொன்னாங்க.''





சொர்க்கம்!

"இங்கே வா!" என்று கூறி இன்ச் டேப்பினால் அளவுகளை வெல்லாம் எடுத்துக் கொண்டே வந்த ஜானின் கண்கள் நிலைக் குத்திட்டு நின்றன. அக்குழந்தை அணிந்திருந்த வெல்வெட் கவுனுக்கு மேல் தவழ்ந்து கொண்டிருந்தது ஒரு மெல்லிய தங்கச் சங்கிலி. சிலுவைக் குறியிட்ட அழகான டாலருடன் இருந்த அந்தச் சங்கிலியின் மேல் அவன் பார்வை நிலைத்தது. அவனது கண்களின் முன் காலையில் அவன் வீட்டில் நிகழ்ந்த சம்பவம் சுழன்றது.

"அப்பா! அப்பா!"

தயங்கியவாறு அழைத்த வண்ணம் ஜானின் அருகில் வந்து நின்றாள் லில்லி.

"அப்பா! வந்து..."

"இந்த வந்து போயி எல்லாம் எனக்குப் பிடிக்காது. உனக்கு என்ன வேணுமோ அதைப் பளிச்சென்று சொல்லு. பார்ப்போம்."

"எங்க ஸ்கூல்லே ரோஸி, மார்கரெட் மேரி எல்லாருமே அழகழகா செயின் போட்டுக்கறாங்கப்பா. எனக்குத்தான் இல்லே. இந்தக் கிறிஸ்துமஸுக்கு எனக்கும் ஒரு செயின் வாங்கித் தரயாப்பா?"

'ஊம்' என்று நெடுமூச்செறிந்தான் ஜான்.

"அதுவும் அழகா 'க்ராஸ்' போட்ட டாலரோட வேணும் அப்பா. அதுதான் எனக்கு ரொம்பப் பிடிக்கும்."

சொல்ல வந்ததைச் சொல்லி விட்ட திருப்தியோடு துள்ளியோடி மறைந்தாள் லில்லி.

ஆறு வயதான அந்தச் சிறுமி லில்லியிடம் அவன் உயிரையே வைத்திருந்தான். ஒரே பெண். அவள் கேட்டதை உடனே வாங்கிக் கொடுத்து விடுவான். எப்போதும் அவள் கேட்பதெல்லாம் பழம், பிஸ்கட், விளையாட்டுச் சாமான்கள் இவற்றிலொன்றாகத்தான் இருக்கும். ஆனால் இன்றோ? எவ்வளவு பெரியதா யிருந்தாலும் ஒரு சங்கிலி வாங்க இருநூறு ரூபாய் தேவைப்படும். அவனது 'டெய்லரிங்' கடை மூலம் அவனுக்குக் கிடைப்பதோ சொற்பம். அவர்கள் சிக்கனமாகக் குடித்தனம் நடத்தி ஒப்பேற்றி வந்தனர். கிறிஸ்துமஸ் போன்ற விசேஷங்களை முன்னிட்டு வரும்படி கூடுதலாகக் கிடைத்தாலும் கிறிஸ்துமஸ் செலவுக்கு அது சரியாக இருக்கும். ஒரு பத்து, பதினைந்து ரூபாய் மிஞ்சுமோ என்னமோ. அவனை நம்பி யார் இருநூறு ரூபாய் கடன் கொடுப்பார்கள்? அப்படியே கிடைத்தாலும் அந்தக் கடனை அடைப்பது எப்படி?

"மாமா! கவுனை எப்போது கொடுப்பீங்க?"

ஜானின் சிந்தனை விடுபட்டது.

"இன்னும் இரண்டே நாட்களில் கொடுத்து விடுவேன்னு அம்மாவிடம் சொல்லு!"

செல்வம் கொழிக்கும் குடும்பம். அவர்கள் நினைத்தால் ஆயிரம் சங்கிலிகளை அந்தக் குழந்தைக்குப் போடலாம். ஆனால் அவனது அருமை மகளின் ஆசையைப் பூர்த்தி செய்ய அவனால் முடியவில்லையே? அவன் உள்ளுணர்வு உறுத்தியது.

'நான் என்ன திருடனாகத் துணிந்து விட்டேனா என்ன?'

'சே! திருட்டு நம் தொழில் இல்லையே! கரை புரண்டோடும் வெள்ளத்தில் சிறிதளவு வறண்ட நிலத்துக்குப் பயன்பட்டால் என்ன? அவனே தனக்குச் சமாதானமும் கூறிக் கொண்டான்.

"பாப்பா! உன் பெயரென்னம்மா?"

"இஸ்...டெ...ல்...லா..." — கஷ்டப்பட்டுக் கூறி முடித்தது குழந்தை.

"ஓ! ஸ்டெல்லாவா! ஸ்வீட் நேம்! ஸ்வீட் பேபி!" என்று கொஞ்சியவாறு அவளைத் தூக்கிக் கொண்டான் ஜான். அதன் பின்னர் எத்தனையோ கேள்விகள். அவற்றுக்கு மழலை மொழியில் ஸ்டெல்லா கூறிய பதில்கள். இவற்றுக்கிடையில் அந்தக் குழந்தை அறியா வண்ணம் பின்புறமிருந்த கொக்கியை அவிழ்த்துச் சங்கிலியைக் கழற்றுவது சிரமமாயில்லை அவனுக்கு. தன் 'பாண்ட்' பாக்கெட்டினுள் அதைத் திணித்துக் கொண்டான். பின்னர் மெதுவாகக் குழந்தையைக் கீழே இறக்கி விட்டான். "அம்மா தேடுவாங்க, டாடா!" என்று ஓடினாள் ஸ்டெல்லா.

அன்று இரவு.

"நான் உனக்கு ஒரு பரிசு வைச்சிருக்கேன். இதோ பார்" என்று சங்கிலியை எடுத்துத் தன் மகளிடம் கொடுத்தான் ஜான்.

ஆவலோடு அதை வாங்கிக் கொண்ட லில்லி, "நான் கேட்ட மாதிரியே ரொம்ப அழகா யிருக்குப்பா. ஏதுப்பா இந்தச் சங்கிலி?" என்று கேட்டாள்.

"அதெல்லாம் உனக்கு வேண்டாம். உனக்குப் பிடிச்சிருக்கா, சொல்லு?"

"ரொம்ப ரொம்ப" என்று நீட்டி முழக்கினாள் லில்லி. அவள் முகத்தில் பொங்கிய மகிழ்ச்சியில் நெகிழ்ந்து போனான் ஜான். மீண்டும் பழைய எண்ண ஓட்டங்கள் எழுந்தன.

'ஸ்டெல்லாவின் வீட்டில் எத்தனையோ வேலைக்காரர்கள். அவர்களில் யாராவது ஒருவரோ, அல்லது அவள் தன் கடைக்கு வந்து போனபோது வழியில் எவரோதான் சங்கிலியைத் திருடிக் கொண்டதாக அவள் பெற்றோர்கள் நினைப்பார்கள். அவர்களுக்கு மிகவும் நம்பகமான தையற்காரனான என் மேல் சந்தேகம் எழ நியாயமே இல்லை' அவன் மனம் அமைதியுற்றது.

கடை வீதியில் ஒரே கூட்டம். கிறிஸ்து மஸ் முன்னிட்டு விளையாட்டுப் பொருள்களும் மற்றும் பல சாமான்களும் வாங்குவதற்காக வில்லியின் தாயாருடன் வில்லியும் சென்றிருந்தான். கண்ணைப் பறிக்கும் வண்ண விளக்குகளின் ஒளியில் அக்கடை வீதி சோபை பெற்றிருந்தது. பொம்மைக் கடைகளையும், துணிக் கடைகளையும், கண்களைக் கவர்ந்திழுக்கும் ஜுவல்லரிகளையும் வேடிக்கை பார்த்தவண்ணம் நகர்ந்து கொண்டிருந்தான் வில்லி. கூட்டத்தில் ஆங்காங்கு கான்ஸ்டேபிள்களும் நடமாடிக் கொண்டிருந்தனர்.

"வில்லி! கூட்டத்தில் பிரிந்து விடாமல் என் கூடவே வா" என்ற வண்ணம் அவன் கையைப் பற்றிக் கொண்ட அவன் தாய், "என்னடி! அப்பா கொடுத்த செயினைப் போட்டுக் கொண்டிருந்தாயே, அது எங்கே இப்போது?" என்று கேட்டுப் பதறினாள்.

தன் கழுத்தைத் தடவிய வில்லி, "ஐயையோ! செயினைக் காணுமே,அம்மா!" என்று ஓவென்று அழ ஆரம்பித்துவிட்டான்.

அதே சமயத்தில் அந்தக் கூட்டத்தில் ஒரு சங்கிலியை வேட்டியில் கட்டிய வண்ணம் மெல்ல நழுவிய கேடியைக் கவனித்தார் கான்ஸ்டேபிள் கண்ணாயிரம். அவனைப் பல முறை ஸ்டேஷனில் பார்த்திருக்கிறார் அவர். சந்தேகத்துடன் அவனைப் பின்தொடர்ந்தார். போலீஸ்காரர் தன்னைப் பின்தொடர்வதை அறிந்து கொண்ட திருடன், சட்டென்று ஒரு திருப்பத்தில் திரும்பி, ஒரு பெரிய சாலையை அடைந்து பதுங்கி நடந்தான். சற்று நேரத்தில் கான்ஸ்டேபிளும் அவ்வழியே வருவதைப் பார்த்து, 'இனி தப்ப முடியாது' என அறிந்து சங்கிலியைச் சட்டென்று எடுத்து ஒரு பங்களா காம்பவுண்டுக்குள் எறிந்து விட்டு எதிரேயிருந்த பெட்டிக் கடையில் ஒரு பீடியை வாங்கிச் சாவதானமாகப் பற்ற வைத்தான். அவனைத் தேடிய கான்ஸ்டேபிள், அந்தக் கடையில் தானும் ஒரு சிகரெட்டை வாங்கிக் கொண்டார். பின்னர், அவனை நோக்கி, "என்னடா, சங்கிலியை எடுத்துக்கிட்டுத் திருட்டு முழி முழிச்சுக்கிட்டு நிக்கறே. நட ஸ்டேஷனுக்கு" என்றார்.

"யோவ்! மரியாதையாப் பேசு. என்னய்யா சொல்லறே? நானா சங்கிலியை எடுத்தேன்? நானா திருட்டு முழி முழிக்கிறேன்? ஏதோ, ஒரு தபா ஜெயிலுக்கு வந்தாலே ஆயுசு முழுதும் திருடனென்று நினைச்சியா? வேணுமின்னா சோதனை போட்டுப் பார்த்துக்க" என்றவாறு வேட்டியை உதறினான்.

ஏமாற்றத்துடன் திரும்பி நடந்தார் கான்ஸ்டேபிள். 'கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே' என்ற உள்ளத்து ஆதங்கத்துடன் பூட்டியிருந்த பங்களா கேட்டைப் பார்த்த வண்ணம் திரும்பி நடந்தான் திருடன்.

ஜான் மிகவும் வேதனைப்பட்டான். "கள்ளமற்ற குழந்தையின் கழுத்திலிருந்து சங்கிலியைத் திருடிக் கொண்டு போய் வில்லியிடம் கொடுத்தேன். மனமறிந்து நான் செய்த வஞ்சகத்துக்குக் கர்த்தர்தான் தண்டனை அளித்து விட்டாரோ? தூய்மையான, நேர்மையான எண்ணங்களைக் கொண்ட வில்லியின் நெஞ்சின்மேல் களங்கத்தின் சின்னமாக அச்சங்கிலி தவழ்வதை அவர் விரும்பவில்லை போலும்' என்றெண்ணியவாறு தான் தைத்திருந்த துணிகளைத் தானே கொடுத்துவிட்டு வருவது' என்று புறப்பட்டான் ஜான். கடையைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி ஒரு சிறுவனை அமர்த்திவிட்டு விரைந்தான். கேட்டைத் திறந்து கொண்டு நுழைந்த அவன் கண்களில் வாசற்படியில் உட்கார்ந்திருந்த ஸ்டெல்லா தென்பட்டாள். ஆவலோடு அவன் கையிலிருந்த துணிகளைப் பெற்றுக் கொண்டு, "அம்மா!" என்று கத்திக் கொண்டே உள்ளே ஓடினாள். அதற்குள் வெளியே வந்துவிட்ட அவள் தாயார் ஜானைக் கவனித்துவிட்டு, "உள்ளே வாங்க. டெய்லர்!" என்று அழைத்து ஒரு நாற்காலியில் அவனை அமரச் செய்தாள். பின் ஒரு பிளாஸ்டிக் தட்டில் பிஸ்கட்டுகளை வைத்து அவன் முன்னால் வைத்தாள்.

"வேண்டாங்க. துணியைக் கொடுத்துட்டுப் போகலாம் என்று வந்தால் இதெல்லாம் எதுக்குங்க?"

"ஊஹூம்! சாப்பிடுங்க மாமா!" என்றாள் ஸ்டெல்லா.

"இத்தகைய அப்புள்ளங்களை ஏமாற்றின பாவி நான்" என்று ஜான் கூனிக் குறுகித் தனக்குள் மறுகினான்?

ஸ்டெல்லாவின் தாயார், "டெய்லர்! உங்க கடைக்குக் குழந்தையை அனுப்பினோமே! அன்னிக்கு அவள் கழுத்தில் போட்டிருந்த செயினைக் காணோம். வேறே செயின் வாங்கித் தரதாச் சொல்லி அவளைச் சமாதானப் படுத்தினோம். ஆனா அன்னிக்குச் சாயந்திரம் எங்க காம்பவுண்டுக்குள்ளேயே அது கிடைச்சது! குழந்தை அந்தப் பக்கம் போய் விளையாடியிருக்கா. கொக்கி சரியாப் பிடிக்காமே அது விழுந்திருக்கு. யோசிக்காமே எங்க வீட்டு வேலைக்காரர்கள் மேலெல்லாம் நான் சந்தேகப்பட்டேன். ரொம்ப வருத்தமாக இருந்தது அப்புறம்" என்று கூறினாள். சில சமயங்களில் அவனிடம் வீட்டு விஷயங்களைப் பற்றியும் அவள் பேசுவதுண்டு.


அப்போதுதான் முதன் முறையாக ஜான் ஸ்டெல்லாவின் கழுத்தைக் கவனித்தான். சிலுவை டாலருடன் கூடிய அதே சங்கிலி கூட்டத்தில் வில்லியின் கழுத்திலிருந்து காணமற்போன சங்கிலி இங்கு எப்படி வந்தது? இதுவும் கர்த்தரின் திருவிளையாடல் தானோ?

"நான் போயிட்டு வரேனம்மா."

விடைபெற்றுக் கொண்டான் ஜான். புனிதமான எண்ணங்கள் அவன் உள்ளத்தை நிறைத்தன. அவன் உதடுகள் மெல்ல முணுமுணுத்தன. "சேர வேண்டிய இடத்தில் அது சேர்ந்து விட்டது!"


உடல் தேய...
ஒவ்வொரு நிமிடமும் உழைப்பிலே செலவழிகிறது அவள் உள்ளடங்கிய க்ளுகோஸ்!
களைப்பு என்றால் உங்கள் உடம்பு க்ளுகோஸுக்காக ஏங்குகிறது என்றே பொருள். சக்தியைக் கணநேரத்தில் மீட்டுத் தருகிறது தூய க்ளுகோஸ் பவுடராகிய க்ளாக்ஸோஸ்-D
நம் உடம்பிலே சக்தியைத் தோற்றுவிக்கும் 'மூலதனம்' க்ளுகோஸ். களைப்பு மேலிடும்போது க்ளுகோஸ் சாப்பிட்டீர்களானால் தெம்பு மீளும். பால், பழச் சாறுகள், குடிநீர் ஆகியவற்றுடன் சேர்த்தோ, நேரடியாகவோ உண்பதற்கு உகந்தது க்ளாக்ஸோஸ்-D. மறவாதீர்கள், யாவரும் விரும்புவது இன்சுவையுள்ள க்ளாக்ஸோஸ்-D.
உடனடியான சக்தி பெற, ஒருசில காசுகளே செலவு!
க்ளாக்ஸோஸ்-D
க்ளாக்ஸோவின் க்ளுகோஸ் பவுடர்.

He knows
only his mother-tongue.
Yet he reads a
NEWSPAPER
every day



Which other medium can reach millions like him in 14 languages at so little cost?

Millions in this country do not know English. But through the 3,924 publications in as many as 14 Indian languages, your goods and services definitely come to their attention.

There are 105.5* million Indians today who can read and write.** They do not all own radios or go to the cinema; but 16.3 million of them read one or more newspapers and magazines in their own language.

There is a newspaper or magazine to reach every reader in his language, at the lowest cost per thousand.

* *(Publication: 'INDIA 1969')*

** *(Remember literacy is growing in this country at the rate of 5 million persons per year—and readership is growing with it)*

Address through the Press —it costs far less

IENS

Inserted in the interest of providing information for better advertising value by

THE INDIAN & EASTERN NEWSPAPER SOCIETY

everest/756b/IENS



6.00 6.30 10.00

ஸ்ரீவத்ஸன்

மாலை மணி ஆறு

ஹோட்டல் நள விலாஸ்.

வியாபாரம் மிகவும் மும்முரம்.

ஞாயிறு — முதல் சினிமா அப்பொழுது தான் விட்டார்கள். கூட்டம் முழுதும் உள்ளே வந்து விட்டது.

டபரா டம்ளர்கள் கலந்து உறவாடியதில் எழுந்த சப்தங்கள், க்ளீனர் கையிலிருந்து விடுதலை பெற்றுக் கீழே விழுந்து கண்ணாடி டம்ளர்கள் நொறுங்கியதால் ஏற்பட்ட சப்தங்கள்.

''மூன்று பேப்பர் ரோஸ்ட் !''

''இரண்டு நெய் ஊத்தப்பம்!''

''பூரி குருமா ஸ்பெஷல்!''

''லைட் காப்பி டபிள்!''

''எக்ஸ்ட்ரா டபிள் ஸ்ட்ராங் ஒன்று!''

இப்படி சர்வர்கள் குரல்.

அப்போது ஹோட்டலில் கொள்ளையடித்தால் கூட யாருக்கும் தெரியாது.

ஆறரை மணி

ஒரு வயதான கிழவர் உள்ளே சாப்பிட்டு விட்டுப் பில்லுடன் புறப்படுகிறார்.

சர்வர் ஒருவர் வேகமாக வந்து முதலாளியின் காதுகளில் ஏதோ சொல்கிறார்.

கல்லாப் பெட்டியில் உட்கார்ந்திருந்த முதலாளி அந்த சர்வர் சொன்னதைக் கேட்டு, ''நீ போ, நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்கிறார்.

அந்தக் கிழவர் பில் ஒன்றையும் இருபத்தி ஐந்து பைசாவையும் வைக்கிறார்.

பில்லையும் கிழவரையும் முதலாளி பார்க்கிறார். ''இருபத்திஐந்து பைசாவுக்குத் தானே சாப்பிட்டீர்கள்?''

கிழவர் ''ஆமாம்'' என்கிறார்.

''அரை மணி நேரத்துக்கு முன்பு இங்கு நுழைந்தீர். இருபத்திஐந்து பைசாவுக்குத் தானா சாப்பிட்டீர்?''

''ஒரே ஒரு காப்பிதான் சாப்பிட்டேன். உங்க ஹோட்டலில் ஒரு கப் காப்பி சாப்பிட இவ்வளவு நேரமாகிறது. நல்ல சுறுசுறுப்பான சர்வர்களைப் போடுங்கள்.''

''உங்கள் யோசனைக்கு நன்றி. காப்பி தவிர வேறு ஒன்றும் சாப்பிடவில்லையா?''

''இல்லை.''

''இதோ பனியன் மேல் பூரி கிழங்கு கொஞ்சம் சிந்தியிருக்கிறதே?''

''உங்க சர்வர்கள் ஓடி ஓடி வருகிறார்கள். டிபன் தட்டுக்களில் டிபனுடன் ஓடி வரும் போது வழியில் உள்ளவர்கள் மேல் அதில் இருப்பது மேலே சிந்திவிடுகிறது.''

''அப்படியா? இந்தப் பனியன் பாக்கெட் அருகில் காணப்படும் சாம்பார் கறைகூட அப்படித்தானா?''

''அதுவேதான். என் மேஜையில் சாப்பிட்ட ஒருவருக்கு ஒரு இட்லிக்குச் சாம்பார்

பரிமாறும்போது சர்வர் செய்த அபிஷேக தீர்த்தம். இப்படி அவசரம் அவசரமாய் சர்வ் செய்யும் சர்வர்கள் ஹோட்டலுக்கு வருபவர்கள் மேல் அபிஷேகம் செய்தால் உங்கள் கடைக்கு வாடிக்கை குறையும்.''

''சற்று முன்பு இந்த ஹோட்டல் சர்வர்கள் சுறுசுறுப்பாய் இல்லை என்றீர்கள். இப்போது ரொம்பவும் சுறுசுறுப்பாய் இருப்பதாய்ச் சொல்கிறீர்கள். எதை நம்புவது?''

''இந்தச் சர்வர்களைக் கண்காணிக்க ஒருசில மேஸ்திரிகளை நியமியுங்கள். எங்கேயாவது ஒரு சர்வர் தூங்குவதும் ஒருவன் அதிகச் சுறுசுறுப்பாய் ஓடி டிபன் தட்டு காப்பி டம்ளரை எதிரில் வருபவர் மேல் மோதிக் கீழே கொட்டி உங்களுக்கு நஷ்டம் உண்டாக்குவதும் குறைந்து விடும். தங்களை எப்போதும் இரண்டு கண்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றன என்பதும் அவர்களுக்குப் பயமாயிருக்கும்.''

''சர்வர்களை மட்டும் கவனிக்க ஆள் போட்டால் போதுமா?''

''போதுமே.''

''அத்துடன் கூட்டம் அதிகமாய் இருக்கும் போது உள்ளே போய் ஸ்வீட், காரம் என்று வயிறு புடைக்கச் சாப்பிட்டு விட்டுப் பில்லை வாங்கிக் கொண்டு முன் பக்கம் வந்து உட்கார்ந்து, 'ஒரு ஸ்ட்ராங் காப்பி' என்று ஆர்டர் கொடுத்து காப்பி சாப்பிட்டு விட்டு இருபத்தி ஐந்து பைசா பில்லை வாங்கிக் கொண்டு அந்தப் பில்லைக் கவுண்டரில் கொடுத்து விட்டுப் பெரிய மனிதர் போலும் ஹோட்டலை விட்டு வெளியேறும் உம்போன்ற எத்தன்களையும் கண்டுபிடித்து மானத்தை வாங்கவும் தனியாகச் சிலரை நியமிக்கப் போகிறேன். அவர்களின் கழுகுக் கண்களில் இருந்து உங்களைப் போன்ற பெரிய மனிதர்கள் தப்பவே முடியாது.

''உங்களைப் போன்றவரைப் போலீசில் ஒப்படைக்க மாட்டேன். கடைப் பையன்கள் இருவர் மத்தியில் உம்மை நடக்க வைத்து இந்த ஊர் ஹோட்டல் ஒன்று பாக்கி விடாமல் உம்மை அழைத்துப் போய், 'பெரிய மனிதர்' என்று அறிமுகப்படுத்துவோம்.''

''செய்யுங்களேன். என்னிடம் ஏன் சொல்கிறீர்? நான் அப்படிச் செய்தால்தானே உம்மிடம் பயப்பட? நான் சாப்பிட்டது ஒரு காப்பி — அதற்கு பில் இருபத்தைந்து பைசா.''

''நீங்கள் என்னிடம் பயப்பட வேண்டாம். ஆனால் உமது பனியன் உள்ளேயே இருந்து கொண்டு வெளியே வரவும், கேஷ் கவுண்டரில் செலாவணியாகவும் பயப்படும் அந்தப் பில்லை மட்டும் கொடுத்து விடும்.''

கிழவர் முகம் பேயறைந்தது போல் ஆகி விட்டது. பில்லை வெளியே எடுத்துக் கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.

எடுத்துக் கொடுத்தார் கிழவர். பில் தொகை ரூ. 1—05.

ஒரு ஸ்வீட், ஒரு மசால் தோசை, இரண்டு வடை ஆகியவைகளின் கிரயம் அந்தப் பில்.

''உமக்கு 1-05 பில்லைக் கொடுத்ததுமே சர்வர் வந்து சொல்லி விட்டார். அதன் பின் கால் மணி கழித்து இருபத்தி ஐந்து பைசா பில்லுடன் வந்தீர்..

'பரவாயில்லை. நீர் வயதானவர். உம்மை இத்துடன் விட்டேன். இனிமேல் வந்தால் ஒழுங்காய்ச் சாப்பிட்டு விட்டுச் சரியான பில்லைக் கொடுத்து விடும். பில்லில் கண்ட தொகை இல்லாவிட்டால் ஒளிவு மறைவு இன்றிச் சொல்லி, கையில் இருப்பதைக் [illegible] போதும். பொசுங்கிப் பிழைப்பதை விட இந்தக் கொடுமையை 'சொல்லி [illegible] பிழைப்பர்.

''இந்தாரும் நீர் கொடுத்த இருபத்தி ஐந்து பைசாவும். இன்று உம் டிபன் செலவு என்னுடையதாய் இருக்கட்டும்.''

கிழவர் போய்விட்டார்.

முதலாளி எதிர் மேஜைகளில் முன்னால் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களிடம் ''பார்த்தீர்களா ஸார்......பெரிய தர்கள்!'' என்று சொன்னார்.

இரவு பத்து மணி

கடை கட்டியாகும் முதலாளி வீட்டுக்குப் போனார்.

''சித்தப்பா எங்கே?'' என்று மனைவியிடம் கேட்டார்.

''மொட்டை மாடியில் படுத்திருக்கிறார்.''

மாடிக்குப் போனார் முதலாளி.

''சித்தப்பா! உங்களுக்கு எப்படி நன்றி கூறுவது என்றே தெரியவில்லை சித்தப்பா.''

''என்னடா பையாகுட்டி! நான் என்ன செய்து விட்டேன் நன்றி கூறும்படி?''

''முள்ளின்மேல் வேஷ்டியை உலர்த்தி விட்டுக் கிழியாமல் எப்படி எடுப்பது என்று புரியாமல் விழித்துக் கொண்டிருந்தேன்.

''நம்ம ஹோட்டலில் ஒரு வாடிக்கைக் காரர்—அடுத்த ஒரு மாத காலமாய் வருபவர்—தினமும் ஆறரை மணி சுமாருக்கு வருவதும் உள்ளே போய் ஒரு ரூபாய் ஒன்றரை ரூபாய் என்று சாப்பிட்டுவிட்டு ஹோட்டலில் உள்ள கூட்ட நெரிசலைப் பயன்படுத்திக்கொண்டு முன் மேஜையில் வந்து உட்கார்ந்து ஒரு காப்பி என்று ஆர்டர் கொடுத்து விட்டுச் சாப்பிட்டு விட்டுப் போய்க் கொண்டிருக்கிறார். பத்து நாட்கள் முன்புதான் அவர் செய்யும் மோசடி தெரிந்தது. அவரைக் கண்டிக்க முடியவில்லை. காரணம் அவர் ஓர் உத்தியோகஸ்தர். அவரை நான் பகிரங்கமாகக் கண்டித்தாலோ, பலர் முன்பு இப்படிச் செய்யலாமா என்று கேட்டாலோ, அவர் அடிபட்ட பாம்பாகச் சீறி விழுவார். புரியும்படி சொல்கிறேனே — அவரை விரோதம் செய்து கொண்டு நான் தொழில் நடத்த முடியாது. எனது தொழிலுக்கும் அவர் உத்தியோகத்துக்கும் தொடர்புண்டு. பரவாயில்லை. அவர் வரும்போது எல்லாம் காப்பி டிபன் இனமாய் சப்ளை செய்துவிடலாம் என்று நினைத்தேன். ஏமாறுவதைவிட மன்தார இனமாகக் கொடுத்தாவது திருப்திப்படலாம் என்று நினைத்தேன்.

''ஆனால் உத்தியோக வட்டாரத்தில் அவர் மிக்க நேர்மையானவர் என்று பெயராம்.

ஆனால் அவர் செய்து வரும் இந்தக் காரியத்தைப் பிறர் அறிய மாட்டார்கள்.

''அவர் இப்படிச் செய்கிறார் என்று நான் சொன்னால் மற்றவர்கள் வேண்டுமென்றே சொல்வதாய்ச் சொல்வார்கள். என்னை நம்ப மாட்டார்கள்.

''இதிலிருந்து எப்படி மீளுவது என்று அவித்தவனுக்குத் தாங்கள் ஒரு நாடகமாடி வழிகாட்டி விட்டீர்கள். இல்லாவிட்டால் ஒன்று நான் தினமும் வியாபாரத்தில் நஷ்டப்படவேண்டும், அல்லது அவருடன் விரோதம் செய்துகொண்டு பல இடைஞ்சல்களுக்கு ஆளாக நேரிடும்.''

''பின்னே என்னடா, பையாக்குட்டி! கிராமத்தில் ஐம்பது வருடங்களாய் ஹோட்டல் நடத்துகிறேன். இதில் இல்லாடி நான். நான் நடத்துகிற ஹோட்டலிலே இப்படி எவ்வளவோ ஸ்பூன், சின்னத் தட்டு இவைகளை அமுக்கிக் கொண்டு போவார்கள் சிலர். இந்த மாதிரி நம்ம ஹோட்டல் பையன்களில் ஒருவனையே திருடச் சொல்லி அவனைப் பலர் முன் கண்டித்தேன். இப்போது எந்தத் திருட்டுமே கிடையாது. நான் வேண்டுமானாலும் சொல்கிறேன் பார்த்துக்கொள். நாளை முதல் அந்த உத்தியோகஸ்தர் சரியான பில்லைக் கொடுத்துவிட்டு மிச்ச சில்லறையைக் கூட வாங்காமல் 'பரவாயில்லை மூன்று நான்கு பைசாதானே வேண்டாம்' என்று போய் விடுவார். நீ நேற்றிரவு இதைச் சொன்னதும் நானே இன்று ஆறரை மணிக்கு வந்து அவர் செய்து வருவதையே நான் செய்வதாயும் சர்வரிடம் என்னை முன்னதாகவே அடையாளம் காட்டு என்றும் சொன்னேன். நான் வரும்போது அந்தப் பேர்வழியும் டிபன் சாப்பிட வந்தார். ரொம்பவும் நல்லதாய்ப் போச்சு.''

''அதனால்தான் ஆறரைக்கு உங்களை வரச் சொன்னேன். ஆறரை மணிக்கு அவர் தினமும் கண்டிப்பாய் வருபவர். இன்றும் அவர் வந்தார். உள்ளே டிபன் சாப்பிட்டு விட்டு வெளியே என் மேஜை எதிரில் உட்கார்ந்து காப்பிக்கு ஆர்டர் கொடுத்துக் கொண்டிருந்தார்.

''நல்ல வேலை. அவரையும் பகைத்துக் கொள்ளாமல் அவருக்கும் ஒரு பாடம் கற்பித்தாகி விட்டது.''

அதே சமயம் தன்னுடைய வீட்டில் அந்த உத்யோகஸ்தர் மனத்துள் சொல்லிக்கொண்டார்: ''சேச்சே! இது ரொம்பவும் அவமானம். இன்று இந்தக் கிழவர் செய்ததைத் தான் நான் தினமும் செய்து வருகிறேன்.

''நல்ல வேளை, நான் பிடிபட்டிருந்தால் என் அந்தஸ்து என்னவாகி யிருக்கும்!


''மற்றபடி உத்தியோக வாழ்க்கையில் நேர்மையானவன் என்று பெயர் எடுத்தும் சிறு வயதிலிருந்தே இப்படிப்பட்ட கெட்ட பழக்கத்துக்கு அடிமையாகிவிட்ட எனக்கு இதிலிருந்து மீளவே முடியவில்லை.

இந்த நிகழ்ச்சி மட்டும் என் எதிரே நடக்காமல் இருந்திருந்தால் நானும் இந்தக் கிழவர்போல் ஒரு நாள் அவமானப்பட்டிருப்பேன்.

இந்த நிகழ்ச்சி என் கண் முன்னே நடந்து கொண்டிருக்கும்போது என்னை இவ்வளவு காலம் அடிமைப்படுத்திக் கொண்டிருந்த அந்தப் பலவீனம் என் உடலை விட்டு வெகு வேகமாய் ஓடிக் கொண்டிருந்தது.

ஓடினது ஓடியதுதான்.
இனி அது திரும்பியே வராது.
அந்தத் திடசித்தம் எனக்கு உண்டு.
வாழ்க அந்தக் கிழவர்!

ஸ்ரீராமநவமி 15–4–70 பாராயணத்துக்கு நாம ராமாயண புஸ்தகம்



ஸ்ரீராம நவமி உத்ஸவ புண்ணிய காலத்தில் ''நாம ராமாயணம்'' பாராயணம் செய்ய அபிப்பிராயம் உள்ள பக்தர்களுக்கு விநியோகிக்க ஆலய நிர்வாகிகள், அர்ச்சகர்கள், பஜனை மடம் நிர்வாகிகள், ஸ்ரீராம நவமி உத்ஸவக் கமிட்டி நிர்வாகிகள், ராம கதை பிரசங்கங்கள் செய்பவர்கள் முதலானவர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி மேற்கண்ட புஸ்தகத்தை விநியோகம் செய்ய விரும்பினால் அவரவர்களுக்கு புஸ்தகங்கள் அனுப்ப உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

1. அந்தந்த இடங்களில் தரிசனத்துக்கு வருகிறவர்களிடம் நிர்வாகிகள் புஸ்தகம் ஒன்றுக்கு இரண்டு பைசா வீதம் விற்க வேண்டும்.

2. ஸ்ரீராம நவமிக்கு மறுநாள் பட்டாபிஷேகத்தன்று புத்தகம் விற்ற தொகையைக் கொண்டு வடை, பாயஸம் ஸ்ரீராமருக்கு நிவேதனம் செய்து ஸ்ரீ ஆஞ்சனேய ஸ்வாமிக்கும் வடை மாலை சாத்த உபயோகிக்க வேண்டும்.

3. அவரவர்களுக்கு உத்தேசமாக எவ்வளவு புஸ்தகங்கள் தேவைப்படும் என்னும் விவரம் தெரிவிப்பதுடன் புஸ்தகங்கள் அனுப்பும் செலவையும் சௌகரியப்பட்டால் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பும்படி கோரப்படுகிறது.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய விலாசம் : மானேஜர், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் சங்கராசார்ய ஸ்வாமிகள் மடம், நெ. 1, சாலைத் தெரு, காஞ்சிபுரம் - 2.

கார்ன் ப்ராடக்ட்ஸ் தேர்ந்தெடுத்த

பரிசு-பெற்ற பக்குவமுறை

ராஸ்பெர்ரி

(அனுப்பியவர் : குமாரி கட்டி ஜோசி

பிரவுன் & போல்ஸன்

வெரய்டி கஸ்டர்டு பவுடர் கொண்டு தயாரிக்கப்பட்டது



இழைவிலும், வளப்பத்திலும், மென்மையிலும் சிறந்தது பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு. பல்வேறு வகையான புட்டிங்குகளையும், தின் பண்டங்களையும் தயாரிக்க எப்போதும் உங்கள் வசம் பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு பவுடர் இருக்கட்டும். இது அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப் படுத்தப் பட்டதால், வெரய்டி கஸ்டர்டு பவுடர்களில் மிகவும் சிறந்தது.

பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு பவுடர் சைவ உணவுக்குக் குந்தகமற்றது—முட்டை கலவாதது.



ஒவ்வொரு பேகிலும் 6 இனிய சுவைகள்.

க்ரீம்

(... என்ஜினியர், தாதர், பம்பாய்-14)

பக்குவ முறை:

- 1 பேக்கெட் பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு பவுடர் (ராஸ்பெர்ரி சுவை)
- 3 முட்டைகள்
- 85 கிராம் சர்க்கரை
- ½ லிட்டர் பால்
- 133 கிராம் க்ரீம்
- ½ டீஸ்பூன் ராஸ்பெர்ரி எஸென்ஸ்

1. பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு பவுடரை (ராஸ்பெர்ரி சுவை) சிறிது குளிர்ந்த பாலுடன் கலவுங்கள்.
2. முட்டைக் கருக்களைப் பிரித்தெடுங்கள். சர்க்கரையுடன் கடைந்து, கஸ்டர்டு பவுடரில் கலவுங்கள்.
3. பாலைக் கொதிக்க வையுங்கள். அடுப்பிலிருந்து இறக்கி, கஸ்டர்டு பவுடர் கலவையைச் சேர்த்து, கிளறிக் கொண்டே இருங்கள். தாழ்ந்த நெருப்பில் சமைத்து, கெட்டியாகும் வரை தொடர்ந்து கிளறுங்கள். ராஸ்பெர்ரி எஸென்ஸை சேருங்கள்.
4. க்ரீம் மற்றும் கும்பமாக 1 டீஸ்பூன் சர்க்கரையை ஐஸில் கெட்டியாகும் அளவுக்குக் கலவுங்கள்.
5. முட்டையின் வெள்ளைக் கருவை கெட்டியாகக் கடைந்து, க்ரீம் மற்றும் தயாரிக்கப்பட்ட கஸ்டர்டுடன் கலவுங்கள். பரிமாறுமுன் ரெப்ரிஜரேட்டரில் குளிர வையுங்கள். (இப் பக்குவ முறைக்கு பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு பவுடர் திறுசுகளில் மற்றெந்த சுவையையுங்கூட உபயோகிக்கலாம்)

வாசகர்கள் கவனிக்க

எங்கள் பக்குவமுறைப் போட்டிக்குக் கிடைத்த அமோக ஆதரவு காரணமாக தற்போதைய திட்டத்தில் பிப்ரவரி 1970-க்குப் பிறகு கிடைக்கப் பெறும் பக்குவ முறைகளை ஏற்றுக் கொள்ள முடியாததற்கு வருந்துகிறோம்.

இலவசம்! புதிய பக்குவ முறை நூல் நெ. 2. இன்றே ஒரு பிரதிக்கு எழுதுங்கள்.

தயவு செய்து எனக்கு ஒரு பக்குவ-முறை நெட்டை ஆங்கிலம் / இந்தி / வங்காளம் / தமிழ் / தெலுங்கு / மலையாளம் / குஜராத்தி / மராத்தி / கன்னடத்தில் இலவசமாக அனுப்பி வைக்கவும்.

பெயர் ....

முகவரி ....

....

இக் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புக: பப்ளிஸிடி டிபார்ட்மெண்ட், கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி, (இந்தியா) பிரை. லிட். ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1. (பி.ஆர்).

K-6

இதுபோல் இன்னும் பலவகையான தின்பண்டங்களைத் தயார் செய்து உங்கள் குடும்பத்தினரை மகிழ்விக்கலாம். பின்வரும் இதழ்களைக் கவனித்து வாருங்கள்

கார்ன் பிராடக்ட்ஸ் கோ.(இந்தியா) பிரைவேட் லிட்.

ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்—1. (பி ஆர்).

மொத்த விற்பனை ஏஜெண்டுகள்: பாரி & கம்பெனி, டேர் ஹவுஸ், சென்னை-1. மற்றும் அவர்களது கிளைகள்

Bensons/3640 T.M

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1947)

"வீணு விகார்" — 17-A, :.பிளாங் ரோடு,
ஷண்முகானந்தா ஹாலுக்கு அருகில்
சயான் (கிழக்கு) பம்பாய்-22. D. D.
டெலிபோன்: 471455
தபால் பெட்டி 6759 : : தந்தி: "GROWRICH"

ஏப்ரல் 1970க்குரிய கீழ்க்கண்ட புதிய குருப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

ஏலம் கேட்ட பிறகு டிவிடெண்டு அடையும் வசதியுள்ள கீழ்க்கண்ட குருப்புகள்

குறுகிய காலம்: 25 மாதங்கள்			நீண்ட காலம்: 40 மாதங்கள்		
சேருவதற்கு கடைசி தேதி: 11-4-1970			சேருவதற்கு கடைசி தேதி: 25-4-1970		
முதல் ஏலத் தேதி: 12-4-1970			முதல் ஏலத் தேதி: 26-4-1970		
வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
	ரூ.	ரூ.		ரூ.	ரூ.
B	100/-	2,500/-	E	500/-	20,000/-
C	50/-	1,250/-	F	250/-	10,000/-
F	25/-	625/-	G	125/-	5,000/-
G	20/-	500/-			

நீண்ட காலம்: 50 மாதங்கள் - ஏலம் எடுக்காத சீட்டுதாரர்களுக்கு மட்டும் டிவிடெண்டு உண்டு.

சேருவதற்கு கடைசி தேதி: 18-4-1970 – முதல் ஏலத் தேதி: 19-4-1970

வகுப்பு	தவணை ரூ.	சீட்டுத் தொகை ரூ.
LTA	100/-	5,000/-
LTB	50/-	2,500/-
LTD	20/-	1,000/-

வேலை நேரம்: காலை 8 மணி முதல் 10-30 மணி வரை
மாலை 4 மணி முதல் 7-30 மணி வரை

வார விடுமுறை: திங்கட்கிழமை

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:
"பாலுஸேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, தபால் பெட்டி 414, சென்னை-5

கிளைகள்: பெங்களூர் – கல்கத்தா – புது டெல்லி

இலவச பிரசுரத்திற்கு எழுதுங்கள்

சீட்டுகள் ஒதுக்குதல் கம்பெனியின் உரிமையைப் பொறுத்தது

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

BBC - Kalki 100370

தெருக் கோடி வரை பார்வை ஓடிற்று. அதற்கு மேலே மனம்தான் ஓடலாம். தெரு அங்கே ஒரு வளைவு வளைந்து தென்வடலாய் மடிகிறது. அவன் தெற்கிருந்து வருவானு, வடக்கிருந்து வருவானு என்பது யாருக்குத் தெரியும்? யாருக்குத் தெரிய வேண்டுமோ, அவனுக்கே தெரியவில்லையே! வெறுமே வெறுமே பார்ப்பதும், கழுத்தை ஒடிப்பதும், பெருமூச்சு விடுவதும் — இதே கதையாகப் போய் விட்டதே !

புவனுவுக்குக் கழுத்து வலித்தது. இன்றைக்குத்தானு? என்றைக்குத் தாலி ஏறிற்றே, அன்றே வலி கண்டு விட்டது.... ஹும்... இப்படி ஆகும் என்று யார் எதிர்பார்த்தார்கள் ?

அவள் உதட்டைக் கடித்துக் கொள்கிறுள். அவன் வடக்கிலிருந்து வந்தாலென்ன, தெற்கிலிருந்து வந்தாலென்ன? வாழ்க்கை வடதுருவம் — தென் துருவமாய் ஆகிவிட்ட பிறகு அதற்கெல்லாம் அர்த்தமில்லை.

ஒரு முடிவுக்கு வந்தவளாய் மேஜையருகில் சென்றுள் அவள். நல்ல கருங்காலி மேஜை. விதம் விதமாய், நேர்த்தியாய் அவளுடைய அப்பா அவளுக்கென்று வாங்கிக் குவித்த திருமணச் சீர்களில் அந்த மேஜையும் ஒன்று. அதன் நான்கு கால்களிலும் அற்புதமான வேலைப்பாடுகள். மேஜையின் மேலே இரு மணப் புகைப்படம் தாங்கிய 'ஸ்டாண்டு'. வடக்கிலிருந்தோ தெற்கிலிருந்தோ வந்தவனுக அவன் அதில் காட்சி தரவில்லை. எங்கோ ஆகாசத்திலிருந்து குதித்தவனைப் போல, கந்தர்வனைப் போல, கம்பீரமாக இருக்கிறுன் ! அலட்சியமாக ஒரு சிரிப்பு. அது ஊரையே கொள்ளை கொண்டு போகிறது.

புவனு அவனைப் பார்க்கிறுள்.

பெருமூச்சு விடுகிறுள்.

பிறகு தீவிரமாய் எழுதத் தொடங்குகிறுள். வேறு யாருக்குத் தன் மனக் குறையைத் தெரிவித்து அவள் எழுத முடியும்? அப்பாவுக்குத்தான். மகள் சுவர்க்க போகத்தில் வாழ்வதாக இறுமாந்திருக்கும் அவருக்கு உண்மை தெரிய வேண்டாமா? எத்தனை நாளைக்குத்தான் மறைப்பது ? ஆயிற்று. நூறு நாட்கள் ஓடி விட்டன. தோல்வியை நோக்கி வாழ்க்கைச் சித்திரம் நூறு நாட்கள் வெற்றிகரமாக ஓடியிருக்கிறது. இதை அவர் அறிய வேண்டாமா?.... தவித்துப் போவார்தான்.... வாஸ்தவம்... அவள் என்ன செய்வாள் ? வேறு வழி இல்லையே !

"அப்பா! இவர் சுபாவம் எனக்குப் புரியவே யில்லை. நான் ஒருத்தி இங்கே இருப்பதாகவே இவர் எண்ணுவதில்லை. எதாகவலை படித்தவராக, எதையோ பறிகொடுத்தவர் போல் இருக்கிறுர்.... என்னுல் ஆனதெல்லாம் செய்து பார்த்து விட்டேன்.... அவருடைய கவனம் என் மேல் திரும்புமென்று தோன்றவில்லை. அப்பா, நான் இங்கே இனிமேலும் இருக்க விரும்பவில்லை. அங்கே ஏதாவது கம்பெனியில் வேலை பாருங்கள்.... படித்த படிப்பு அந்த வகையிலாவது என் மனக்கு அமைதியைத் தேடித் தரட்டும்...."

கடிதத்தை அத்தோடு நிறுத்தி விட்டு, புவனு கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

வாசலில் அதே சமயம் 'பட, பட' வென்று 'ஸ்கூட்டர்' வந்து நின்றது. அவன் வந்து விட்டான் !

மாடிப் படிகளில் 'சரக், சரக்' கேட்டது. நிதானமாகத்தான் அவன் ஏறி வருவான். அடுத்த அறை அவனுடையது. உடைமாற்றிக் கொண்டு கீழே பலகாரம் சாப்பிட வரப் பதினைந்து நிமிடங்களாவது ஆகும். காலணிகள் மூலையில் 'தொப்'பென்று விழும் சத்தம் கேட்கிறது. கோட்டைக் கழற்றி மாட்டுகிறுன். 'டை'யைப் பிரிக்கிறுன். 'உஸ்' என்ற சுவாசத்தோடு முகத்தைத் துடைத்துக் கொள்கிறுன். தண்ணீர்க் குழாய் சீறுகிறது. சோப்பின் நறுமணம் காற்றில் மிதக்கிறது. குழாய் வாயை மூடிக் கொள்கிறது. இப்போது மின்விசிறியின் 'ஙொய்' என்ற சத்தம்.

இது வீடு இல்லை. முடுக்கிவிட்ட இயந்திரம். இங்கே உள்ள சௌகரியங்கள் மனித

சீதனம்

ஏ.எஸ்.ராகவன்



னின் புற உலகை வளப்படுத்தப் பயன்படுகின்றன. அக உலகம் என்று ஒன்று உண்டு என்பது அவனுக்குத் தெரியுமோ, தெரியாதோ தெரியாமலா போகும்?... எல்லாம் தெரியும். தெரிந்தே வதைக்கிற நாடகம் இங்கே நடக்கிறது.

சாதாரணமாக அவன் வந்து விட்டால் பறபறத்து அவள் ஓடுவாள் கீழே. சமையற்கார மாமியை நம்பாமல் தானே பலகாரத் தட்டை எடுத்து மேஜையின்மேல் வைப்பாள். விசிறியைச் சுழல விடுவாள். கை துடைக்கத் துண்டை அருகில் வைப்பாள்.

இன்றைக்கு அவள் நகரவில்லை.

அடுத்த அறைக்குள் காதை வைத்தவளாய் அங்கேயே வீற்றிருந்தாள்.

அவன் மேஜையருகில் சென்றுன். 'பர்' ரென்று ஒரு காகிதத்தைக் கிழித்தான். ஏதோ எழுத ஆரம்பித்தான்.

வேடிக்கை! அவன் எழுதி முடித்த கடிதத்தின் தொடர்பாக அவனும் எழுத ஆரம்பித்திருக்கிறானே!.... இதிலாவது ஒற்றுமை இருக்கிறதே!

விநாடிகள் தேங்கித் தேங்கி நின்றன.

அவன் பரட்டென்று எழுதியதைக் கிழித்தான். தூர எறிந்தான். படபடவென்று படிகளில் இறங்கி விட்டான்.

புவனா எழுந்தாள். சத்தமின்றி வெளியே வந்தவள் அடுத்த அறைக்குள் எட்டிப் பார்த்தாள். மாடிப் படிகளில் கீழ் வரை ஒரு முறை பார்த்துக் கொண்டாள். சரேலென்று அறைக்குள் நுழைந்தே விட்டாள். திருமணமாகி ஒரே ஒரு முறைதான் அவள் அந்த அறைக்குள் நுழைந்ததே. அப்போது பட்ட அடி இன்னும் வலிக்கிறது. 'இது என் பிரத்தியேக அறை. மனிதனுக்குத் தனிமை அவசியம் என்பதை நம்புகிறவன் நான்.... தயவுசெய்து நீ இனிமேல் இந்த அறைக்குள் என் அனுமதியின்றி வரமாட்டாய் என்று நான் நம்பலாமா?' என்றான் அவன். அதன் பிறகு அவள் நுழைந்ததில்லை. இன்றைக்குத்தான் அவள் நுழைகிறாள்.

மேஜையின் கீழ் அந்தக் காகிதம் கசங்கிக் கிடந்தது. எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்ட புவனா வந்த சுவடு தெரியாமல் வெளியேறினாள்.

அறையைத் தாளிட்டுக் கொண்டு அந்தக் கடிதத்தைப் பிரித்தாள் அவள். நல்ல வேளை! இரண்டாகத்தான் கிழிக்கப்பட்டிருந்தது அது.

'உன்னை நான் விரும்பவில்லை... நடந்தது நடந்து விட்டது. பல படியாக என்னை உனக்குப் புரிய வைத்திருக்கிறேன் என்றே நம்புகிறேன்... நிம்மதியில்லாமல் இப்படியே எதற்காக வாழ வேண்டுமோ, எனக்குப் புரியவில்லை.....'

புவனாவின் கண்கள் அதற்கு மேல் பார்வையை இழந்தன. அவள் மனம்தான் பார்த்தது. பார்த்ததுதானா? இல்லை. இல்லை... அது மாடிப் படிகளில் இறங்கி, தெருவுக்கு ஓடி, வடக்குப் பக்கமாய்த் தலை தெறிக்க ஓடிற்று.... கடவுளே!

மேஜைக்குள் கடிதத்தை வைத்தாள் பிறகு. புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். ஒரு கவரை எடுத்து அதன் மேல் அப்பாவின் முகவரியை எழுதி, தன் கடிதத்தை வைத்தாள்

அடுத்த அறையில் மீண்டும் 'லொள்' சத்தம் கேட்கவே, அவன் வந்து விட்டான் என்பது தெரிந்தது.

மணி எட்டு. தபாலில் கடிதத்தைச் சேர்க்க இனி நேரம் இல்லை. காலையில்தான் ஆகும். பூகம்பம் இருபத்து நான்கு மணி நேரம்தான் நிகழட்டுமே! அப்பாவுக்கும் ஓர் இருபத்து நான்கு மணி நேர அமைதி வாய்க்கட்டுமே!

அவள் அங்கே இருக்க விரும்பாமல், கீழே வந்தாள்.

நடு ஹாலில் சோபாவுக்குக் கீழ் படுத்திருந்த 'டெரியர்' அவளைக் கண்டதும் 'லொள்' என்று குரைத்தது. அப்பாவின் சீதனங்களில் இதுவும் ஒன்று. அவருக்கு நாய்களிடம் அலாதி மோகம். அவனுக்கோ அந்த இனத்தைக் கண்டாலே பிடிக்காது. சின்ன வயதில் ஒரு நாள் மேஜர் வீட்டு நாய் அவனைத் துரத்துத் துரத்து என்று துரத்தியதிலிருந்து இந்த வெறுப்பு அவனையும் அறியாமல் வளர்ந்து விட்டிருந்தது.

'மூடு வாயை' என்று அதட்டினாள் புவனா.

அது மூடுவதாக இல்லை. ஹாலைச் சுற்றிச் சுற்றி வந்து, 'லொள், லொள்' என்று குரைத்தது.

சற்றைக்கு முன்னால் அவன் கீழிறங்கி வந்தானே, அப்போது இது வாயைத் திறந்ததோ? இப்போது என்ன வந்து விட்டது? நாய்கள் எஜமான விசுவாசமுள்ளவை என்கிறார்களே, அது உண்மையாக இருந்தால், அவளுக்காக அப்பாவால் அனுப்பப்பட்ட இந்த 'டெரியர்' அவளைப் பார்த்து இப்படிக் குரைக்குமா?

'ஜிலே.... ஷட் அப்...' அவள் கத்தினாள்.



ஊஹூம். அது காலைக் காலைத் தேய்த்துக் கொண்டு, பிராண்டிக் கொண்டு 'லொள், லொள்' என்றது.

புவனாவுக்கு வந்த கோபத்தில், தலையணை தான் கைக்குக் கிடைத்தது. எடுத்து வீசி எறிந்தாள். இந்த வீட்டுத் தலையணைகள் நாய்களுக்குத்தான் வாய்க்கு.

'டெரியர்' வலியைப் பொறுக்கமாட்டாமலோ அல்லது அவளோடு போராடுவது தன் ஆண்மைக்கு ஏற்றதல்ல என்று கருதியோ, வாசற் பக்கம் நடையைக் கட்டிற்று.

புவனா பின்பக்கம் சென்றாள்.

சமையற்கட்டு அமைதியாக இருந்தது. மேஜையின்மீது தட்டும், காப்பி தம்ளரும் அப்படியே இருந்தன.

''சாப்பிடுகிறியாம்மா?'' என்று சமையற்கார அம்மாள் கேட்டாள்.

''வேண்டாம்.... எனக்குப் பசியில்லை...'' என்றாள் புவனா.

மீண்டும் ஹாலில் டெரியரின் அட்டகாசம் ஆரம்பமாகி விட்டது. புவனாவுக்கு முகம் சிவந்து விட்டது.



''வாயையே திறக்காதம்மா.... இன்றைக்கு என்ன வந்து விட்டது அதற்கு?'' என்றாள் சமையற்கார அம்மாள்.

''பாவம், எத்தனை நாளைக்குத்தான் அதுவும் வாயைத் திறக்காமல் இருக்கும்?'' என்றான் இரு பொருள்பட. சொல்லிவிட்டு ஹால் பக்கம் வந்தான். அதே சமயம் அவள் கீழே இறங்கி வந்தாள். அவளைக் கண்டதும் அது வாலை ஆட்டிற்று. ''கிப் கோயட்... யூ ஆர் ஏ குட் பாய்!'' என்று அதைத் தட்டிக் கொடுத்தவாறே அவள் வெளியே சென்று விட்டாள்.

'டெரியர்' பாடு தேவலை. அன்பாக அதன் முதுகை அவள் தட்டுகிறாள். அருகில் நிற்கிறானே ஒருத்தி, தொட்டுத் தாலிகட்டியவன், அவனிடம் ஒரு வார்த்தை காணோம்!

புவனா பெருமூச்சு விடவில்லை. சிரித்துக் கொள்கிறான். எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு கட்டுவதாகத் தீர்மானித்து விட்ட பிறகு, இனியும் மருகிக் கொண்டிருப்பானேன்?

'ஸ்கூட்டரி'ன் படபடப்பு தெரு முனையில் ஓய்ந்தது. அந்த முனை வரையில்தான் எல்லாம். அதன்பிறகு தென்வடலாய்த் திருப்பம்.

டெரியர் மீண்டும் உள்ளே வந்துவிட்டது. அவளை வழி அனுப்பிவிட்டு. மீண்டும். தொடர்ந்து விட்டது 'ளொள், ளொள்'ளை. இதுவே அவளை இங்கிருந்து விரட்டி விடும் போலிருக்கிறதே! நல்லது கெட்டது இதற்கும் தெரிந்திருக்கிறதே! அறிவில்லாத ஜென்மம் என்று நினைத்தானே அதை!

சோபாவில் உட்கார்ந்தான் அவன். அப்படியே சாய்ந்தான்.

டெரியர் காலின் கீழ் நின்று குரைத்தது.

''சீ! என்னை நிம்மதியாக இருக்கவிடேன்!'' என்று சீறினான் புவனா.

அது விடுவதாக இல்லை.

''முதலில் இதைத் தொலைத்துத் தலைமுழுக வேண்டும்.... வீட்டுக்குள் நாய்களை வரவிடுவதே தப்பு.'' அவன் கத்தினான்.

அது தன் பிரத்தியேக உரிமை என்பது போல் டெரியர் சோபாவின் மீது ஏறி அமர்ந்து கொண்டதோடு நில்லாமல், அவனுடைய புடவைத் தலைப்பையும் பற்றி இழுத்தது.

''குற்றவாளியைக் கண்டுபிடித்து விட்டாய் அல்லவா?.... டேய், நீ புத்திசாலி.... நான்தான் குற்றம் செய்தவள்... அதை நீயும் புரிந்து கொண்டு விட்டாய். இந்த வீட்டுக்குள் நான் வந்தது முதல் குற்றம்... வந்தும் இன்னும் ஒட்டிக் கொண்டிருப்பது இரண்டாவது குற்றம்....'' அவள் அரற்றியே விட்டாள்.

டெரியர் புடவைத் தலைப்பை விடவில்லை. பற்றி இழுத்தது. புடவை மிஞ்ச வேண்டுமானால் அவள் எழுந்திருந்தே ஆக வேண்டும். வேறு வழியில்லை.

அது வாசற்புறமாக அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு ஓடிற்று. புவனாவுக்கு அதன் செய்கை புரியாமற் போனாலும் அது தன்னை எங்கோ அழைக்கிறது என்பது

மட்டும் விளங்கி விட்டது. பார்த்து விடலாமே! அது எங்கேதான் அழைத்துச் செல்கிறதோ, பார்த்து விடலாமே!

ஆளோடியைத் தாண்டி முன் ஹாலையும் தாண்டி வாசற்புறத்து அறை முன் அது நின்றது. புவனா அதன் அருகில் வந்ததும், அறைக் கதவை அது மோத ஆரம்பித்தது. அந்த அறைக்குள் அது என்ன காரணத்துக்காக மோதுகிறது? ஓ!... பிஸ்கோத்து வேண்டுமா?.... உள் அலமாரியில் அது இருப்பது தெரிந்த சங்கதி..... இதற்காகவா இத்தனை ரகளை !

புவனா அந்த அறையைத் திறந்தாள். பிஸ்கோத்து இல்லாமல் இந்தப் பிசாசு விடாது போலிருக்கிறதே !... ராம, ராம !

விளக்கைப் போட்டவள் திகைத்தே போனாள். அந்த அறைக்குள், கதவுக்குப் பின்னால் ஒண்டிக் கொண்டு, ஒரு பெண் நின்றாள்!

''யார் நீ?'' என்று கேட்டாள் புவனா.

அவள் சாவதானமாக, ''அவர் உனக்குச் சொல்லியிருப்பாரே !'' என்று பதில் கொடுத்தாள்.

டெரியர் 'ளொள் ளொள்' என்று குரைத்தது. அவள் மீது பாய ஆரம்பித்தது.

''அவர் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. இப்படி இந்த அறைக்குள் நீ இருப்பது அதிசயமாக இருக்கிறது.... பரவாயில்லை, நீ யாராக இருந்தாலும் எனக்கு அக்கறை இல்லை. தயவுசெய்து வெளியே வாம்மா....'' என்றாள் புவனா.

''அவர் எங்கே?'' அவள் கேட்டாள்.

''வெளியே போயிருக்கிறார்....''

''எப்போது வருவார் ?

''என்னிடம் ஏதும் சொல்லவில்லை அவர். வரலாம், வராமலும் இருக்கலாம்.... அது அவர் எந்தக் காரியத்துக்காக வெளியே போயிருக்கிறாரோ, அதைப் பொறுத்திருக்கிறது.''

''நீ சாமர்த்தியமாகப் பேசுகிறாய்.''

'' அப்படியா?''

டெரியர் இந்தச் சம்பாஷணையை ரசிக்காமல், அந்தப் பெண்மீது பாய்ந்தே விட்டது. 'ஆ, ஊ' என்று அலறிக் கொண்டு மிரண்டு அவள் நிலைகுலைந்து விழுந்தே விட்டாள். அந்த வேகத்தில் கைப்பை நழுவி விட்டது. டெரியர் ஒரே பாய்ச்சலில் அதைக் கவ்விக் கொண்டு ஓடிற்று வெளியே.

''பிடியுங்கள்.... அந்த நாயைப் பிடியுங்கள்.... ஐயோ, என் கைப்பை போய் விட்டதே !'' என்று பதறினாள் அந்தப் பெண்.

''அதில் சாக்லேட் பிஸ்கோத்து வைத்திருந்தீர்களா ? டெரியருக்குப் பிஸ்கோத்து என்றால் ரொம்பப் பிரியம்'' என்றாள் புவனா.

அந்தப் பெண் பல்லைக் கடித்தாள். ''கைப்பையில் பிஸ்கோத்துதான் வைத்திருப்பார்களா?.... நீ ஓர் அசடு.... வடிகட்டின அசடு....'' என்றவாறே நாயைத் தேடி ஓட ஆரம்பித்தாள். வாசலுக்கும் உள்ளுக்கும் மாடிக்குமாக மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடினாள். ஊஹூம்... டெரியர் போன மூலை தெரியவில்லை.

''போனால் போகட்டும்.... அந்த நாயை எனக்கும் பிடிக்காது....'' என்றாள் புவனா.

''பண நஷ்டம் எவ்வளவு என்று சொல்லம்மா. அதை நான் தந்து விடுகிறேன்.''

அந்தப் பெண் சிரித்தாள். விகாரமாகச் சிரித்தாள்.

''அது சரி.... நீ யார் என்று இன்னமும் சொல்லவே யில்லையே ?'' என்றாள் புவனா.

அவள் பதில் சொல்லவில்லை. சொல்லவே மாட்டாளோ ! புவனா அவளை நன்றாகப் பார்த்தாள். பார்க்க முயன்றாள். வயது இருபத்தைந்து இருக்கலாம். ஒரு நடிகைக்குரிய அலங்காரம். உதட்டுச் சிவப்பிலிருந்து கண்ணுக்குக் கல மை அப்பியிருந்தது வரை. தலையை அஜந்தாக் கொண்டையிட்டிருந்தாள். உடுத்தியிருந்த புடவை நைலான் ரகம். அதன் வழவழப்பைவிடக் கண்ணாடி போன்ற திகம்பர நிலை கண்ணைக் கூசிற்று. இவள் யார்? மூடிய அறைக்குள் என்ன செய்து கொண்டிருந்தாள்? யார் இவளை இங்கு மறைந்திருக்கச் செய்தார்கள் ?

''நான் யாரா?'' அவளே பேசலானாள். ''ரவிக்குத் தெரியும், நான் யாரென்று... உன்னைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு முன்னால், என்னிடம் அன்பாக இருந்தார் அவர்.... ஊஹூம்... அன்பாக இருப்பதாக நடித்தார். ஆண்களே இந்த ரகம்தான் என்பது எனக்குத் தெரியும். அவர்களை நம்பி விடக்கூடாது. நானும் ஜாக்கிரதையாகத் தான் பழகினேன். ஐயோ! அவர் எழுதின கடிதங்களெல்லாம் அந்தக் கைப் பையில் தானே இருக்கின்றன!.... போச்சே, எல்லாம் போச்சே....'' அவள் குரல் தடுமாறியது. தலையைப் பிய்த்துக் கொண்டாள். ''நாசமாய்ப் போன நாய் ? அது என்னை நொடியில் ஏமாற்றி விட்டதே!... இனிமேல் அவரிடம் போராட எனக்கு என்ன தடயம் இருக்கிறது?...'' என்று அவள் அழவே ஆரம்பித்து விட்டாள்.

புவனா வியப்பும் பீதியும் மேலிட அவளையே பார்த்தவளாய், மனத்தில் என்னென்னவோ கணக்குப் போட்டுக் கொண்டு, ஏதும் புரியாமல் வீற்றிருந்தாள்.

'டெரியர்' அந்தச் சமயம் பார்த்து வந்தது. பரம சாதுவாய், வாலை ஆட்டிக் கொண்டு.

பாய்ந்தாளே பார்க்க வேண்டும் ! டெரியர்கூட நடுங்கி விட்டது. அப்படி ஒரு பாய்ச்சல். ''என் பை எங்கே?.... யூ டர்ட்டி பிட்ச்....?'' கத்தலில் தொண்டை கிழிந்தது.

டெரியர் ஒரு வளைவு வளைந்து சோபாவின் பின்னால் ஓடி அவளுக்கு அழகு காட்டுவது போல், நாக்கை நீட்டி மூச்சு வாங்கலாயிற்று.

'' என் திட்டத்தில் மண்ணைப் போட்ட உன்னை என்ன செய்கிறேன், பார்...'' என்றவாறே அதன் மீது முக்காலியை எடுத்து வீசினாள் அவள்.

ஒரு பெண்ணுக்கு இத்தனை ஆத்திரம், வெறி வந்து புவனா பார்த்ததில்லை. விழி பிதுங்க அவளைத் தடுக்கப் போய், முழங்கையில் அடி வாங்கிக் கொண்டதோடு சரி. அந்த அடியால் முக்காலி குறி தவறிச் சோபா மேல் போய் விழுந்தது.

''என்னை ஏன் தடுக்கிறாய்?... நீ ஒரு வஞ்சகி.... அவனோடு சேர்ந்து கொண்டு நீயும் என்னை ஏமாற்றப் பார்க்கிறாய்! இந்த நாயை வைத்து என்னைக் கொள்ளை அடித்து

விட்ட திமிர்தானே உனக்கு?.... ஆனால் இந்த வனஜா மனசு வைத்தால், யூ வில் பி நோவேர்....." என்று கத்தினாள் அந்தப் பெண் — வனஜா.

புவனாவுக்கு அப்போதுதான் அவளுடைய உண்மை உருவம் விளங்கிற்று. இதுவரை அபலை என்றே எண்ணியிருந்தாள் அவளை. வஞ்சிக்கப்பட்டு விட்ட பேதைப் பெண் என்றே கருதியிருந்தாள். ஆனால் வஞ்சனையைக் கைப் பைக்குள் தாங்கிக் கொண்டு, இந்த வீட்டின் அறையில் யாரும் அறியாமல் பதுங்கியிருந்து, ரவியின் வாழ்வைக் குலைக்க வந்த பைசாசம் அவள் என்பது புரிந்த பிறகு..

நல்ல வேளை. ரவியே வந்து விட்டான்.

"ஓ! நீ இங்கே இருக்கிறாயா?" என்று கேட்டான் வனஜாவைப் பார்த்ததும்.

"வேறு எங்கே இருப்பேன் என்று எதிர் பார்த்தீர்கள்?" அவள் திருப்பிக் கேட்டாள்.

"அது உனக்கே தெரியும்...."

"ரவி, உங்கள் சாமர்த்தியம் இனி பலிக்காது.... எனக்கு ஒரு வழி செய்து விட்டுப் பிறகு சாவதானமாக நாம் பேசலாம்."

"உனக்கு வழி திறந்தே இருக்கிறது. வனஜா.... வாசல் கதவை யாரும் பூட்டவில்லை.... நீ வெளியே போவதை யாரும் தடுக்க மாட்டார்கள்."

"நான் ஏன் வெளியே போக வேண்டும்?"

"அதுவா?.... காரணம் தெரிய வேண்டுமா?...." அவன் சிரித்தான். "என் வாழ்க்கையில் ஒரு புயலை ஏற்படுத்தினாய் அல்லவா, அதற்காக.... வாழ்க்கை என்பது விளையாட்டில்லை, அது ஆழமான பொருள் உடையது. இரண்டு மனங்களின் சங்கமம் தான் உண்மையானது என்பதை எனக்குப் புரிய வைத்தாயல்லவா, அதற்காக...உன்னையும் நம்பி நான் கண் கெட்டுப் போனேனே, அதற்காக...."

"இது தெளிவா குழப்பமா, மிஸ்டர் ரவி?"

"சற்று முன் வரை குழப்பம்தான். இப்போதுதான் தெளிவு பெற்றிருக்கிறேன்.... வனஜா, உன் கைப் பையை நல்ல வேளையாக எடுத்து வந்தாயே, ரொம்ப நன்றி..... அதில் உள்ள கடிதங்கள் என்னிடம் பத்திரமாக இருக்கின்றன.... எங்கள் வீட்டு டெரியர் உன்னைக் காயப்படுத்தியிருந்தால், அதற்கான 'ட்ரீட்மெண்ட்' எங்கள் செலவில் நடைபெறட்டும்.... பில்லை அனுப்பி விடு...." அவன் எழுந்தான்.

"மிஸ்டர் ரவி, நீங்கள் ஏமாந்தீர்கள்.... உங்கள் கடிதங்கள் முழுதும் அதில் இல்லை.... இப்படி ஏதாவது நேர்ந்தாலும் நேரலாம் என்று முக்கியமான இரண்டு கடிதங்களை வீட்டில் தனியே எடுத்து வைத்திருக்கிறேன்.. அவை போதும் எனக்கு."

"ஓ! அப்படியா?... பாவம், உனக்கும் மீதம் ஏதாவது தேவைப்படுமே! இருந்து விட்டுப் போகட்டும்.... ஏன், இதில் உன்னுடையவைகூட வேண்டுமானால் எடுத்துக் கொள்ளேன்...."

புவனா தடுக்கப் போனாள். ரவி அதற்குள் எல்லாவற்றையும் கொடுத்தே விட்டான்.

வனஜாவுக்கு உற்சாகம் பிடிபடவில்லை. ரவி ஒரு பைத்தியக்காரன் என்று ஆரம்பத்திலேயே அவளுக்குத் தெரியாதா?

"ஆனால், வனஜா, இந்த ஒரே ஒரு கடிதத்தை மட்டும் உனக்கு நான் தரமாட்டேன்..... இது என்னிடம் இருந்தாக வேண்டும்...."

அவன் காட்டிய அந்தக் கடிதத்தைக் கண்டதும், வனஜாவின் முகம் வெளிறிவிட்டது. பாய்ந்து அதைப் பிடுங்க முயன்றாள். ரவி விலகிக் கொண்டு கர்ஜித்தான். "ஐ ஸே... யூ கெட் அவுட்...."

வனஜா தயங்கினாள். பல்லைக் கடித்தாள். வேறு வழியில்லை. மடமடவென்று அவள் வெளியேறினாள்.

எல்லாம் நாடகம் போல் நடந்து முடிந்து விட்டது.

"மாடிக்கு வருகிறாயா, புவனா?" என்று கேட்டான் ரவி.

அவள் பின்தொடர்ந்தாள்.

"புவனா! நீ புரிந்து கொண்டிருப்பாய்.... இவள் இத்தனை நாட்களும் என்னை நிழலாய் வதைத்து விட்டாள்.... தெரியாமல், புரியாமல் மயங்கிப் போயிருந்தேன்.... எப்படி மீள்வது என்று தெரியாமல் தவித்தேன்.... நல்ல வேளையாய் இன்று உன் 'டெரியர்' புண்ணியம் கட்டிக் கொண்டு விட்டது.... பாரேன், அவளுக்குக் கடிதம் எழுதி, எழுதிக் கிழித்துப் போட்டிருக்கிற குப்பையை...."

அட கடவுளே! அவர் எழுதிக் கசக்கி எறிந்த கடிதம் அந்த வனஜாவுக்குத்தானா?

"அது சரி... ஒரே ஒரு கடிதத்தை மட்டும் நிறுத்திக் கொண்டீர்களே கடைசியாய்.... அது என்ன?" என்று கேட்டாள் புவனா, தயங்கித் தயங்கி.

"நீயே பாரேன்...."

புவனா பார்த்தாள். சே! வனஜா ஒரு பெண்ணாக இருந்தால் இப்படி நாடகமாடுவாளா?.... யாரோ சேகர் என்ற ஒருவருக்கு, அவள் எழுதி வைத்திருந்த அப்பட்டமான காதல் கடிதம் அது.... நேற்றோ, முன் தினமோதான் எழுதியிருக்கிறாள். தபாலில் சேர்க்கவில்லை. சேர்த்திருந்தால் இவர் கைக்குக் கிடைத்திருக்குமா? சில கடிதங்களைத் தபாலில் சேர்க்காமல் இருப்பதால், எத்தனை லாபம்!

அடேடே, அவளும்கூட அப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்திருக்கிறாளே!

"எங்கே போகிறாய்?.... உன் அப்பாவுக்கு எழுதின கடிதம்தானே?... அது என்னிடம் பத்திரமாக இருக்கிறது....." அவன் சிரித்தான். "நீ மட்டும் என் அறைக்குள் புகுந்து எனக்குத் தெரியாமல் கசங்கின கடிதத்தை எடுத்து வைத்துக் கொள்ளலாமா?.... அதற்கும் இதற்கும் கணக்குச் சரியாகி விட்டது." அவன் உரக்கச் சிரித்தான்.

ஹாலில் டெரியர் 'ளொள், ளொள்' என்றது.

"பாவம், அதற்குப் பசி.... பிஸ்கட் கொடுத்து விட்டு வருகிறேன்....." என்று ஓடினாள் புவனா.

"புவனா, எனக்கும் கொள்ளைப் பசி...." என்று குழந்தை மாதிரி அவள் இடையைப் பற்றி இழுத்தான் ரவி.

இருவரும் சிரித்த சிரிப்பில் டெரியர்கூட வாயை மூடிக் கொண்டு மாடியைத் தீர்க்கமாய்ப் பார்த்தவாறே புரண்டு படுத்தது!

வட்ட மேஜை

பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் தேவகோட்டை ரஸ்தா ரயில்வே நிலையத்துக்கு ஒரு மைல் தூரத்திலுள்ள அனேத்திடல் என்ற இடத்துக்கு அருகில் ஒரு கூட்ஸ் ரயில் தடம் புரண்டதின் காரணமாக ஏற்பட்ட விபத்தில் ஏறக்குறைய இருபது வாகன்கள் சேதமடைந்தன. சேதமுற்ற வாகன்கள் அனைத்தும் விபத்து ஏற்பட்ட இடத்திலேயே அதே நிலையில் இன்னும் அகற்றப்படாமல் இருக்கின்றன. லட்சக் கணக்கில் மதிப்புள்ள பொதுச் சொத்து கேட்பாரற்றுக் கவனிப்பு இல்லாமல் பாதுகாப்பு இல்லாத இடத்தில் மாதக்கணக்காகக் கிடக்கின்ற நிலை பெரிதும் வருந்தத்தக்கது. சேதமுற்ற வாகன்களை அப்புறப்படுத்தி ரயில்வே பணிமனைக்கு அனுப்பி வைத்து ஆவன செய்து மீண்டும் உபயோகத்துக்கு லாயக்குள்ளதாக ஆக்குவித்தல் ரயில்வே அதிகாரிகளின் கடமை. தனியார் நிர்வாகத்தில் இத்தகைய கவனக் குறைவு நிச்சயம் ஏற்படாது என்று உறுதியாகச் சொல்லலாம்.

தேவகோட்டை
4-3-70 எஸ். கருணாநிதி

மார்ச் 1ந் தேதி கல்கி இதழில் பரிசு பெற்ற கடிதம் கண்டு உண்மையிலேயே மருத்துவத் துறைப் பணியாளர்களாகிய நாங்கள் வருந்தினோம். உண்மையான நிலையைப் பொது மக்கள் புரிந்து கொள்ளாது மருத்துவ மனையில் பணியாற்றுவோர் மீது இங்ஙனம் தவறான எண்ணம் கொண்டிருப்பது மிக வருந்தத் தக்கது.

பொதுவாகச் சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் ஏழை நோயாளிகள் அலட்சியமாக நடத்தப் படுகிறார்கள் என்று சந்தர்ப்பச் சூழ்நிலையை வைத்துத் தவறாக எடை போடுகிறார்கள். 100 படுக்கைகளே உள்ள ஆஸ்பத்திரிகளில் 150, 160 நோயாளிகள் சேர்க்கப்படும் நிலை உருவாகும்போது 100 நோயாளிகளுக்கு மட்டுமே உள்ள மருந்துகளையும் சாதனங்களையும் ஊழியர்களையும் வைத்துக் கொண்டு 150, 160 பேருக்கு வைத்தியம் செய்யும்போது பல தொல்லைகள் ஏற்படுகின்றன. குறைந்த ஊழியர்கள், குறைந்த அளவுள்ள மருந்துகள் இவற்றைக் கொண்டு நோயாளிகளைச் சரிவரக் கவனிக்க இயலவில்லை. அந்தக் காலத்தில் ஒரு ரூபாய்க்கு ஒரு தனி நபர் உணவு கொடுக்கப்பட்ட அதே முறை இன்றுவரை மாற்றப்படவில்லை. விலைவாசிகள் ஏறியுள்ள நிலையில் குறைந்த அளவு உணவே கொடுக்க இயலுகிறது.

டாக்டர்கள், 'படுக்கைகள் இல்லை, பிறகு சேர்த்துக் கொள்ளுகிறோம்' என்று கூறினால் 'பணம் கொடுத்தால்தான் பார்ப்பார்கள்' என்று பொதுஜனங்கள் தவறாக எண்ணுகிறார்கள். எல்லாத் தொழில்களிலும் போல் சில புல்லுருவிகள் இதிலும் இருக்கலாம்.

விலை மலிவாக மருந்துகள் சப்ளை செய்வோரிடம்தான் வாங்க வேண்டுமென்ற அரசாங்க உத்தரவு இருக்கிறது. அதனால் தரம் பாதிக்கப்படலாம். நூறு பேருக்கு வாங்கும் மருந்துகளை நூற்றைம்பது பேருக்குப் பகிர்ந்து தரவேண்டிய நிலை. மருந்துக் கலவைகள் கிட்டத்தட்ட ஒரே நிறத்தில் இருக்கும்போது அதை நோயாளிகள் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். இது மக்களிடையே உள்ள நம்பிக்கையின்மையைக் காட்டுகிறது. மக்களுக்கு வைத்தியம் புரிபவர்களிடம் நம்பிக்கை ஏற்பட அரசாங்கமும் உதவவேண்டும்.

ரா. ராஜேசுவரி முற்றும்
மன்னார்குடி. பெண் செவிலியர்,
2-3-70 அரசினர் மருத்துவ மனை

நான் ஒரு பி. எஸ்ஸி. பட்டதாரி. படித்து முடித்தவுடன் வேலை தேடிச் செல்லாமல் அதிக ஊதிய வேலையையும் வேண்டாம் என்று உதறித் தள்ளி எனக்குச் சொந்தமாக முப்பது ஏக்கர் நிலம் இருந்ததாலும் உணவு உற்பத்தியை அதிகரிக்க அரசு கேட்டுக் கொண்டிருந்தபடியாலும் நாட்டின் நலனுக்கு நம்மால் இயன்றதைச் செய்யலாம் என்ற எண்ணத்தில் விவசாயத்தில் ஈடுபட்டேன். இதுவரை எனது முப்பது ஏக்கரிலும் சராசரி வருட வருமானம் ஆறாயிரம் ரூபாய் கிடைத்தது. ''என்னுடைய உழைப்புக்கு மாதம் ஐந்நூறு ரூபாய் ஊதியம் கிடைக்கிறது. சொந்தப் பண்ணையில் வேலை செய்வதால் சுயேச்சையாக இருக்க முடிகிறது'' என்று எண்ணி மகிழ்ச்சியாக இருந்து வந்தேன். மாத வருமானம் ஐந்நூறு ரூபாயும் வீட்டுச் செலவுக்குப் போதுமானதாக இருந்தது. சிக்கனமாக இருந்ததால். ஆனால் அரசு இப்பொழுது உச்ச வரம்பைப் பதினைந்து ஏக்கராகக் குறைக்கத் தீர்மானம் செய்துள்ளது. இனிமேல் மாத வருமானம் சராசரி ரூ. 250தான் கிடைக்கும். அது என் குடும்பச் செலவுக்குக் கண்டிப்பாகப் போதாது. என்னோடு படித்து உத்தியோகம் பார்ப்பவர்கள் ஒரு முதலீடும் இன்றி மாதம் ஐந்நூறு ரூபாய்க்கு மேல் ஆயிரம்ரூபாய் வரை சம்பளம் வாங்குகிறார்கள். நாட்டின் முதுகெலும்பு என்று போற்றப்படும் விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கும் எனக்கு என் உழைப்புக்கு ஏற்ற வருமானம் கிடைக்காத வகையில் சட்டம் இயற்றப்படுகிறது. ஏன் இவ்வாறு நிலச் சொந்தக்காரர்களை மாத்திரம் அரசாங்கம் வதைக்கிறது?

மஞ்சக்குடி.
16-3-70 வி. ராஜகோபாலன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

